# நாட்டுப்பற்று

T14783
R005D07

க்டர் மு.வரதராசன்

T.14783

முதல் பதிப்பு : மார்ச்சு 1956
உரிமை ஆசிரியர்க்கு

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

## குறிப்பு

இந்தக் கட்டுரைகள் சென்ற சில ஆண்டுகளில் அவ்வப்போது பல இதழ்களில் வெளிவந்தவை. அந்த இதழாசிரியர்களின் உதவியை நன்றியுடன் போற்றி, இத் தொகுப்பை வெளியிடுகிறேன்.

மு. வ.

[இதன் வருவாய் முழுதும்
திரு. வி. க. பள்ளி நிதிக்கு உரியது.]

❋


| | | | |
|---|---|---|---|
| 1. | இன்றைய கடமை | ... | 5 |
| 2. | கோணல் வளர்ச்சி | ... | 12 |
| 3. | நோயும் மருந்தும் | ... | 17 |
| 4. | நல்ல பாடம் | ... | 29 |
| 5. | வராமல் காக்க | ... | 33 |
| 6. | எண்ணிப் பார்க்க | ... | 41 |
| 7. | பொது நோக்கம் | ... | 45 |
| 8. | அடிமை மனம் | ... | 50 |
| 9. | உரிமையின் அடையாளம் | ... | 57 |
| 10. | நம் குற்றம் | ... | 62 |
| 11. | உலகம் உண்டு ! | ... | 66 |
| 12. | எது கடமை ? | ... | 74 |
| 13. | அரசியல் தொண்டு | ... | 82 |
| 14. | சாட்டை | ... | 88 |
| 15. | பழம் பெருமை | ... | 97 |
| 16. | இடம் அறிதல் | ... | 103 |
| 17. | கையும் காசும் | ... | 113 |
| 18. | நொண்டி மாடு | ... | 124 |
| 19. | விதியிடம் முறையிடல் | ... | 132 |
| 20. | உட்பகை | ... | 139 |
| 21. | நாட்டுக்கு நல்லவர்கள் | ... | 144 |


❋

## 1. இன்றைய கடமை

விடுமுறை நாட்களில் ஊருக்குச் சென்று, மலையடிவாரத்தில் அமைந்துள்ள பெரிய குளத்தில் குளித்து மகிழ்வது வழக்கம். வழக்கம்போல் அன்று காலையில் நெடுநேரம் நீரில் விளையாடியிருந்தபின், கரையேறி உலர்ந்த துணிகளை எடுத்து உடுத்துக் கொண்டிருந்தேன். "வா தம்பி, சாப்பிடலாம்" என்று தென்கரையிலிருந்து ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். இன்னார் என்று தெளிவதற்குள், "நான் தான் தம்பி! சாப்பிட்டுப் போகலாம், வா" என்று மறுபடியும் அவர் அங்கிருந்தே கணீர் என்ற பெரிய குரலில் அழைத்தார். அவர் இன்னார் என்று அறிந்து கொண்டேன். "சாப்பிடுங்கள். இருக்கட்டும்" என்றேன்.

"வந்து போ, தம்பி! நாங்கள் குடிக்கிற கூழில் ஒரு வாய் குடிக்கக் கூடாதா? கொஞ்சம் சாப்பிட்டுப் போ, தம்பி" என்றார் மறுபடியும் அவர்.

"இருக்கட்டும், சாப்பிடுங்கள். நான் வீட்டுக்குப் போகிறேன்" என்றேன் மறுபடியும் நான்.

அவர் விடவில்லை. "கொஞ்சம் வந்து போ, தம்பி! அப்படிப் போவதைவிட, இப்படித் தென்

கரைக்கு வந்து போகக் கூடாதா?" என்று வற்புறுத்தி அழைத்தார்.

வேறு வழி இல்லை என்று தென்கரைக்குச் சென்றேன். நெருங்கும்போதே முக மலர்ச்சியோடு கனிவான குரலில் வரவேற்றார். "உன்னை விட்டு விட்டுச் சாப்பிடுவோமா, தம்பி! பலகாரம் காய்கறி ஒன்றும் இருக்காது எங்கள் சாப்பாட்டில். ஏழைகள் குடிக்கும் கூழ் உனக்குத்தான் தெரியுமே! ஊறு காயும் ஆகிவிட்டது. குழந்தை குட்டிகள் அதிகமாக இருக்கிற வீட்டில் ஊறுகாய் போட்டுவைத்தாலும் நிற்பதில்லை. வெங்காயம் இருக்கிறது; கடித்துச் சாப்பிடு தம்பி, கொஞ்சம்" என்றார்.

கேழ்வரகுக் கூழைக் கரைத்து எதிரே வைத்திருந்தாள் அவருடைய மருமகள். ஏழெட்டு ரூபாய்க்கு விற்கும் சாதாரணச் சிவப்புநிறப் புடைவை உடுத்திய அந்த ஏழைப் பெண்ணின் கண்களிலும் அன்பான வரவேற்பு இருந்தது. அந்தக் கூழை உற்றுப் பார்த்தேன். "கொஞ்சம் சாப்பிடுங்கள், மாமா" என்றது கபடமற்ற அந்த நங்கையின் வாய். "முன்னே தம்பிக்கு வார்த்துக் கொடு. அப்புறம் நான் சாப்பிடுவேன்" என்றார் அவளுடைய மாமனார்.

அதை ஏழைக்கூழ் என்று பார்த்து நான் தாழ்வாக எண்ணவில்லை. அவர்கள் காட்டிய அன்பு அந்தக் கூழை அமிழ்தமாக்கிவிட்டது. ஆனால் விடியற்காலம் முதல் ஏர் உழுது உழைத்து வந்து குளத்தங்கரையில் வாடி நிற்கும் அவருடைய வயிற்றுக்கே போதாதே, இதில் நானும் கொஞ்சம் குடித்து அவருடைய உணவைக் குறைப்பது தகுமா என்று எண்ணித் தயங்கினேன். "ஊறுகாயும் இல்லாமல் எப்படி அண்ணு கூழ் குடிக்கிறீர்கள்? எனக்கு வேண்டாம். நீங்கள் சாப்பிடுங்கள். நான் வீட்டுக்குப்

போய்ச் சாப்பிடுவேன் " என்று சொல்லி, அவரை மட்டும் குடிக்கச் செய்வது பெரு முயற்சி ஆயிற்று.

அவர் கூழ் குடித்தபோது நானும் எதிரே உட்கார்ந்து நிலபுலம் மக்கள் வருவாய் முதலியவை பற்றிக் கேட்கத் தொடங்கினேன். "உன்னை உட்கார வைத்துவிட்டு நான் மட்டும் சாப்பிடுகிறேனே " என்பதை ஒரு குறையாகச் சொல்லிக் கொண்டே, என் கேள்விகளுக்கு விடை கூறினார். அவர் என்னைவிட இருபது வயது பெரியவர். மூன்று பிள்ளைகள். இருவர் தனியே குடும்பம் வைத்து வாழ்கிறார்கள். மூன்றாவது பிள்ளையுடன் அவர் வாழ்கின்றார். அவனுடைய மனைவியே இப்போது கூழ் கொண்டு வந்தவள். எல்லோரும் உழவர்களே. "என் காலமெல்லாம் மண்ணிலேயே கழித்துவிட்டேன் " என்றார். "அப்படிச் சொல்லாதீர்கள். உங்கள் தொழிலைத் தான் ஔவையாரும் திருவள்ளுவரும் புகழ்ந்திருக்கிறார்கள் " என்றேன். "அப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால் அன்றாடம் கவலை; மழை இல்லாவிட்டால் கவலை; மாடு இறந்துவிட்டால் கவலை; வரி கட்டும்போது கவலை; பயிருக்கு நோய் வந்துவிட்டால் கவலை; குழந்தை குட்டிகளுக்கு நோய் வந்து விட்டால் மருந்து வாங்கப் பணம் இல்லை; இப்படிக் கழிகிறது எங்கள் காலம் " என்றார்.

"எவ்வளவு விளைகிறது? என்னென்ன விளைகிறது?" என்று கேட்டேன். நெல் இவ்வளவு கலம், கேழ்வரகு இவ்வளவு கலம், கம்பு இத்தனை கலம், சோளம் இத்தனை கலம் என்று என்னென்னவோ சொல்லிக்கொண்டு வந்தார். நன்செய் ஒரு காணியும் புன்செய் ஆறு காணியும் இருப்பதாகக் கூறினார். அவர் கலமாகக் கூறியவற்றை எல்லாம் ரூபாய்க் கணக்கில் கூட்டிப் பார்த்தேன். அவருடைய வருவாய்

சராசரி ஆண்டுக்கு முந்நூற்றைம்பது ரூபாய் ஆகும் என்று கணக்கிட்டு அறிந்தேன்.

அவரிடமிருந்து அன்போடு விடைபெற்ற பின், என்னென்னவோ எண்ணங்கள் என் மனத்தில் எழுந்தன. நகரங்களில் ஐம்பத்தைந்து வயது நெருங்கும் போதே பலர் வாழ்க்கைக்கு உதவாத கிழவர்களாக ஆகிவிடுகின்றார்கள். இந்த உழவர் அறுபத்தைந்து வயதை நெருங்கிய பிறகும் ஏரைப் பிடித்து நிலத்தில் உழைக்கின்றார். முயற்சியும் ஊக்கமும் இன்னும் தளரவில்லை. போதிய வருவாய் இல்லை என்று அறிந்தும் சோர்வோ ஏமாற்றமோ அடையாமல் உழைக்கின்றார். வோர்ட்ஸ்வொர்த் என்னும் ஆங்கிலக் கவிஞர் எழுதிய ('லீச் காதரர்' என்னும்) பாட்டு நினைவுக்கு வந்தது. அதில் அவர் காட்டும் முதியவன் ஒருவனுடைய உழைப்பு மனக்கண்ணில் வந்து நின்றது.

நகரத்தில் ஆண்டுதோறும் அல்ல, மாதந்தோறும் முந்நூற்றைம்பது ரூபாய் வருவாய் உள்ள குடும்பங்களில் இப்படிப்பட்ட அன்பான வரவேற்பும் விருந்தோம்பலும் காண முடியாது. ஆயிரம் ரூபாய் மாதச் சம்பளம் உள்ள குடும்பங்களிலும் "சாப்பிடுங்கள்" என்று அழைக்கும் குரலைக் கேட்பது அரிது. குறிப்பிட்ட சில நாட்களில் அச்சிட்ட வரவேற்புத்தாள் இருந்தால்தான் அந்த வீடுகளில் தேநீர் கிடைக்கும் என்று நம்பிக்கையோடு நுழைய முடியும். அந்த வரவேற்புத்தாளும் பழகிய எல்லோருக்கும் கிடைக்காது. நல்ல நிலையில் வருவாயும் பதவியும் பெற்றுச் சிறப்போடு வாழும் ஒரு சிலர்க்குத்தான் அச்சிட்ட அந்த வரவேற்புக் கிடைக்கும். அவர்களுக்கும் அந்த வீடுகளில் இப்படிக் கனிவான குரலில் வரவேற்பும் உபசரிப்பும் கிடைப்பதில்லை.

சமையல்காரனும் பரிமாறும் வேலையாளுமே அங்கே கூலிக்காக வரவேற்று உபசரிப்பார்கள். அந்த விருந்தும் காரணத்தோடு, உதவி எதிர்பார்த்து, அல்லது விளம்பரம் எதிர்பார்த்துக் கணக்கிட்டு நடப்பதுதான். ஏழை உழவராகிய இவருடைய கனிந்த அன்பை நகரத்தில் என்ன விலை கொடுத்தும் வாங்க முடியாது. இவருடைய வருவாயோ ஆண்டுக்கு முந்நூற்றைம்பது ரூபாய்; மாதத்திற்கு முப்பது ரூபாய் என்று சொல்லலாம். அதற்காக இவர் பனியிலும் வெயிலிலும் மாடுகளோடு மாடாக உழைக்கும் உழைப்போ சொல்ல முடியாதது. இவர் காட்டும் அன்போ கைம்மாறு கருதாதது; விளம்பரம் அறியாதது. இவர் யாரோ? நான் யாரோ? சாதி என்று கூறப்படும் அந்தப் போலிக் காரணமும் இவருக்கும் எனக்கும் இடையே இல்லை. தம்பி என்று அழைக்கின்றார். கிராமங்களில் இப்படி ஒருவரை ஒருவர் முறை சொல்லி அழைக்கும் வழக்கம் என்ன அன்பான வழக்கம்! வண்ணான் மாமன் என்று அழைப்பான். குருமான் அண்ணா என்று அழைப்பான். உழவன் தம்பி என்று அழைப்பான். வயதுக்கு ஏற்றபடி, குடும்ப வழக்கத்துக்கு ஏற்றபடி, ஒவ்வொரு முறை சொல்லிப் பழகும் பழக்கம் எவ்வளவு நாகரிகமானது! இவ்வாறு பற்பல எண்ணிக்கொண்டே வந்தேன்.

"சாப்பிடுங்கள்" என்று உழவர் அழைத்தது வெறும் பேச்சுக்கான உபசரிப்பு அன்று; உண்மையான கடமையுணர்ச்சியால் உந்தப்பட்டே அவ்வாறு அழைத்தார். பழகிய ஒருவர் கண்ணெதிரே இருக்கும் போது நாம் மட்டும் உண்ணுவது கூடாது என்ற மனச்சான்றுதான் அதற்குக் காரணம். இந்த மனச்சான்று, பிறர் பசியால் வருந்துமாறு அவர் உணவைப் பறிக்க இடம் கொடுக்காது; பிறர் பசித்திருக்கும்

போது அவர் எதிரே உண்ணவும் இடம் கொடுக்காது. இந்த இருவகைக் கொடுமைக்கும் இடம் தராத மனச்சான்று இன்று நாட்டுப் புறங்களின் மூலை முடுக்குகளில் மட்டும் உள்ளது. மற்ற இடங்களில், நகரங்களில், இந்த மனச்சான்று இல்லை; கதவை அடைத்துப் பிறர் காணுமல் உண்ணும் கல் மனப் பழக்கமே இன்று வளர்கிறது.

மனிதன் கூடி வாழப் பிறந்தவன். கூடி வாழ்வதற்கு உரிய பண்புகள் மனிதனுக்குத் தேவை. அந்த நல்ல பண்புகள் விளங்க வேண்டுமானுல், இந்த உழவனுடைய மனச்சான்று மங்காமல் காக்க வேண்டும். இல்லையேல், மனிதன் கல்மனம் பெறுவான்; பிறருடைய பசியைப் பற்றிக் கவலைப்படாத வன்னெஞ்சன் ஆவான்; மற்றவர்களைத் துன்புறுத்திப் பொருள் பறித்து அதில் இன்பம் காணும் கொடியவன் ஆவான்; இப்போதே ஆகிக்கொண்டுவருகின்ருன். இது தீமையான வளர்ச்சி. இவ்வாறு சமுதாயம் வளர்ந்து செல்லுமானுல், இதைக் காப்பாற்றச் சட்டமும் சர்வாதிகாரியும் தேவையாவார்கள். மனச்சான்று மங்கும் சமுதாயத்தில் சர்வாதிகார ஆட்சி தலையெடுக்கும்.

நாம் எதற்கு இடம்கொடுக்கின்ருேம், என்ன செய்கின்ருேம் என்று ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். நாடு என்பது வெறுங் கல்லும் மண்ணும் காடும் மேடும் அல்ல. நாடு என்பது மனிதனின் பண்பாடுகளுக்கு உறைவிடமாக விளங்க வேண்டும். இப்படிப்பட்ட பண்பாடுகளை நம் நாட்டில் இனி உண்டாக்கி வளர்க்க வேண்டியதில்லை. வளர்ந்துள்ள பண்பாடுகளை மங்காமல் மறையாமல் ஒதுங்காமல் காத்தால் போதும். கிராமங்களின் நிலைமையைச் சீர்ப்படுத்தி உழவர்கள் துன்புருமல் காப்பாற்றினுல்

போதும். நகர ஆடம்பரங்களுக்குக் கோடிக் கணக்கில் செலவாகும் பணத்தை நாட்டுப் புறங்களுக்குச் செல விட்டால் போதும். தொன்றுதொட்டு உழவையும் தொழிலையும்நம்பி வாழும் மக்கள் பட்டினியால் நலிந்து சாகாமல் காத்தால் போதும். தமிழ்நாட்டு நெசவுத் தொழிலாளரை வருவாய் அற்றவர்களாக்கிச் சிலரை மானம்கெட்ட பிச்சைக்காரராகவும் சிலரை மனச் சான்று கெட்ட போக்கிரிகளாகவும் மாற்றி அவர் களின் பண்பாட்டை அழித்தது போல், உழவர் பெரு மக்களையும் பட்டினி பஞ்சம் முதலிய கொடுமை களால் வாடச் செய்து பொல்லாதவர்களாக மாற்றி விடாமல் காத்தால் போதும். சுருங்கக் கூறின், வீணில் உண்டு களித்திருப்போர்க்கு உதவியான சலுகைகளைக் குறைத்து உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வாழ்வித்தல்இன்றைய கடமையாகும்.

## 2. கோணல் வளர்ச்சி

செடி நேராக வளர முயல்கின்றது: நேரே வளர வாய்ப்பு இல்லாமல் தடைப்படுத்தினல், வளைந்து கோணலாக வளர்கின்றது. செய்யும் தடையால் அதன் இயல்பான போக்கைக் கெடுக்க முடிகின்றதே தவிர, அதன் வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை. வளர்ச்சி, இயற்கையின் ஆணை.

மக்களின் உரிமை வாழ்வும் அப்படிப்பட்டதே. உரிமையோடு வாழ விரும்புவது இயற்கை. அதை எந்த அரசாங்கமும் எத்தகைய கடுஞ் சட்டமும் தடுக்க முடியாது. அடக்குமுறையைக் கையாளலாம்; ஆனால் அது மக்களின் வாழ்க்கைப்போக்கை மாற்றுமே தவிர, அவர்களின் உரிமை வேட்கையைத் தடுக்க முடியாது.

ஏழை மக்கள் வாழ்வுக்கு ஒரு தொழிலும் அதனல் வயிற்றுக்கு உணவு முதலியனவும் பெற்று வாழ முயல்கின்ருர்கள். அவர்களின் உரிமை வேட்கை இவ்வளவே. இந்த அடிப்படை உரிமையும் இல்லாமல் துன்புறும் நிலைமை அவர்களுக்கு நேரும்போது, அவர்கள் அடங்கி ஒடுங்கி அழிந்துவிடுவதில்லை. இந்த

உரிமைவாழ்வுக்கும் – வாழ்வுக்கு அடிப்படையான தொழில், உணவு, உடை, வீடு முதலியவற்றைப் பெற்று வாழும் எளிய வாழ்வுக்கும் – வழி இல்லாமல் அவர்களை ஒரு சமுதாயம் கைவிடுமானால், அப்போது அந்த ஏழை மக்கள் என்ன ஆகின்றார்கள் ? நல்லவர்களாய், மனச் சான்று உடையவர்களாய், நாட்டுக்கு உழைப்பைத் தந்து உதவ வல்லவர்களாய் வாழ விரும்பிய அவர்களின் போக்கு நேர்மாறாக-செடியின் கோணல்வளர்ச்சி போல் – மாறிவிடுகின்றது. ஏழை மக்களில் நல்லவர்கள் பொல்லாதவர்களாகிவிடுகிறார்கள் ; மனச்சான்று உடையவர்கள் மானம் கெட்ட போக்கிரிகளாகிவிடுகிறார்கள் ; நாட்டுக்கு உழைத்து உதவ வல்ல தொழில்கருவிகளை ஏந்தியவர்கள் கொலையும் கொள்ளையும் செய்பவர்களாக ஆகிவிடுகிறார்கள். நேர் வளர்ச்சி இல்லாமற்போகின்றது ; கோணல் வளர்ச்சி ஏற்படுகின்றது. வளர்ச்சியை, அடியோடு ஒழிக்க யாராலும் முடிவதில்லை.

ஏழைமக்கள் இவ்வாறு கொடியவர்களாக மாறுவதற்கு யார் காரணம் ? ஏழைமக்கள் பொல்லாதவர்கள், நன்றிகெட்டவர்கள், பண்பாடு இல்லாதவர்கள் என்று அவர்களைப் பழிப்பது அறியாமை ; அறியாமை மட்டும் அன்று ; இரக்கம் அற்ற கொடுமையுமாகும். நல்லவர்களாக இருந்த அந்த மக்களைப் பொல்லாதவர்களாக ஆக்கும் குற்றம் எவரைச் சாரும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நேர்மையான நல்ல நெறியில் வாழ விரும்பி முயன்ற அவர்களைத் தடுத்துக் கெடுப்பவர்கள் யார் ? ஏழை மக்கள் தொழில் இல்லாமல் தெருவில் அலையும்போது, வீட்டில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து இரக்கமில்லாமல் அவர்களைப் பார்த்துக் கிடப்பவர்கள் ; ஏழை மக்கள் வயிற்றுக்கு உணவு இல்லாமல் வாடும்போது, புளியேப்பப் பெரு

மக்களை அழைத்து ஆடம்பர விருந்து நடத்திக் களிப் பவர்கள் ; ஏழைமக்கள் மானத்தை மறைக்கக் கந்தல் உடுத்தித் திரியும் காலத்தில், பட்டும் பொன்னும் சுமந்து செல்வத் திருமேனியராய்க் காட்சி அளிப்பவர் கள் ; ஏழை மக்கள் குந்தக் குடிசை இல்லாமல் வானமே கூரையாய் வரப்பே தலையணையாய்க் கிடக் கும்போது, கலைக்கூடங்களாய் வீடும் வாயிலும் அமைத்துப் பஞ்சணையில் புரண்டவாறே அவர்கள் செய்த தீவினையே அவர்களை ஏழைகளாக்கியுள்ளது என்று தங்கள் நல்வினையை நினைந்து இரக்கம் இல் லாமல் காலம் கழிப்பவர்கள் ; ஏழை மக்களின் வீட் டுக் குழந்தைகள் அரிச்சுவடி படிக்கவும் பலகை புத்தகம் வாங்கவும் பள்ளிக்கூடத்தை எட்டிப் பார்க் கவும் வழியற்று வாடும்போது, அவர்களைப் பற்றிய சிந்தனையும் இல்லாமல் தங்கள் மக்களைப் பல்வகைப் பல்கலைக் கழகங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப் பிப் பயிலச்செய்து அவர்களுக்கு ஆயிரம் இரண் டாயிரம் சம்பளத்தில் பெரும் பதவிகள் வாங்கித்தரக் கோட்டை கட்டுபவர்கள் ; ஏழை மக்கள் பற்பல நோயால் வாடித் தெருக்களில் நடைப் பிணங்களாய்க் காணப்படும்போது அவர்களின் அறியாமை சுகா தாரம் இல்லாமை என்று பல காரணங்கள் கூறிப் பழித்துவிட்டு, தங்களுக்குச் சிறு தலைவலி வந்தாலும் உடனே சிறந்த மருத்துவரையும் உயர்ந்த மருந்துகளை யும் நாடும் தன்னலத்தினர். இவர்களே ஏழைமக் களின் கோணல் வளர்ச்சிக்குக் காரணமானவர்கள் ; இவர்களே உழைத்து வயிறு வளர்க்க முயன்ற ஏழை மக்களைப் பொல்லாதவர்களாக மாற்றிக் கெடுக்கக் காரணமானவர்கள்.

இவர்கள் நல்ல நிலையில் வாழக்கூடாது என்பது கருத்து அன்று ; தம்போல் இந்த நாட்டில் பிறந்தும்

மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளும் பெருமல் வாடும் ஏழைமக்களின்மேல் இரக்கமே இல்லாமல் புறக்கணித்துத் தாம் மட்டும் வாழ முயலும் குற்றமே இவர்கள் செய்யும் பெருங்குற்றம். பசித்து வாடும் ஏழைகளின் முகத்தைப் பார்த்து, இவர்களின் பசிதீரும் காலமே நல்லரசு நிலவும் காலம் என்று உணர்ந்திருக்கலாம் ; ஏழைகள் தொழில் இல்லாமல் திரிவதைப் பார்த்து, பிறவி எடுத்த இவர்களுக்கு வாழ உரிமை தரும் சமுதாயம் மலர்வது எந்தக் காலம் என்று எண்ணியிருக்கலாம் ; அறியாமையால் ஏழை மக்கள் துன்புறும்போது, இவர்கள் எல்லோரும் விலங்குகளாய் வாழாமல் கல்வி அறிவு பெற்று மக்களாய் வாழ்வதற்கு நம்மால் இயன்றதைச் செய்யாமல் நாம் மட்டும் நலமுற்று வாழ முயல்கிறோமே என்று குறை உணர்ந்து வருந்தியிருக்கலாம். இவ்வாறு உணரவும் எண்ணவும் வருந்தவும் மனம் இல்லாமல், ஏழை மக்களையே குறை கூறிப் பழித்துவிட்டு, தாங்கள் மட்டும் இன்ப வாழ்க்கை தேடுவதே பெருங் குற்றமாகும்.

உலகத்தை உய்விக்க வந்த பெருமக்கள் எவரும் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை; ஏழைகளை எண்ணி உணர்ந்து உருகி, அவர்களின் உயர்வுக்காகத் தொண்டு செய்யத் தலைப்பட்டார்கள். காந்தியடிகள் அரசபோகத்துடன் வாழ்க்கை நடத்தியிருக்கலாம். ஆனால் ஏழை மக்களைப் பற்றி உணர்ந்து உருகிய காரணத்தால் ஏழ்மைக் கோலத்தையே மேற்கொண்டு எளிய வாழ்க்கை நடத்தினார். அப்படிப்பட்ட பெருமக்கள் பிறக்கும் காரணத்தால்தான் ஏழைமக்களில் இன்னும் நல்லவர்கள் பலர் இருக்கக் காண்கின்றோம். இல்லையேல் எல்லோரும் பொல்லாதவர்களாக மாறியிருப்பார்கள்.

அத்தகைய சான்றோர் ஒருசிலர் பிறந்து தொண்டு செய்வது மட்டும் போதாது. அவர்கள் கண்ட கனு நிறைவேறி நாட்டில் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழிய வேண்டும். அதுவரையில் நல்ல நிலை காண முடியாது; அதுவரையில் கோணல் வளர்ச்சி இருந்துவரும்.

# 3. நோயும் மருந்தும்

இந்தியா என்றால் உழவர் நாடு என்றுதான் சொல்லவேண்டும். தமிழ்நாடு என்றாலும் அப்படித் தான். இந்த நாட்டில் பெரும்பாலான மக்கள் கிராமங்களில் உழவுத் தொழில் செய்து வாழ்கின் றவர்கள். மக்கள் தொகையில் முக்கால் பங்கு உழவர் கள் தொகையாக இருக்கின்றது. ஆகையால், இந்த நாடு முன்னேறுகின்றது என்றால், அது உழவர்களின் முன்னேற்றத்தைப் பொறுத்ததே ஆகும். இந்த நாடு சீரழிந்திருக்கின்றது என்றாலும், உழவர்கள் குடிக்கும் கஞ்சிக்கும், கட்டும் துணிக்கும் வழியில்லாமல் ஏங்கு கின்றார்கள் என்பதே பொருளாகும்.

இந்த நாட்டின் பெரிய விழா பொங்கல் விழா ஆகும். பொங்கலை நோக்கும்போது மற்றவை கள் எல்லாம்—தீபாவளி முதல் விநாயக சதுர்த்தி வரையில்—எல்லாம் சில்லறைப் பண்டிகைகளாகும். தீபாவளியும் இன்னும் சில பண்டிகைகளும் கொழுத்த செல்வர்கள் மட்டுமே கொண்டாடத் தகுந்த பண்டிகைகள். நாள்தோறும் செய்யும் பாலு

மாகச் சோறும் பலகாரமுமாக உண்டு வெறுத்தவர்கள், புதுவகையான பலகாரங்களைச் செய்து வழிபடுகின்ற பண்டிகைகள் அவைகள். பெட்டிக்குள்ளே அடங்கிக் கிடந்த பொன் நகைகளுக்கும், பட்டாடைகளுக்கும் வெளியே வந்து போகும் வாய்ப்பைத் தரும் பண்டிகைகள் அந்தச் சில்லறைப் பண்டிகைகள்.

நாட்டுப்புறத்து மக்கள்—இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் – மற்றவர்களின் ஆடம்பர வாழ்வுக்காக வியர்வை சிந்தி உழைக்கும் உழைப்பாளி மக்கள்—மனமாரக் கூடி மகிழ்ந்து கொண்டாடும் பெரிய விழா பொங்கலே ஆகும். இது தான் நாட்டுக்குப் பொதுவாக உள்ள விழா. இந்த உழவர்களின் விழாவில் வெட்ட வெளியில் பாலும் அரிசிச் சோறும் பொங்குவதைக் காணலாம். செல்வர்களின் ஆடம்பரப் பலகாரங்களுக்கு இதில் இடமில்லை. இந்தத் திருநாளில் புதிய மண்பானைகள் சிறப்புப் பெறுவதைக் காணலாம். பொன் தட்டுகளுக்கும் வெள்ளிக் கலங்களுக்கும் இதில் இடம் இல்லை. புதிய பருத்தியாடைகள் மகிழ்ச்சியோடு அணியப்படுவதைக் காண்பது இந்தப் பொங்கல் விழாவே ஆகும். பட்டாடைகளுக்கும் பகட்டு நகைகளுக்கும் இதில் இடம் இல்லை. இவற்றிற் கெல்லாம் அடிப்படையான காரணம் என்ன?இந்தப் பொங்கல் உழைப்பாளிகளின் திருநாள்; உழைப்பு அற்றவர்களின் பெருநாள் அல்ல; இந்தப் பொங்கல் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் பாட்டாளிகளின் திருவிழா; வீணில் உண்டு களித்திருப்போரின் வெறு விழா அல்ல. இந்த அருமைப் பொங்கல் பிறர் வாழப் பாடுபடும் பெருமக்களின் மகிழ்ச்சிப் பொங்கலாகும்; பிறரை ஏய்த்தும் ஏமாற்றியும் வாழும் சில மக்களின் ஆடம்பரப் பொங்கல் அல்ல.

வெள்ளையடித்த வீடு, திறந்த வாசல், புதிய அடுப்பு, மண்பானை, புதிய அகப்பை, தூய பால், புதிய அரிசி, புதிய காய்கறிகள், புதிய பருத்தி ஆடை இவை எல்லாவற்றிற்கும் உயிர் அளிக்கும் உழவர்களின் புதிய மனம், பொங்கலின் சிறப்புக்களாகும். பால் பொங்க, அரிசி உலை பொங்க, உழவர்களின் மகிழ்ச்சியும் பொங்கும் இந்தத் திருவிழாக் காட்சியே நாட்டின் முன்னேற்றத்திற்கு உண்மையான அறிகுறியாகும்.

பிறர் உழைப்பால் வாழும் மக்கள் ஆடம்பரமாக எத்தனையோ பண்டிகைகள் கொண்டாடிச் செருக்குற்று வாழ இந்த நாடு இடம்தருகின்றது. ஆனால் வஞ்சம் இல்லாமல், தந்திரம் இல்லாமல், கரவும் இல்லாமல், உண்மையாக உழைத்து உழைத்து ஓயும் உழவர்கள் கொண்டாடும் ஒரு பெரும் பொங்கல் குறை இல்லாமல், உண்மையான மகிழ்ச்சியோடு கொண்டாடப்படுகின்றதா? பெரும்பாலான மக்களின் பொங்கலை—எளிய வகையில் நடைபெறும் இந்தப் பொங்கலைச் சீரோடு கொண்டாடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றதா?

உழவனுக்கு ஆயிரம் தொல்லைகள்; ஆயிரம் இடர்கள்; ஆயிரம் இன்னல்கள். உழவன் உழைத்து உழைத்து ஓய்கிறான்; உழைப்பின் பயனைப் பெற முடியாமல் திகைக்கிறான். உழைத்து முடிந்தபின் களஞ்சியங்கள் குறையாக இருப்பதையே காண்கின்றான்; மனைவிமக்களுக்குப் போதுமான ஆடைகள் இல்லாததைக் காண்கின்றான்; குடியிருக்கும் குடிசையும் சீரில்லாமல் பாழ்படுவதைக் காண்கின்றான்; இவற்றிற்காகப் போராடவோ, போராட்டத்தைப் பற்றி எண்ணவோ தனக்கு வல்லமை இல்லை என்பதையும் உணர்கின்றான்; இறுதியில், இதுதான் நாம்

கேட்டுவந்த வாழ்வு, இதற்குமேல் வழி இல்லை என்று அடங்குகின்றான்.

இப்படிப்பட்ட உழவன் இன்று கொண்டாடும் பொங்கல் வெறுஞ் சடங்குதான். இந்தப் பொங்கலில் உயிர் இல்லை; உணர்ச்சி இல்லை. இவனை இந்த நிலையில் விட்டுவிட்டு மற்றவர்கள் ஆடம்பரமாகச் செய்யும் ஆரவாரம் எல்லாம் வீண் ஆரவாரமே.

இதுவே முடிவு அல்ல; அறிஞர்களும் தொண்டர்களும் உலகத்தில் உள்ள வரையில் உழைப்பாளிகளைத் தாழ்த்துவதும் முடியாது. உண்டு களிப்பவர்களை உயர்த்துவதும் முடியாது.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்

என்று பாரதியார் பாடியது வெறும் பாட்டளவில் நின்றுவிடுவதற்காக அல்ல. அது உணர்ச்சியுள்ள பாட்டு; மற்றவர் மனத்தில் எண்ண அலைகளை எழுப்பும் பாட்டு. எண்ணத் தெரியாத பலரும் இந்த வந்தனையையும், நிந்தனையையும் எண்ணத் தொடங்கி விடுவார்கள். இந்த எண்ணமெல்லாம் என்றேனும் துணிவாகும்; துணிவு செயலாகும். இன்று பாட்டளவில்–ஒலியளவில்–நிற்கும் வந்தனையும் நிந்தனையும் ஒரு காலத்தில் சட்டமுமாய்விடும்.

அதற்கு உரிய மாறுதலை இப்போதே காண்கின்றோம். வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அரசாங்கத்தால் பல கட்டுப்பாடுகள் உண்டாகின்றன; ஆனால் உழவர்கள் கிணறு வெட்டுவதற்கு அரசாங்கமும் ஒரு பங்குப் பணம் உதவுகின்றது. பெருஞ் செல்வர்களுக்கு வருமான வரி முதலான பலவும் பெருகு

கின்றன ; மற்ற நாடுகளில் உள்ளதுபோல் சொத்து வரி – மரணவரி – என்பதும் இங்கு ஏற்பட்டு விட்டது. ஆனால் உழவர்களுக்கோ உள்ள வரியும் குறைக்கப்படும் காலம் நெருங்குகின்றது. அவர்களை நசுக்கி வந்த ஜமீன்தாரி முறையை ஒழிக்கச் சட்டமும் பிறந்துவிட்டது. இவைகள் எல்லாம் வந்தனைக்கும் நிந்தனைக்கும் அமைத்த படிகள். 'உழவன் வாழ்க' என்று வெறுங் கூச்சல் இடுவதும் வந்தனை அல்ல. 'உண்டு களிப்பவன் வீழ்க' என்று கொக்கரிப்பதும் நிந்தனை அல்ல. அவையெல்லாம் வாய்ச்சொல் வீரம்

உண்மைத் தொண்டர்கள் செய்யும் வந்தனையும் நிந்தனையும் செயலாக மாறி உருப்படும். அதுதான் சட்டங்களைக் கொண்டு செய்யும் சீர்திருத்தம்.

இங்கே உழவன் நன்மையைக் கருதும்போது சில காணி நிலங்களையோ பல வேலி நிலங்களையோ உரிமையாக வைத்துக்கொண்டு, ஆள் வைத்து உழச் செய்துவிட்டு, அறுவடைக் காலத்தில் முன்னே நிற்கும் செல்வர்களைப் பற்றிக் கருதக் கூடாது. நிலத்தில் உழுது பயிரிட்டு உழைத்து வாழும் உழவனுடைய நன்மையையே கருத வேண்டும்.

அந்த உண்மையான உழவன் நிலைமை என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டும். கால மழை பொழிந்தாலும், ஏரி குளம் நிறைந்தாலும், விலைவாசி ஏறினாலும், அவன் மட்டும் பயனடைகின்றானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். வெளியுலகில் எத்தனை மாறுதல் ஏற்பட்டாலும், அந்த உழவனுக்கு மட்டும் பொத்தல் குடிசையும், சுவையற்ற கூழும், கந்தை யாடையுமே என்றும் காத்திருப்பது ஏன் என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

மழையும் விலையும் நல்ல நிலையில் இருக்கும் காலத்தில் அவன் வருவாயும் செலவும் என்ன என்று

ஆராய வேண்டும். மற்றக் காலத்து வரவுசெலவு பற்றியும் ஆராய வேண்டும். இவ்வளவும் ஆராய்ந்தால் அவனுடைய வாழ்க்கையில் உள்ள உண்மையான இடையூறு இன்னது என்று விளங்கிவிடும்.

புட்டி 50 ரூபாய் என்று நெல் விற்கும்போது எருதுகளின் விலையும் மற்றச் செலவினங்களும் குறைவாகவே இருக்கும். புட்டி 150 ரூபாய் என்று விற்கும்போதோ எருதுகளின் விலையும் ஏறிவிடும்; மற்றச் செலவினங்களும் மூன்று நான்கு பங்கு ஆகிவிடும். மழை தக்கபடி பெய்து துணை செய்தபோது, தானியங்கள் மிகுதியாக விளைந்து விலை குறைந்துபோகும்; அதனால் உழவன் வருவாய் குறையும். மழை வளம் குறைந்தபோது தானிய விளைவும் குறைந்துவிடும்; அப்போது விலைவாசி ஏறி யிருந்தாலும், மழை இல்லாமல் தானியம் குறையும் காரணத்தால், வருவாய் குறைந்தே நிற்கும். ஆகையால் ஒரே ரப்பர்த்துண்டை நீட்டியும் குறுக்கியும் மாற்றுவது போல், உழவன் வாழ்க்கையை உலகம் மாற்றிவருவதாகத் தோன்கின்றது. ஆனால் உண்மையை நோக்கினால், ரப்பர்த் துண்டும் நீளவில்லை; உழவன் வாழ்க்கையும் உயரவில்லை. விலைவாசி ஏறும், இறங்கும். மழைவளம் மிகும், குறையும். ஆனால் உழவனுடைய கஞ்சியும், கந்தலும், குடிசையும், கடனும் பழையபடியே இருக்கக் காணலாம்.

இதற்குக் காரணம் என்ன? உழவன் வாழ்க்கை அவனளவில் நிற்கவில்லை. அவன் பயிரிட்டு விளைத்த பொருள் வியாபாரியிடம் விலையாக வேண்டும். அப்போது வியாபாரி தன் கடமையைச் செய்துவிடுகிறான். விற்ற பணத்தைக்கொண்டு தன் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை உழவன் வாங்க வேண்டும் அல்லவா? அப்போதும் அவன் வியாபாரியிடமே செல்ல

வேண்டும். அந்த இரண்டாம் முறையும் வியாபாரி தன் கடமையைத் தவறாமல் செய்கின்றான்.

வியாபாரியின் கடமை என்ன? உழவனிடம் குறைந்த விலைக்கு வாங்க வேண்டும்; விற்கும் பொருள்களை மிகுந்த விலைக்கு விற்க வேண்டும். முன்னே ஒருவகைச் சுரண்டல்; பின்னே ஒருவகை உறிஞ்சல். புட்டி நெல் 50 ரூபாய் விற்கும் காலத்திலும், அல்லது 150 ரூபாய் விற்கும் காலத்திலும் இந்த இரண்டு கடமைகளையும் தவறாமல் செய்கின்றான் வியாபாரி.

இப்படி உழவனை இரு புறமும் தட்டித் தட்டி மட்டுப்படுத்தும் ஆற்றல் வியாபாரியிடம் உள்ளது. ஆகையால் வியாபாரி உள்ள வரையில் உழவன் உயர முடியாது. ஒன்றுக்குப் பத்தாக விளைந்தாலும் சரி, அல்லது ஒன்று பத்தாக விலை ஏறினாலும் சரி, உழவன் வாழ்க்கை வியாபாரிக்கு இரையாகும் வாழ்க்கையாக உள்ளது. இந்தக் குறையைப் போக்காமல் உழவனை உயர்த்த முயல்வது, வேர்ப்புழு வாழ இடம் கொடுத்து விட்டுப் பயிரைக் காப்பாற்ற முயல்வது போல் ஆகும்.

இந்தக் குறையைத் தீர்ப்பது அரசாங்கத்தின் முதல் கடமையாகும். தீர்க்கும் வழிகள் இரண்டே.

ஒன்று, உழவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்து ஒற்றுமையாக இருந்து தானியங்களைத் தக்க விலைக்கு விற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். உழவர்கள் கூட்டுறவு என்பது இன்னும் இந்த நாடு காணாத புதுமையாக உள்ளது. ஆனால், வியாபாரிகளோ முயற்சியில்லாமலே ஒற்றுமையாக இருக்கின்றார்கள். அவர்களுக்குள்ளும் பிணக்கும் பிளவும் உள்ளன. ஆனால், உழவனை உறிஞ்சுவதிலும் சுரண்டுவதிலும் மட்டும் அவர்கள் எப்படியோ ஒற்றுமையாகவே இருக்கின்றார்கள். எல்லோரும் கட்டாக இருந்து

குறைந்த விலைக்கு வாங்குகின்றார்கள். இது உழவனிடமிருந்து தானியங்களை வாங்கும்போது காண்பது. உழவனுக்கு வேண்டிய பொருள்களை விற்கும் போதும், அவர்கள் கட்டாக இருந்து மிகுந்த விலைக்கு விற்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒற்றுமை உழவர்களிடம் ஏற்படும்படியாக அரசாங்கம் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் துணைசெய்ய வேண்டும்.

இரண்டாவதாக, வியாபாரத்தைத் தனி மனிதர்களின் கையில் விடாமல் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். "ஆசைக்கோர் அளவில்லை" என்பது அரசாங்கமும் உணர வேண்டிய உண்மை மொழியாகும். தனி மனிதர் வியாபாரம் செய்யும்போது, அவர்கள் தங்கள் ஆசைக்கு ஏற்றபடி பொருள்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு, காலம் வரும் வரையில் மறைத்து வைத்திருந்து, நாட்டில் பஞ்சத்தையும் குறையையும் உண்டாக்கிவிட்டு, விலை ஏறியபோது விற்றுப் பணம் திரட்ட முயல்கின்றார்கள். அவர்கள் அவ்வாறு செய்வதற்கு இடம் கொடுப்பதால், கூட்டுறவுச் சங்கங்களும் பயனில்லாமல் போகின்றன. எப்படியும் மிகக் குறைந்த விலைக்கு வாங்கிச் சில மடங்கு மிகுந்த விலைக்கு விற்க முயலும் வியாபார முறை தலையிடாமல் காப்பாற்றினால், விலை ஏற்றமும் இறக்கமும் தாறுமாறாக நடக்காது. உழவனை உறிஞ்சுவோரும் இல்லாமல் சுரண்டுவோரும் இல்லாமல் வாழ வைக்க முடியும்.

இந்த இரண்டுமே நேரான வழிகள்; உண்மையான மருந்தும் இவைகளே. இவற்றைச் செய்து முடிக்கின்ற வரையில், எவ்வளவு உதவினாலும் ஊக்கம் கொடுத்தாலும் உழவன் பழையபடி வறியவனாகவே கஞ்சிக்கும் கந்தைக்கும் குடிசைக்கும் ஏங்கி நைந்துகொண்டே இருப்பான்.

இந்த இரண்டில், முன்னதைச் செய்வது எளிமை; பின்னதைச் செய்வது கொஞ்சம் அருமை. அதுவும் போர்க்காலத்து அனுபவத்தால் செய்யக்கூடிய தாகவே தோன்றுகின்றது. பங்கீடு (ரேஷன்) முறை வைத்த பிறகு, அரசாங்கம் வியாபாரத்தில் தலையிட நேர்ந்தது அல்லவா? அரசாங்கத்தார் தலைமை வியாபாரிகளாக இருந்துகொண்டு நடத்தினர்கள் அல்லவா? அதையே தொடர்ந்து – ஆனல் ஊழலும் லஞ்சமும் இடம் பெருத வகையில்–விரிவாக்கிச் செய் தால் போதும். மெல்ல மெல்ல வியாபாரம் அரசாங் கத்தின் கைக்கு வந்துவிடும்.

அரசாங்கமா, வியாபாரத்தை ஏற்று நடத்துவதா என்று அஞ்ச வேண்டியதில்லை. வேறு வழி இல்லை. இந்த மருந்தைக் கொடுக்க இன்று தயங்கலாம்; நாளை யும் தயங்கலாம். ஆனல் இந்த நாட்டின் நோயைத் தீர்க்க இதைவிட வேறு வழி இல்லை. நோயோ முற்றி வருகின்றது. நாடோ பலவகையிலும் குழம்பிவரு கின்றது. எவ்வளவு விரைவில் நோயையும் மருந்தை யும் ஆராய்ந்து பயன்படுத்துகின்றேமோ அவ்வளவும் நல்லது. காலம் தள்ளத் தள்ள, கலக்கமும் பெருகிக் கொண்டு போகும். ஆகையால் முந்திக்கொள்வதே கடமை.

வியாபாரம் என்பது என்ன? விளையும் இடத் திலிருந்து சேர்த்துவைத்து வேண்டிய இடத்திற்குப் பங்கிட்டு கொடுத்தல்—அவ்வளவுதானே! இதை அரசாங்கம் செய்ய முன்வந்தால் எவ்வளவோ நன்மை உண்டு. நாட்டின் நோய்—உழவர்களின் உயிரை வதைக்கும் நோய் தீரும்.

அரசாங்கம் நடத்த முடியுமா? அவர்கள் நடத் தினல் வியாபாரம்தான் சீராக நடக்குமா? இப்படி எல்லாம் கேள்வி கேட்டுக் குழப்பலாம். "செங்

கோலின்முன் சங்கீதம் செல்லுமா?" என்ற பழைய பாடத்தை இங்குத்தான் படிக்க வேண்டும். முதலில் குறைகள் இருக்கும். பிறகு எல்லாம் ஒழுங்காகி விடும். பங்கீடு (ரேஷன்) தொடங்கின தொடக்கத்தில் எவ்வளவோ குறைகள் இருந்தன. சில ஆண்டுகள் அனுபவம் ஆனபிறகு அந்தக் குறைகளில் பாதி தீர்ந்துவிட வில்லையா? அப்படியே அரசாங்கம் வியாபாரத்தை ஏற்று நடத்தினாலும் முதலில் இடர்களும் குறைகளும் இருக்கலாம். சில ஆண்டுகளில் ஒருவாறு சீர்ப்பட முடியும்.

இன்றைய நிலைமையில் அரசாங்கம் வியாபாரத்தில் முக்காலே அரைக்கால் பங்கு தலையிட்டிருக்கின்றது என்று சொல்லலாம். சிறு வியாபாரம் முதல் பெரிய வியாரம் வரையில், பெட்டிக்கடை முதல் பெரிய கம்பெனி வரையில் எல்லாவற்றையும் அரசாங்கம் மேற்பார்வை செய்துவருகின்றது. ரூபாய்க்குக் காலணு அரையணு என்று விற்பனை வரி வாங்குவது முதல், வருவாயில் இவ்வளவு பங்கு என்று வருமான வரி வாங்குவது வரையில் அரசாங்கமே கவனித்துவருகின்றது. பேரேடு சிற்றேடு முதல் ஓரணு அரையணு விற்ற விற்பனைச் சீட்டுக்கட்டு வரையில் எல்லாம் அரசாங்க அதிகாரிகளின் தணிக்கைக்கு உட்பட்டு அவர்களிடமே மாதக் கணக்காகத் தூங்குகின்றன. இவ்வளவும் அரசாங்கம் செய்து வரும்போது, அளந்துபோடுவதும் நிறுத்திக்கொடுப்பதும் ஆகிய இந்தச் சிறு வேலையை அரசாங்கம் செய்ய முடியாதா?

ஒருவகையில் இது வியாபாரிகளுக்கும் நன்மை ஆகும். இன்று அவர்கள் படும் தொல்லைகளும் கவலைகளும் கணக்குகளைப் பற்றிக் காணும் கனவுகளும் சொல்ல முடியாதன. அரசாங்கம் வியாபாரத்தை

ஏற்றுக்கொண்டால் இவ்வளவும் போய்விடும்; இப்போது உள்ள வியாபாரிகள் எல்லோரும் அரசாங்கச் சம்பளம் பெற்று, அரசாங்க வேலையராகி அதே இடத்தில் அதே தொழிலைச் செய்துவருவார்கள். வேண்டும் போது விடுமுறை பெற்று இன்பமடைவார்கள்; வயதான பிறகு ஓய்வுச்சம்பளம் (பென்ஷன்) பெற்று ஓய்வு பெறுவார்கள். இந்த நன்மைகள் இப்போது இவர்களுக்கு இல்லை. இப்படி இன்னும் எத்தனையோ நன்மைகளும் வியாரிகளுக்கு உண்டாகும்.

இவர் கருதாத திட்டமாக இருக்கின்றதே, அவர் பேசாத திட்டமாக இருக்கின்றதே என்று கவலைப்பட வேண்டியதில்லை. எல்லாத் திட்டங்களையும் அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று மதிப்பதை விட்டு, கால நிலையையும் நாட்டின் போக்கையும் பகுத்தறிவின் துணையையும் கொண்டே ஆராய்ந்து பார்க்க வேண்டும். வைத்திய நூல்களைப் புரட்டிப் பார்ப்பதைவிட, நோயாளியின் நிலையையும் நோயின் காரணத்தையும் அவனுடைய சூழலையும் ஆராய்ந்து மருந்து கொடுப்பது சிறந்தது அல்லவா? மனத்திற்கு அமைதி வேண்டுமானால் ஒன்றை எண்ணிக்கொள்ளலாம். எவ்வளவோ உண்மைகளை வகுத்துக் கூறிய திருவள்ளுவர் உழவின் சிறப்பைப் புகழ்ந்து விளக்கியுள்ளார். ஆனால் வாணிபத்தைப் பற்றி ஓர் அதிகாரம் வகுத்துக் கூறவில்லை. உழவைப் பத்துக் குறளால் பாடியவர், வியாபாரத்தை ஒரு குறளில் அதுவும் நடுவு நிலைமையை விளக்குமிடத்தில் சொல்லிவிட்டுச் செல்கின்றார்.

திருவள்ளுவர் காலம் இப்படிப்பட்ட வியாபார அமைப்பைக் காணாத காலம்; அவர்காலத்தில் இந்த முறை இருந்திருந்தால் இதைப் பழித்து எழுதியிருப்பார். வியாபாரம் என்னும் முறை உள்ளவரையில்

பொய்யும் பித்தலாட்டமும் உலகத்தை விட்டு நீங்க முடியாது என்று வெட்ட வெளிச்சமாக்கி யிருப்பார். அவர் காலத்தில் இருந்தது பண்ட மாற்று என்ற எளிய முறையே; அந்தக் காலத்தில் நாணய மாற்று என்பதும் இல்லை; நிதிநிலையம், பங்குமார்க்கெட்டு என்பனவும் இல்லை. அந்தக் காலம் இறந்த காலம்; அதைப் பற்றிக் கனவு காண்பதில் பயன் இல்லை. வருங்காலத்தை ஆக்க முயல்வதே கடமையாகும். உழவுக்கு உற்ற நோயை அறிந்து மருந்து கொடுப்பவனே இன்று அந்தக் கடமையை ஆற்ற வல்லவன் ஆவான்.

# 4. நல்ல பாடம்

“குழந்தை துரும்பாய் மெலிந்து போகிறுன்: நல்ல மருந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும்” என்று பெற்ற தாய் வேண்டுகின்ருள். வைத்தியர் இரக்கத்தோடுதான் பார்க்கின்ருர். அன்போடுதான் பேசுகின்ருர். “இந்த டானிக் மருந்து வாங்கிக் கொடுங்கள். நாள்தோறும் நல்ல பழங்கள் தின்ன வேண்டும். சத்தான பொருள்கள் சாப்பிட வேண்டும். இரவில் தவருமல் பால் குடிக்க வேண்டும்” என்று தனக்குத் தெரிந்த வைத்தியமும் முறையும் சொல் கின்ருர்.

ஆனுல், குழந்தையும் தேறுவதில்லை, தாயின் கவலை யும் தீர்வதில்லை; வைத்தியர் நோக்கமும் நிறைவேறுவ தில்லை. ஏன்? டானிக் பயனற்றதா? பழமும் பாலும் சத்துணவும் பயனற்றவைகளா? அல்ல, அல்ல. குழந்தையால் இவற்றை உண்டு செரித்துக் கொள்ளவே முடியவில்லை. கோளாறு வயிற்றில் இருக்கின்றது. முதலில் அதைத் தீர்க்க வேண்டுமே என்னும் உண்மையை வைத்தியர் மறந்துவிட்டார்.

பையன் நன்ருகப் படிக்க வேண்டும் என்று தந்தை எவ்வளவோ பாடுபடுகின்ருர். கேட்ட புத்தகங்கள்

எல்லாம் வாங்கிக் கொடுக்கிறுர். அவனுடைய கைச் செலவுக்கும் பணம் கொடுக்கிறுர். தனி ஆசிரியரும் மாலையில் வந்து சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய் கிறுர். ஆசிரியரும் நாள்தோறும் விளக்கு வைத்த வுடனே தவருமல் வந்து பாடுபட்டுச் சொல்லிக் கொடுக்கின்றுர்.

ஆனால், பையனும் படிப்பதில்லை. பணமும் வீணுகின்றது. தந்தையும் ஏமாறுகின்றுர். ஆசிரியரும் வருந்துகின்றுர். புத்தகம் பயனற்றவைகளா ? ஆசிரியர் திறமையற்றவரா ? அப்படி ஒன்றும் இல்லை. பையனுக்குப் படிப்பில் அக்கரை ஏற்படவில்லை. பெற்ருேரும் ஆசிரியரும் எல்லா முயற்சியும் செய்த போதிலும், பையனுக்குப் படிப்பில் சுவை காட்ட வில்லை ; அக்கரை ஏற்படும்படியாகச் செய்யவில்லை. சுருங்கச் சொன்னுல், பையன் மூளையில் பசி இல்லை. மூளையில் ' ஜீரண சக்தி ' இல்லை.

" இந்தியா ஒன்றுபட்டு ஒரு நாடாக வாழ வேண் டும். இரண்டுபடக் கூடாது. பாகிஸ்தான் இந்தியா என்று பிரிவது பாவம். ஒற்றுமையாக வாழ்ந்தால் தான் பலம் உண்டு. முன்னேற்றம் உண்டு. ஆகை யால், எத்தனை பிரிவுகள் இருந்தாலும் மறந்துவிட வேண்டும். ஒரு தாயின் பிள்ளைகள் போல், ஒரு குடும் பம் போல் நடந்துகொள்ள வேண்டும். தேசத்தைத் துண்டுபடுத்தக் கூடாது, அது பாவம்" என்று தலைவர் கள் எடுத்தெடுத்துச் சொன்னுர்கள். அறிஞர்களும் 'ஆம் ஆம்' என்று போற்றினுர்கள். செல்வாக்குள்ள பத்திரிகைகளும் விளக்கி விளக்கி எழுதின.

ஆனுல் ஒரு பயனும் விளையவில்லை. அதற்கு மாருக இந்தியா இரண்டுபட்டு முடிந்துவிட்டது. தனித்தனி நாடுகள் ஏற்பட்டுவிட்டன. பிளவுகளும் பிரிவுகளும் பிணக்குகளும் பெருகிவிட்டன. காரணம்

என்ன ? தலைவர்களின் உபதேசங்களும், மற்றவர்கள் உணர்ந்தவைகளும் தவறு ? அல்ல, அல்ல. ஆனால், மக்களின் வாழ்க்கை நிலையில் உள்ள சிக்கலைத் தீர்க்காத குறையே ஆகும்.

வயிற்றுக் கோளாறு தீர்ந்துபோனால் அந்தக் குழந்தை தேறும். தாயின் கவலையும் தீர்ந்து வைத்தியர் நோக்கமும் நிறைவேறும். அறிவும், பசியும், அக்கறையும் ஏற்பட்டால் பையனின் கல்விக் குறை தீரும். பெற்றோரின் முயற்சியும் ஆசிரியரின் உழைப்பும் பயன் தரும். இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை சீர்ப்பட்டால் ஒற்றுமையும் நிலைக்கும். தலைவர்களும், மற்றவர்களும் வெற்றிபெற முடியும்.

வாழ்க்கை நிலை சீர்ப்படுவதற்குமுன் எத்தனை வகையில் எவர் எவர் முயன்றாலும் பயன் விளைவது அருமையே. சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்கி விழுங்கி மேன்மேலும் பருத்து வளரும் கொடுமை, பலரை ஏமாற்றிச் சிலர் முன்னேறும் கொடுமை, ஒருவர் பசித்து வாட மற்றொருவர் புசித்து வீங்கும்கொடுமை முதலியவை சமுதாய வாழ்க்கையை இன்று பற்றி அலைக்கும் நோய்கள். இந்த நோய்களுக்கெல்லாம் அடிப்படையான காரணம் பொருளாதார மேடு பள்ளங்களுக்கு இடம்தந்து எங்கும் நடைபெறும் பண வேட்டை. இதனைத் தொலைக்கின்ற வரையில் இந்திய நாட்டை ஒன்றுபடுத்த எவராலும் முடியாது. பிளவுகளையும் பிரிவுகளையும் போக்கி மக்களை ஒன்றுபடுத்த எந்தக் கட்சியின் முயற்சியும் பலிக்காது என்று வரலாறு சொல்லிவிட்டது; அறிஞர்கள் திரும்ப ஒரு முறை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இரண்டுபட்ட இந்தியா அறிவித்துவிட்டது. சாதி வேறுபாட்டைத் தொலைக்க வேண்டும் என்று பலர் செய்யும் முயற்சியும் இவ்வாறே பயன் குறைந்து

போகிறது. அடுப்பங்கரையில் இருந்த சாதிப்பேய் தேர்தல்களம் வரையில் நீண்டு வருவதையே காண் கிறோம்.

சமுதாய நோய் இன்னது என்று இப்போதாவது எண்ணிப் பார்க்க வேண்டும். குழந்தை தேற வேண்டும் என்று ஏங்கும் தாய்போல, பையன் படிக்க வேண்டும் என்று ஏங்கும் பெற்றோர்போல, வீணை நாட்டு ஏக்கம் கொள்வதால் மட்டும் முன்னேற்றம் அடைய முடியாது. நாட்டுக்கு உரிய நெறியில் கடமை யைச் செய்கின்றோமோ என்று எண்ணிப் பார்த்து, உண்மையான சமுதாய நோய் இன்னதென்று அறிந்து பொருளாதாரச் செம்மையால் அதைக் களைந் தால்தான் முன்னேற்றம் உண்டு.

## 5. வராமல் காக்க

திருடு திருடு என்று எங்கும் பெரும்பேச்சாக உள்ளது. செய்தித்தாளைப் பிரித்தால் கொட்டை எழுத்துக்களில் இங்கே திருடு அங்கே திருடு என்று விளக்கமான செய்திகளையே காண்கிறோம். "பட்டப் பகலில் வீட்டில் நுழைந்து பார்த்துக்கொண்டிருந்த போதே எடுத்துக்கொண்டு ஓடினான்"; "தெருவில் நின்றுகொண் டிருந்தவளின் கழுத்தில் கையைப் போட்டுத் தங்கச் சங்கிலியைக் கழற்றிக்கொண்டு சைக்கிள் ஏறி ஓடிவிட்டான்"; விடியற்காலையில் தோட்டத்து வழியாக வந்து பெட்டியை எடுத்துக் கொண்டு ஓடியபோது எதிரே வழி மறித்த வீட்டுக் காரரைக் கத்தியால் குத்திவிட்டு, அடுத்தபடி பிடிக்க வந்த பக்கத்து வீட்டுக்காரரைப் பிணமாக்கிவிட்டுப் போய்விட்டான்"; "சன்னல் கம்பிகளை நீக்கி வளைத்து விட்டு உள்ளே புகுந்து தலைமாட்டில் வைத்திருந்த வெள்ளிச்சாமான்களை எடுத்துக்கொண்டு போய்விட் டான்"; "வீட்டு வாசற்படிக்கு மேலே உயரத்தில் மாட்டும் மின்விளக்கின் பல்பு வாரந்தோறும் திருடு போகிறது"; "கொடியில் உலரப்போட்டிருந்த

சேலையைச் சன்னல் வழியாக எடுத்துப் போய்விட்டார்கள் "; " வெளியே வைத்திருந்த வாளியை (பக்கெட்) யாரோ திருடிக்கொண்டுபோய்விட்டான்"; "சட்டைப் பையில் இருந்த பேனாவை எவனோ எப்படியோ கை நீட்டி எடுத்துக்கொண்டான்"; "பஸ் ஏறும்போது சட்டையில் இருந்த பணப்பை, பஸ்ஸை விட்டு இறங்கிய பிறகு பார்த்தால் காணோம் "; "ரயில் பயணத்துக்கு டிக்கட் வாங்கிப் பர்ஸில் வைத்துப் பெட்டிக்குள் ஏறினேன். வண்டி அடுத்த நிலையத்தில் நின்றபோது டிக்கட் பார்ப்பவர் வந்து கேட்டார்; சட்டைப் பையைத் தடவித் தடவிப் பார்த்து விழித்தேன்; டிக்கட்டும் போயிற்று; பணமும் போயிற்று; இஞ்சி தின்ற குரங்கு போல் இருக்க நேர்ந்தது" என்று இப்படி எத்தனை எத்தனை வகையாகவோ, சன்னல் வழித் திருடு முதல் சட்டைப்பைத் திருடு வரையில் அடிக்கடி திருடுகள் நடப்பவை நாள்தோறும் கேள்விப்படுகிறோம்.

நகரங்களில் இப்படி என்றால் கிராமங்களில் நடக்கும் திருடுகளுக்குக் கணக்கு இல்லை. ஆனால் அவைகள் செய்தித்தாள்களில் வரவில்லை. பகல் கொள்ளையோ, கொலையோ, தற்கொலையோ நடந்தால் தான் கிராமத்துச் செய்திகளை நகரத்துத் தாள்களில் வெளியிடுகிறார்கள்.

இந்தச் செய்திகளைப் பரபரப்போடு படிப்பதனாலும் பரப்புவதனாலும் இவற்றை அறிந்து அஞ்சி வாழ்வதனாலும் பயன் விளைவதில்லை. தற்காப்பு வேண்டியதுதான். ஆனால் அதற்காக அஞ்சி வாழ்வதில் பயனில்லை. எவ்வளவோ காவலும் சட்டமும் சிறையும் கடுமையும் இருந்த போதிலும், அஞ்சாமல் திருடுகின்றவர்களின் தொகை பெருகுவது போல் தோன்றுகிறது. ஆகவே செய்திகளைக் கேட்டு அஞ்சி வாழ்

வதால் நன்மை செய்துவிட முடியாது. இப்படித் திருடுகள் பெருகுவதற்குக் காரணம் என்ன என்று இடையிடையே எண்ணிப் பார்த்தால் எவ்வளவோ நன்மை விளையக் கூடும். இன்றைய சமுதாயம் முன்னனேற்றத்திற்காக எவ்வளவோ முயற்சி செய்து வந்த போதிலும், உண்மையான உயர்நிலையை அடைய முடியாமல் இடர்ப்படுவதற்குக் காரணம் என்ன? சட்டம் செய்யத் தெரிந்தும், காவலுக்காகப் பெருந் தொகை செலவு செய்யத் தெரிந்தும், இந்தச் சமுதாயத்திற்கு எதையும் பொறுமையோடு எண்ணிப் பார்க்கத் தெரியவில்லை. பிறர் எதை எப்படிச் சொல்கிறார்களோ அதை அப்படியே அறிவதும் அறிந்தவாறே பிறர்க்குச் சொல்வதும் யாரிடத்திலும் உள்ளவை. ஆனால் ஒவ்வொன்றிற்கும் அடிப்படைக் காரணம் எது என்று எண்ணிப்பார்க்க இந்தச் சமுதாயத்திற்கு இன்னும் தெரியவில்லை என்றே சொல்லலாம்.

நோயை மட்டும் உணர்ந்து புலம்பிக்கொண்டிருப்பதால் பயன் இல்லை. நோயின் காரணம் என்ன, அதைத் தீர்க்கும் மருந்து என்ன, இனி நோய் வராமலிருக்க வழி என்ன என்று அறிய விரும்புகின்றவனே அறிவுடையவன். தனிமனிதனுக்குப் பொருந்தும் இந்த உண்மை சமுதாயத்துக்கும் பொருந்துவதாகும்.

சில நோய்களுக்கு மருந்து இன்னது என்று தெரிந்திருக்கும். ஆனால் மருந்து வாங்கி உண்ணக் கையில் காசு இருக்காது. சத்துணவு உண்டு உடம்பை உரமாக வைத்துக்கொண்டால் நோய் வராமல் தடுக்க முடியும் என்று தெரியும். ஆனால் பசிக்குப் போதுமான உணவே கிடைக்காத ஒருவன், சத்துணவு தேடி அலைய முடியுமா? ஆயினும், அவன் அறிவாளியானால், நோய்க்கு மருந்து வாங்கவும் சத்துணவு உண்ணவும்

கையில் காசு இல்லாவிட்டாலும், நோயைக் கண்டு புலம்ப மாட்டான்; மருந்துக்கும் உணவுக்கும் வேண்டிய காசு கிடைக்கும் வழி என்ன என்று அதற்கு உரிய முயற்சிகள் செய்வான். அப்படி இயன்ற முயற்சி செய்யாமல், நோயைக் கண்டு கண்டு புலம்பிக்கொண்டிருப்பவனை என்ன என்று சொல்வது?

இன்றைய சமுதாயம் நோயைக் கண்டு புலம்பத் தெரிந்த சமுதாயமே; நோய்க்கு உரிய மருந்து தேட இதற்கு ஆற்றல் இல்லை. ஆனால் மருந்தும் உணவும் இன்ன இன்ன என்று அறியும் அறிவும் இல்லையென்றால், என்ன செய்வது?

திருடு பெருகுதல், நாட்டைப் பற்றியுள்ள ஒரு நோய்; லஞ்சம் பெருகுதல், சோம்பல் பெருகுதல் முதலியவற்றைப் போல் இதுவும் ஒரு சமுதாய நோய். இந்த நோய்க்கு மருந்து எது? வராமல் தடுக்க வழி என்ன?

திருடர் யார்? அவரும் மனிதர்களே; நம்மைப் போன்ற மனிதர்களே.

நம்மைப் போன்ற மனிதர் என்றால், நமக்கு இல்லாத தீய பண்பு ஏதேனும் அவர்களுக்கு உள்ளதா? பிறக்கும்போதே திருடுவதற்குரிய இயல்போடு பிறந்தார்களா? திருட்டுக் குற்றம் செய்யாத மக்கள் அத்தனைபேரும் குற்றம் அற்ற உயர்ந்த மனம் உடையவர்களா? அவர்களின் மனத்தில் தீமையே இல்லையா?

திருடி வாழ்வதே கடமை என்று திருடர்கள் எண்ணுகிறார்களா? இல்லையே. திருடர் என்று பெயர் எடுக்கக்கூடாது என்றே அவர்கள் விரும்புகிறார்கள். தம்மைத் திருடர் என்று யாரேனும் சொன்னால் உடனே கொதித்தெழக்கூடிய அந்த அளவிற்கு அவர்களுக்கு நல்ல பண்பு இருக்கிறது. அந்த நல்ல பண்பு ஏன் வளரவில்லை?

திருடர்க்கு மனைவி மக்கள் இல்லையா? நண்பர்கள் இல்லையா? அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம்தானே இப்படிப் பொருளுக்காகத் திருட்டுக்குற்றம் செய்யத் தூண்டுகிறது?

திருடு என்பது திருடர்க்குப் பஞ்சணையும் அல்ல; தென்றல் காற்றும் அல்ல; சிறைக்குச் செல்லவும் மரணம் முதலியவற்றை ஏற்கவும் தயங்காதவர்களே திருடத் துணிவார்கள். ஆழ்கடலில் முத்துக் குளிப்பவர்க்கும் மலையின் செங்குத்தான வழியில் உச்சியை நோக்கி ஏறுபவர்க்கும் எவ்வளவு துணிவு வேண்டுமோ அவ்வளவு துணிவு இல்லாவிட்டாலும் அதில் ஒரு பங்காவது கொண்டுள்ளவர்கள் இவர்கள். இத்தகைய துணிவு போற்றத் தக்கது. ஆனால் இந்தத் துணிவு குற்றம் செய்யப் பயன்படுகிறதே என்பதுதான் வருந்தத்தக்கது.

திருட்டுக் குற்றம் செய்வோர் எல்லோரும் அறத்தில்—நல்வழியில்—நம்பிக்கை இல்லாதவர்களா? நம்பிக்கை இருந்து தேய்ந்திருக்கும்; அல்லது இன்னும் ஒருபுறம் ஒதுங்கியிருக்கும். பொய் சொல்லுமாறு கட்சிக்காரர்க்குக் கற்றுத்தரும் வழக்கறிஞர் எல்லோரும் உண்மையில் நம்பிக்கை இல்லாதவர்களா? சாதி வேறுபாடும் சமயவேறுபாடும் கொண்டு வாழும் பக்தர்கள் எல்லோரும் உலகப் பொதுத் தந்தையான கடவுளிடத்தில் நம்பிக்கை இல்லாதவர்களா? 'ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை' என்ற வாய்மொழியை உருக்கத்தோடு படித்துவிட்டு வள்ளுவரை வாயாரப் போற்றிவிட்டு அலுவலகத்தில் லஞ்சம் வாங்கிப் பணப்பையை நிரப்புவோர்க்குத் திருக்குறளில் நம்பிக்கை இல்லை என்று கூற முடியுமா? இருந்த நம்பிக்கை தேய்ந்துள்ளது அல்லது ஒதுங்கியுள்ளது என்று கூறலாம்.

திருடுவோரும் ஏறக்குறைய இதே நிலையில் உள்ளவர்களே.

அதனால் திருடு இயற்கை என்று குறிப்பிடுவது கருத்து அல்ல; அது இயற்கை அல்ல. சமுதாயம் செயற்கையாகக் கற்றுக்கொடுத்த கலை அது. திருடர்களைத் தண்டிக்கக் கூடாது என்பதும் கருத்து அல்ல; மற்றவர்கள் ஓரளவாவது அமைதியாக வாழ்வதற்காகத் திருடர்களைத் தண்டிக்க வேண்டியதுதான். ஆனால், திருட்டுக் குற்றம் நாளுக்கு நாள் பெருகிவருவதற்குக் காரணம் என்ன என்று எண்ணிப் பார்க்காமலிருப்பது குற்றம் அல்லவா?

காரணம் பல இருக்கலாம். சில இருக்கலாம். முதல் காரணமாகக் குறிப்பிடத் தக்கது வேலையில்லாத் திண்டாட்டம்.

கள் இறக்குவதைத் தொழிலாகக் கொண்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்கள் இன்று என்ன ஆயின என்று எண்ணிப் பார்க்கிறோமா?

டிராம்வே எடுபட்ட காரணத்தால் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள். அவர்களின் மக்கள் உயர்நிலைப் பள்ளிகளில் படித்துக் கொண்டிருந்தவர்கள் சம்பளம் கட்ட முடியாமல் நின்றுவிட்டார்கள். அவர்களும் அவர்களின் மக்களும் எப்படி வாழ்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கிறோமா?

அரிசிப் பங்கீடு (ரேஷன்) முதலியவை இருந்த காலத்தில் ஊர் தோறும் தெருவு தோறும் ஏற்பட்டிருந்த கடைகளிலும் அவற்றின் தொடர்பான அரசாங்க அலுவலகங்களிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தொழில்பெற்று வாழ்ந்துவந்தார்களே அவர்களும் அவர்களால் வயிறு வளர்த்த மக்களும்

இன்று என்ன ஆனுர்கள் என்று எண்ணிப் பார்க்கிருேமா ?

ஒவ்வொரு தொழிலாளியின் வயிற்றிலும் குறைந்தது ஐந்து ஆறு மக்கள் பிறக்கிருர்கள். தொழில் செய்துவந்த தொழிலாளிகளுக்கே முன்போல் வேலை கிடைக்காத நிலையில், அவர்களுடைய மக்கள் எங்கே எப்படி வளர்ந்து என்ன தொழில் தேடி வாழ்கிருர்கள் என்பதை எண்ணிப் பார்க்கிருேமா ? ஒரு தச்சனுக்கு வேலை உள்ள இடத்தில் இன்று ஏழெட்டுப் பேர் வந்து வேலை கேட்டு நெருக்குகிருர்கள். ஒரு தையற்காரன் உள்ள இடத்தில் ஏழெட்டுத் தையற்காரர் ஏற்பட்டு நெருக்குகிருர்கள். இவர்களின் நிலையே இப்படி என்ருல் இவர்களின் தம்பிமாரும் மக்களும் என்ன தொழில் தேடி எப்படிப் பிழைப்பார்கள் ? இவர்கள் சிறுபிள்ளைகளாக இருந்தவர்கள் ஆண்டுதோறும் வளர்ந்து துடிதுடிப்பான இளைஞர்களாகிவருகிருர்கள். இவர்களுக்கெல்லாம் வேலை இல்லை என்ருல், இவர்களின் மனம் எல்லாம் கெட்டு நெறியல்லா நெறியில் செல்லத் தூண்டுவதாகும் என்பதை எண்ணிப் பார்க்கிருேமா ?

கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் படித்தவர்கள் ஆண்டுதோறும் பதினுயிரக் கணக்கில் வெளியேறி ஊர்தோறும் தெருவுதோறும் வேலை இல்லாமல் சுற்றுகிருர்களே, அவர்களை என்ன செய்வது என்று எண்ணிப் பார்க்கிருேமா ?

வெறும் புத்தகப் படிப்பு—வீணுன பரீட்சைப் படிப்பு—படிப்பதால் தொழில் தேடி வாழ முடியாது என்று சொல்லிவந்தோம். அதனுல் பலர் இன்று கைத்தொழில்கள் கற்றுத் தேறியுள்ளார்கள். அவர்களிலும் பலர் வேலை இல்லாமல் திரிகின்ருர்களே,

இனி அவர்களுக்கு என்ன சொல்வது என்று எண்ணிப் பார்க்கிறோமா ?

இப்படிப் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கும், தொழில் கற்றுக்கொண்டு தொழில் கிடைக்காமல் இருப்பவர்களுக்கும் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாடுகளில் அரசாங்கங்கள் ஓரளவு பண உதவி செய்து காத்துவருவதோடு, வேலை தேடிக் கொடுப்பதிலும் முயற்சியாக இருந்து வருகின்றன. நம் நாட்டில் வேலை யில்லாதவர்கள் அரும்பாடுபட்டுப் பெயரைப் பதிவு செய்து அடிக்கடி போய் அலைந்தாலும் கேட்பார் இல்லை என்பதையும், நாகரிக நாடுகளின் முறையை நாம் இன்னும் பின் பற்றத் தொடங்கவில்லை என்பதையும் எண்ணிப் பார்க்கிறோமா ?

மானம் குலம் கல்வி முதலிய பத்தும் பசி வந்திடப் பறந்துபோம் என்று சொன்ன முன்னோரின் பாட்டை ஏட்டில் படிப்பதோடு நின்றுவிடுகிறோம். வேலை இல்லாதவர்களின் பசிக்கும், வேலை கிடைத்தும் வயிறு நிரம்பாதவர்களின் பசிக்கும் இந்த ஆற்றல் உண்டு என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை.

ஆகவே, திருடர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதோடு நிற்காமல், திருடு பற்றிய செய்திகளைச் செய்தித்தாள்களில் படித்துப் பரபரப்பு அடைவதோடு நின்றுவிடாமல், இவற்றிற்கு மேலும் ஒரு படி உயர்ந்து மேலே கூறியவற்றை எண்ணிப் பார்த்தால் தான், இந்தச் சமுதாய நோய்க்கு என்றேனும் ஒரு நாள் மருந்து தேட முடியும் ; மறுபடியும் நோய் வராமல் காக்கவும் முடியும்.

# 6. எண்ணிப் பார்க்க

என்ன கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்?—இந்த மூன்று கேள்விகளே இன்று எல்லாரையும் அலைத்துவரும் கேள்விகள்.

பணம் கிடைத்தபின், உணவுப் பொருளைத் தேடி அலைய வேண்டியிருக்கின்றது. அரிசி, கடலைப் பருப்பு முதலான உணவுப் பொருள்களைத் தேடித் தேடி அலையவேண்டி யிருக்கின்றது. என்ன கிடைக்கும், எங்கே கிடைக்கும், எப்படிக் கிடைக்கும் என்று வயிறு பெற்றவர்கள் அலைய வேண்டியிருக்கின்றது. அதே நிலையில், கள்ள வாணிகம் செய்யும் வியாபாரிகள், இந்த உணவுப் பொருள்களைக் குவித்து வைத்துக் கொண்டு, இவற்றை விற்றுக் கொள்ளை லாபம் பெறுவதற்காக, "என்ன லாபம் கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்?" என்று அலைகின்றார்கள். அந்த வேளை உணவுப் பொருளுக்கு அலைந்துவாடுவோர் பலர்; ஓயாமல் அலைந்து கொள்ளை லாபம் பெறுவோர் சிலர்.

படித்துப் பட்டம் பெற்ற பிறகு, வேலை இல்லையே, எங்கே கிடைக்கும் என்று அலைவோர்

பலர்; கிடைத்த வேலை எத்தனை நாள் நீடிக்கும் என்று ஏங்குவோரும் பலர். வேலை கிடைத்து நீடித்த பின், அந்தத் துறையில் என்ன லஞ்சம் கிடைக்கும், எப்படிக் கிடைக்கும் என்று விழிப்போடு அலைவோர் பலர். கிடைத்த லஞ்சத்தைக் கண்ணும் கருத்துமாய்க் காத்துப் பிறர் அறியாமல் பெருஞ் செல்வராகி மாடி வீடுகளும் நன்செய் நிலங்களும் வாங்க அலைவோர் சிலர்.

ஒரு துறையில் தொழிலாளியும் முதலாளியும் நடத்தும் போர். ஒரு துறையில் வயிறு படைத்தவனும், கள்ள வாணிகனும் நடத்தும் போர். மற்றொரு துறையில் வழியற்றவனும் 'லஞ்சம் வாங்கி'யும் நடத்தும் போர். இவை சிறப்பான துறைகள். இப்படிப் பட்டவை—ஆனால் விளம்பரம் அற்றவை—இன்னும் எத்தனையோ உள்ளன.

நாடு சீர் பெற வேண்டுமானால், இந்த நிலைமையை மாற்ற வேண்டும். அதற்கு ஏற்ற முறையில் முயற்சிகள் செய்ய வேண்டும்.

இப்போது நம் நாட்டில் இந்த முயற்சிகள் நடைபெறுகின்றனவா? மேற்போக்காகப் பார்த்தால், ஒரு முயற்சியும் நடைபெறவில்லை என்று சொல்லி விடலாம். ஆனால் அது உண்மை அல்ல. கண்ணை மூடிக்கொண்டோ, கையைக் கட்டிக்கொண்டோ "எல்லாம் நன்மைக்கே" என்று சொல்லிக் காலம் கழிக்கும் மக்கள் தொகை வர வரக் குறைந்து விட்டது என்பது தெளிவு. "ஏன் இப்படி இருக்க வேண்டும்? இது கொடுமை அல்லவா? எத்தனை நாள் இந்த வாழ்வு?" என்று எண்ணித் துடிக்கும் மக்கள் தொகை படிப்படியாக வளர்ந்துவருகின்றது.

முதலாளி என்று கனவில் கண்ட போதும் அன்பும் அமைதியும் கொண்டு வழிபடும் தொழிலாளி

கள் மறைந்துவருகின்றார்கள். கள்ள வாணிகத்தைக் கலைத்து தொலைக்க வேண்டும் என்று நாட்டுப் புறத்து மக்களும் ஒவ்வொரு வேளையில் வாயால் பேசத் துணிந்துவிடுகின்றார்கள். அதிகாரி என்றால் அவனுக்கு எல்லா உரிமையும் உண்டு, லஞ்சம் வாங்கு வதும் ஒருவகை உரிமை, லஞ்சம் கொடுப்பதும் ஒரு வகைக் கடமை என்ற மனப்பான்மை மண்ணாகி விட்டது; கல்லும் தடியும் கையில் வைத்துக் கொண்டு புற்றில் ஒடுங்கும் பாம்பைத் தேடுவோரின் மனப்பான்மை பொதுமக்களில் ஒரு சிலர்க்கு வந்து விட்டதுபோல் தெரிகிறது.

இது வரையில் மக்கள் ஏமாந்து வாழ்வதே அறம், ஊழ்வினை, ஆண்டவன் செயல் என்று பலவாறு எண்ணிவந்தார்கள்? இன்றும் பலர் அவ்வாறுதான் எண்ணி வருகின்றார்கள். ஆனால், பொல்லாத அறிஞர் சிலர், அந்த இருளைப் போக்கி ஒளி வீசும் பொதுமைக் கதிரவன் எழுந்து வரும் திசையைக் காட்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். பொது மக்களில் சிலர் அந்தத் திசையைப் பார்த்துவிட்டார் கள். பொழுது விடிந்துவிட்டது என்ற நம்பிக்கை யும் பெற்றுவிட்டார்கள். நம்பிக்கை இழந்து வாடும் மற்றவர்களுக்கு இடித்துரைக்கவும் தலைப்பட்டு விட்டார்கள். ஏமாந்து வாழ்வதே பாவம் என்று தெளிந்துவிட்டார்கள். ஏமாற்றத்தைத் தொலைப்பதே அறம், அதற்காக உயிர் வாழ்வதே ஊழ், அதற்காகப் போராட்டம் நடத்துவதே ஆண்டவன் செயல் என்றெல்லாம் உணர்ந்துவிட்டார்கள்.

இன்னும் சில காலம்—சில ஆண்டுகள்—நாட்டில் ஒருவாறு அமைதி இருக்கலாம்; நீடிக்கலாம். ஆனால் இந்த அமைதி நல்லது அல்ல. அமைதி நீடிக்க நீடிக்க, இரத்தப் புரட்சிக்கு வழி கோலுவதாக

முடியும். ஆகையால், இப்போது அமைதி நீடிக்கு மாறு விடுவது பெரும்பாவம்! அன்பான புரட்சியால், வேண்டிய மாறுதல்களைச் செய்து நாட்டைச் சீர்ப்படுத்த முயல வேண்டும். இது முதலாளிகளின் கையிலும்,வியாபாரிகளின் கையிலும், அதிகாரிகளின் கையிலும் உள்ளது. இவர்களுக்குப் பரந்த நோக்கம் வேண்டும். இப்போது அமைதியைக் காத்துக் காலம் தள்ளலாம் என்று எண்ணிவிட்டால், அந்தக் குறுகிய நோக்கம் எதிர்காலத் தொல்லையைப் பெருக்கிவிடும்! நாட்டின் நன்மையையும் தங்கள் நன்மையையும் கருதிப் பரந்த நோக்கம் கொண்டு, பொது மக்கள் நோக்கும் திசையைத் தாங்களும் நோக்குவார்களா? பொதுமைக் கதிரவன் புதுமைக் கதிர்களை வீசி எழு வான் என்பதை உணர்ந்துகொள்வார்களா? ஏய்ப்பது, ஏமாற்றுவது, அடக்குவது ஆகியவற்றுக்கு இடம் தந்த இராக்காலம் முடிந்துவிட்டது என்பதை அறிந்து திருந்துவார்களா? எது அறம், எது முறை, எது இறைவன் செயல் என்று உண்மையாக உணர் வார்களா? "என்ன கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்?" என்று அலையும் கவலையை விட்டு, "என்ன வேண்டும்? எல்லோருக்கும் பொது வாக என்ன வேண்டும்? நாடு சீர்பெற என்ன வேண்டும்?" என்று எண்ணிப் பார்ப்பார்களா?

## 7. பொது நோக்கம்

பழங்காலத் திருவிழாக்களில், வெள்ளணிவிழா என்பது ஒன்று. நாடாளும் அரசனுடைய பிறந்த நாள், அன்று சிறப்பாகக் கொண்டாடப்படும். அந்த விழாத் தலைவனாகிய அரசனும் பெரு மகிழ்ச்சியோடு விளங்கும் நாள் அது. அந்த மகிழ்ச்சியின் அறிகுறியாக அவன் ஈகையிலும் கருணையிலும் சிறந்துவிளங்குவான். நாடிச் செல்லும் பரிசிலர் எல்லோருக்கும் அவன் மனம் உவந்து பொருள்களை வாரி வழங்குவான். பொன்னை வாரிக்கொடுத்துத் தானம் செய்வது மட்டும் அல்லாமல், யானைகளையும் தேர்களையும் பலருக்குக் கொடுப்பான். இவற்றைப் பெற்ற பரிசிலர்கள் அவனை வாழ்த்திச் செல்வார்கள். இது ஈகையின் பகுதி.

அந்த நாளில் அவன் பகைவரிடமும் இரக்கத்தோடு நடந்துகொள்வான்; படையெடுக்கமாட்டான்; போர் நிகழ்த்த மாட்டான், ஆகையால் அவனுடைய பகைவர்களும் அன்று பயம் இல்லாமல் மதில் திறந்து மனைவியரோடு மகிழ்ந்திருக்க முடியுமாம். அதனால் உள்ளத்தினுள்ளே அவனை வாழ்த்துவார்களாம். இது கருணையின் பகுதி.

இத்தகைய வெள்ளணிவிழாவைப் புலவர்கள் புகழ்ந்து பாடுவார்கள். இவ்வாறு பாடும் துறைக்கு நாண்மங்கலம் என்று பெயர். புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியர் பாடிய நாண்மங்கலப் பாட்டில் இக் கருத்து அமைந்துள்ளது:—

கரும்பகடும் செம்பொன்னும்
வெள்ளணிநாள் பெற்ரோர்
விரும்பி மகிழ்தல்
வியப்போ—சுரும்பிமிர்தார்
வெம்முரண் வேந்தரும்
வெள்ளையார் தோள்விழைந்து
தம்மதில் தாம்திறப்பர் தாள்.

முடிசூடி ஆளும் அரசனை உடைய நாடுகளில் இன்றும் இந்த வழக்கம் இருந்துவரக் காணலாம்.

குடியாட்சி உடைய நாடுகளில் இந்த வழக்கத்திற்கு இடம் இல்லை. ஆளும் தலைவர் முதலமைச்சர் முதலியவர்களின் பிறந்த நாட்களுக்கு விழாக்கள் நடக்கின்றன. ஆனல் அந்த விழாக்கள் தனிப்பட்டவர்கள் நடத்தும் கொண்டாட்டங்களாக இருக்கின்றனவே தவிர, அரசாங்க விழாவாகவும் நாட்டு மக்களின் விழாவாகவும் வளர இடமில்லை. வளர்வது பொருத்தமாகவும் இல்லை. ஏனென்ருல், குடியாட்சியில் தலைவர்கள் மாறலாம்; அமைச்சர்கள் மாறலாம்; ஆனுல், சென்ற ஆண்டின் வெள்ளணிவிழா ஒன்ருகவும் இந்த ஆண்டின் விழா மற்ருென்ருகவும் இருந்தால், அது பொது விழாவாகப் பொருந்துவ தில்லை. மிக மிகப் பெரும் புகழ் பெற்று மக்களின் உள்ளத்தில் மாருமல் இடம் பெற்றுவிட்ட காந்தியடிகள் போன்ற ஒரு சிலர்க்கு மட்டும் பிறந்தநாள் விழா நாடெங்கும் கொண்டாடப்படும். காந்தியடிகளும்

அந்த நாளை மக்கள் அவ்வாறு கொண்டாடுவதை விரும்பவில்லை. எல்லோருக்கும் உரிய பொதுவிழாவாக அமையுமாறு அதைச் சர்வோதயநாள் என்றுசொல்லி ஆக்கவேலைகளுக்கு அடிகோலிவிட்டுச் சென்றார்.

காந்தியடிகள், யான் எனது என்னும் செருக்கை அறுப்பதில் கண்ணும் கருத்துமாக விளங்கியவர்; தம் சிறப்பையோ பெருமையையோ நினைக்கவும் கூசியவர்; எல்லாம் இறைவனுக்கு உரிய பெருமை என்றும், மக்களினத்துக்குப் பொதுவான சிறப்பு என்றும் எண்ணி மகிழ்பவர். ஆகையால் தம்முடைய பிறந்த நாளுக்கு விழாக் கொண்டாடுவதை அவர் விரும்பவில்லை.

நாட்டுத் தலைவர்களுக்கு மட்டும் அல்லாமல், வீட்டில் உள்ள பெற்றோர்க்கும் மக்களுக்கும் தனித் தனியே பிறந்தநாள் கொண்டாட்டங்களும், அந் நாட்களில் பரிசு கொடுக்கும் வழக்கங்களும் விருந்தளிக்கும் சிறப்புக்களும் உண்டு. மேற்கு நாடுகளில் இந்த வழக்கம் எல்லாக் குடும்பங்களிலும் உண்டு. மேற்கு நாடுகளைப் பார்த்துக் கற்று நம் நாட்டுக் குடும்பங்களும் இந்த வழக்கத்தை மேற்கொண்டிருக்கின்றன. பெரிய உத்தியோகங்களில் உள்ளவர்களிடையிலும் செல்வர்களிடையிலும் இது நன்றாகப் பரவி நிலைத்துவிட்டது எனலாம்.

ஆனால், இந்த நாட்டில் பல தலைமுறைகளாக இருந்துவரும் வழக்கம் எது என்று எண்ணிப் பார்த்தால், அது தம் தம் பிறந்த நாளைக் கொண்டாடுவது அல்ல; எல்லோர்க்கும் பொதுவாக, ஆண்டின் நாளைக் கொண்டாடுவதே எல்லோருக்கும் உரிய வழக்கமாக இருந்துவருகிறது.

தனி ஒருவனின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் அவனுடைய உள்ளம் தன்னைப் பற்றியும் தன்

சிறப்பைப் பற்றியும் எண்ணி மகிழத் தொடங்கு கிறது.

யான் எனது என்னும் அகப்பற்றும் புறப்பற் றும் தன்னை அறியாமலே கொழுந்துவிட்டு வளர் கின்றன. பண்பட்ட சான்றோர் ஒரு சிலர்க்கு இவ் வாறு பற்றும் தன்முனைப்பும் வளராமல் அடக்கமும் நன்றியுணர்ச்சியும் பெருகலாம். ஆனால் விழாக்கள் பண் பட்டு அமைந்துவிட்ட ஒரு சிலர்க்காக ஏற்பட்டவை அல்ல: பண்பட விரும்பும் பெரும்பாலோர்க்காக ஏற் பட்டவை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகையால், தனித்தனியே ஒவ்வொருவருடைய நன்மையையும் எண்ணிப்பார்த்தால், பிறந்த நாள் கொண்டாடுவதை விட ஆண்டுப் பிறப்பைக் கொண் டாடுவதே கடமை என்று தோன்றுகிறது. இது தனி மனிதர் நோக்கிலிருந்து தோன்றும் கருத்து ஆகும்.

பொதுவாக நாட்டின் நன்மையைக் கருதிப் பார்த் தாலும் குடியாட்சி முறைக்கு ஆண்டுப் பிறப்பு ஆட்சி யுரிமை நாள் முதலான விழாக்கள் நல்லவை என்று தெரிகிறது. குடிமக்கள் ஒவ்வொருவரும் தம் தம் உரிமை, சிறப்பு முதலியவற்றை முன் நிறுத்தாமல், நாட்டின் பெருமை, நாட்டுக்கான கடமை முதலிய வற்றை முன் நிறுத்துதல் குடியாட்சி முறைக்கு அடிப் படையான பண்பு ஆகும். ஆகவே இன்று மேற்கு நாட்டாரைப் பார்த்துப் பொருந்தாததைக் கற்றுக் கொள்ளவேண்டாம். பழைய முறையில் பொது விழாக் கொண்டாடுவதே நல்லது எனக் கொள்ளலாம்.

பழங்காலத்து வேந்தர்களின் சிறப்புக்கு உரிய திருவிழாக்களும் சடங்குகளும் பற்பல இருந்தன. காலப்போக்கில் நோக்கம் விரிவடைய விரிவடைய அவை மாறிவிட்டன. எடுத்துக்காட்டாக, திருப் பள்ளியெழுச்சி என்ற ஒன்றை எடுத்துக்கொள்

வோம். யாழ் ஏந்திய பாணர்கள் வைகறையில் அரண் மனைக்குச் சென்று இன்னிசை பாடி அரசனை எழுப்பு வது வழக்கம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆற்றிய தொண்டுகளின் பயனாக, பிற்காலத்துச் சோழ மன்னர்கள் அந்த யாழ்க் கலைஞரைத் தம் அரண் மனைக்கு வருவிக்காமல், நேரே கோயிலுக்குச் சென்று இறைவனுக்கு இன்னிசை பாடுமாறு மாற்றி அமைத் தார்கள். இவ்வாறு செய்யவே, அரசனுக்கு உரிய தாக இருந்த திருப்பள்ளியெழுச்சி இறைவனுக்கு உரியதாயிற்று. இது மிகப் பெரிய மாறுதலாகும். இதனால் வேந்தனும் தன்னலம் குறைந்து பொதுத் தொண்டு செய்பவனாக மாறினான்; நாட்டு மக்களுக் கும் பொதுவான ஓர் உயரிய மனப்பான்மை ஏற்பட வழி அமைந்தது. நம் காலத்தில் வாழ்ந்த பாரதியார், பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி என்று பாடிய பாடலும், மக்கள் எல்லோருடைய உள்ளத்திலும் பொதுவான உரிமை உணர்ச்சி ஏற்படச் செய்ததைக் காணலாம்.

தன்னைப் பற்றி மிகுதியாக எண்ணும் பழக்க வழக்கங்களிலிருந்து எப்படியோ விடுபட்டு, பொது வாக எல்லோருடைய நன்மையையும் எண்ணுமாறு தூண்டும் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்வது நாகரிக வளர்ச்சியில் ஓர் உயர்ந்த படியாகும். ஆகை யால், நாம் தனித்தனியே நம் பிறந்த நாட்களைக் கொண்டாடித் தேங்காமல், எல்லோர்க்கும் பொது வான ஆண்டுப்பிறப்பு முதலான விழாக்களைக் கொண் டாடுதல் நல்லது. இந்த வழக்கம் முற்போக்கான வழக்கம் என்பது தெளிவு. ஏன் எனில், முன்னதில் தன் முனைப்பு இடம்பெறுமோ என்று அஞ்சவேண்டி யுள்ளது. ஆண்டுப்பிறப்பு முதலிய விழாக்களிலோ பொதுநோக்கம் இயல்பாக அமைந்துவிடுகிறது.

## 8. அடிமை மனம்

குழந்தைகளை அடிக்கக்கூடாது, திட்டக்கூடாது, உரிமையோடு வளர்க்க வேண்டும், அறிவும் ஊக்கமும் மிகுந்தவர்களாக வளர்க்க வேண்டும் என்றெல்லாம் பெற்றோர் பலரும் உணர்கின்றார்கள். ஆனால் தம்முடைய வெறுப்பையும் ஆத்திரத்தையும் அடக்க முடியாமல் திட்டியும் அடித்தும் வளர்க்கின்றார்கள். இதுவே பழக்கமாகிவிடுகின்றது. பழக்கம் முதிர்ந்த பிறகும் சில வேளைகளில் எண்ணிப் பார்க்கின்றார்கள்; தம் தவறு நினைந்து வருந்துகின்றார்கள். ஆனாலும் பழக்கம் பொல்லாதது. "வேறு வழி இல்லை. நம்மால் இப்படித்தான் வளர்க்க முடியும்" என்று ஆறுதல் அடைய முயல்கின்றார்கள்.

குடிகாரர் வரலாறும் இப்படித்தான் வளர்கின்றது. தொடக்கத்தில் ஏதோ ஒருகாரணத்தால் குடிக்கத் தொடங்கிப் பிறகு படிப்படியாகப் பழக்கத்திற்கு அடிமையாகின்றார்கள்; குடியை விடமுடியாத நிலையை அடைகின்றார்கள். சளி பிடித்தது என்று இரண்டு மூன்று வேளை பொடி போடத் தொடங்கியவர்களே, மூக்குப் பொடி இல்லையானால் மூளை

வேலை செய்யாது என்னும் நிலையை அடைகின்றார்கள். தூண்டும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் இப்படியே பலர் அடிமையாகி விடுதலை இன்றி வருந்துகின்றார்கள். 'பழக்கம் பொல்லாதது' என்பதே இவர்கள் தம் மனச்சான்றினிடம் ஓயாமல் முறையிட்டுக் குறை கூறி ஆறுதல் பெறும் நெறியாகும்.

தனி வாழ்க்கையில் மட்டும் அல்லாமல் பொது வாழ்க்கையில் உள்ள தீமையையும் இவ்வாறே புறக்கணித்துவிடுவது மக்கள் இயல்பு. மஞ்சம் புல்லால் போர்த்த குடிசைகளே சில கிராமங்களில் தொடர்ந்து தெருத்தெருவாகக் காணப்படும். அந்தக் கிராமங்களில் தீப் பிடித்தால் நேரும் அழிவு போல் வேறு எங்கும் ஏற்படுவதில்லை. ஒரு மஞ்சம் புல் குடிசையில் தீப் பற்றினால், அதைக் கண்டு ஓடி அவிப்பதற்குள் அந்தத் தீ ஐந்தாறு குடிசைகளைக் கடந்து பரவிவிடும். அவ்வளவு விரைவில் தீப்பற்றி எளிதில் அழியக் கூடியது மஞ்சம்புல். அப்படிப்பட்ட கிராமங்கள் தீப்பற்றி எரியும் கொடுமை பொல்லாதது. ஒருமுறை இந்தக் கொடுமைக்கு ஆளானால், அந்தக் கிராம மக்கள் அத்தனை பேரும் "இனி மஞ்சம்புல்லை நாடவேகூடாது. அதைவிட எங்காவது மரத்தடியில் பெங்கித் தின்னலாம். கடன் பட்டாவது ஓடு வேய வேண்டும். இல்லையானால் பேசாமல் வீடு இல்லாமல் நடுத்தெருவில் நிற்கலாம்" என்று ஓயாமல் பேசிக்கொள்வார்கள். மறுநாளே எல்லாரும் சூளை போடுவார்களோ என்றும் தோன்றும். ஆனால் சில வாரங்கள் கழிந்து, சில மாதங்களும் கழிந்த பிறகு பார்த்தால், எல்லாரும் பழையபடி மஞ்சம்புல் குடிசைகளையே அழகாகக் கட்டிக்கொண்டு அமைதியாகக் காலம் கழிப்பதைக் காணலாம். வேறு வகையாக வீடு கட்டிக்கொள்ள முடியாத வறுமை ஒருகாரணமாக இருப்பது உண்மை

தான். ஆனால், கருப்பூரம் போல் பற்றி எரியும் மஞ்சம் புல் வீட்டில் கவலையில்லாமல் அமைதியாக வாழும் மனப்பான்மை வருவதற்குக் காரணம் என்ன? பழக்கத்தின் வன்மையே காரணம்.

ஜப்பானில் அடிக்கடி பூகம்பம் ஏற்படுவதையும் எரிமலை அழிவு விளைப்பதையும் அறிந்திருந்தும், அழிவுகள் ஏற்பட்டு முடிந்த பிறகு மக்கள் அமைதியாக வாழ்க்கையை நடத்துவதும் இப்படித்தான். அந்த நேரத்தில் அல்லல் படும்போது புதுப் புது எண்ணங்களும் அளவு கடந்த வெறுப்பும் ஏற்பட்டாலும், அழிவு நேர்ந்து முடிந்து சில வாரங்கள் கழிந்ததும் எல்லாம் மறந்துபோகின்றன; பழையபடியே வாழ முற்படுகின்றார்கள்.

பூகம்பமும் எரிமலையும் சில நாடுகளுக்கே உரியவை. ஆனால் நச்சுப் புகையும் அணுக்குண்டும் செய்யும் அழிவு வேலைகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை. அவைகளுள் அணுக்குண்டு அந்த ஜப்பான் நாட்டில் மட்டும் அழிவு வேலை செய்ய வேண்டுமா? சென்ற போரில் ஹிரோஷிமா, நாகசகி என்ற பகுதிகள் அடியோடு பாழாகி உயிர்களை எல்லாம் கொள்ளை கொண்டன. அவற்றுள் ஹிரோஷிமா என்ற பகுதியில் பொல்லாத அழிவு ஏற்பட்டிருப்பதை உணர்ந்திருந்தும், மக்கள் குடியேறத் தொடங்கினார்கள்; இப்போது 50000 வீடுகள் இருக்கின்றனவாம். 250000 மக்கள் வாழ்கின்றார்களாம். அணுக்குண்டின் அழிவுகள் நடைபெற்றுச் சில ஆண்டுகள் ஆகிவிட்டன. அதன் ஆண்டு நினைவை அங்கே கொண்டாடுகிறார்கள். (இதை ஆண்டு விழா என்று சொல்வதா? கொண்டாடுவது என்று சொல்வதுதான் பொருந்துமா? இறந்தவர்களை நினைந்து உருகுவதற்கு ஓர் வாய்ப்பை ஏற்படுத்துவதே இது.) இவ்வாறு நினைக்கும் அளவுக்கு

நிற்கின்றதே அல்லாமல், அணுக்குண்டு வீசிச் செய்யும் போர்க்கொடுமையை எண்ணி அதற்குக் காரணமான அரசியல் முறைகளை எதிர்த்து உலகத்தைக் காக்கும் படியான சீர்திருத்த முயற்சி உண்டா? அதுதான் இல்லை. கூட்டங்கள் கூடுவது, தீர்மானங்கள் நிறைவேற்றுவது, சில விநாடிகள் அமைதியாக எழுந்து நிற்பது எல்லாம் சடங்குபோல் நடைபெறும். பழைய படியே போர்த்தினவு கொண்ட தலைவர்களின் செல்வாக்கும் ஓங்கும்; போர்க்குக் காரணமான வித்துக்களும் விளைந்து செழிக்கும். இவற்றை அந்த ஜப்பான் நாட்டு மக்களோ, அல்லது வி—2 குண்டுக்கு இரையான இங்கிலாந்து நாட்டு மக்களோ, அல்லது எல்லாம் இழந்து அடிமைகளாய் இயங்கும் ஜெர்மனி நாட்டு மக்களோ எண்ணிப் பார்க்கின்றார்களா? இல்லை. நாள்தோறும் எப்படியோ வாழ்க்கையைக் கழித்துப் பழகிப் பழகி அவற்றை ஒருவாறு மறந்துபோகின்றார்கள். போர்ச் செயல்கள் எந்த வகையிலும் பூகம்பங்களை விட, எரிமலைகளைவிடக் கொடுமை குறைந்தவை அல்ல; ஆனால் பூகம்பங்களை எதிர்பார்த்து வாழ்வது போல, எரிமலைகளைப் பார்த்துக்கொண்டே வாழ்க்கையை நடத்துவது போல, போர்ப் படைகளைப் பெருக்குவதையும் அடக்குமுறைகளைப் பெருக்குவதையும் பார்த்துக்கொண்டே மக்கள் வாழ்ந்து வாழ்ந்து பழகுகின்றார்கள். பழக்கம் பொல்லாதது; ஆகையால், "உலகம் இப்படித்தான்" என்ற பழம் பாட்டைப் பாடவும் கற்றுக்கொள்கின்றார்கள்.

ஒரு கதை சொல்லப்படுகின்றது. பெரிய செல்வனாக வேண்டும், இரும்பை எல்லாம் பொன் ஆக்க வேண்டும் என்று ஆசைகொண்ட ஒருவனுக்கு ஒரு பெரியார் வழி கூறினாராம். கையில் ஓர் இரும்புத் துண்டைக் கொடுத்து, "இதைக் கையில்

வைத்துக் கொண்டு இந்த ஆற்றங்கரையில் தேடிப் பார். இங்கே ஒரு மந்திரக்கல் இருக்கின்றது. அந்தக் கல் பட்டவுடனே இந்த இரும்பு பொன்னுகிவிடும். அதைத் தேடி எடுத்துக்கொண்டால் உன் கவலை தீரும்" என்று சொன்னுராம். உடனே அவன் ஆற்றங்கரையில் உள்ள ஒவ்வொரு கல்லையும் எடுத் தெடுத்துப் பார்த்து இரும்பைப் பொன்னுக்கும் சிறந்த கல் கிடைக்காத காரணத்தால் அந்த ஒவ்வொரு கல்லையும் ஆற்றில் வீசி வீசி எறிந்துகொண்டிருந் தான். ஆயிரக்கணக்கான கற்களை வீசி எறிந்து எறிந்து கையும் நோகும் நிலை வந்தது. அப்போது வழக்கம்போல் ஒரு கல்லை எடுத்து இரும்புத் துண்டின் மேல் வைத்து ஆற்றில் வீசி எறிந்தான். உடனே அந்த இரும்பு பொன்னுகிவிட்டது. ஆனுல் அதைப் பொன்னுக்கிய அந்தக் கல் எங்கே? அது ஆற்றில் எத் தனையோ கற்களுக்கிடையே விழுந்துவிட்டது. எல் லாக் கற்களையும் வீசி வீசி எறிந்து பழக்கப்பட்ட கை அதையும் உடனே அப்படியே எறிந்தது; அதனுல் ஏழையின் கவலை முன்னைவிட மிகுதியாயிற்று. பழக்கம் பொல்லாதது என்பதை அவனுடைய கை மெய்ப்படுத்திவிட்டது.

பல ஆண்டுகள் தொடர்ந்து ஒரு தனித் தீவில் தனியே சிறையில் கிடந்தார் புரட்சிப் பேரறிஞர் ஒருவர். அவர் விதைத்த புரட்சி விளைந்து பயன்தரும் காலம் வந்தது; சிறையின் கதவுகள் திறக்கப்பட்டன. பேரறிஞரின் கண்ணும் கால்களும் சிறையிலேயே ஆண்டுக்கணக்காகப் பழகிவிட்டவை. வெளியுலகத் தை எட்டிப் பார்த்தார்; கண்கள் மீண்டும் சிறைக் குள் நோக்கின. வெளியே வருமாறு நடத்திச் செல்ல முயன்ருர்கள் அவரை விடுதலை செய்ய வந்தவர்கள்; ஆனுல் அவருடைய கால்கள் சிறை எல்லையை விட்டு

வெளிவரப் பின்வாங்கி மீண்டும் சிறைக்குள்ளேயே நடந்தன. அறிவு தெளிந்த பிறகுதான் அவரை வெளியே கொண்டுவர முடிந்தது. பழக்கம் பொல்லாதது என்பதைச் சிறைவாழ்க்கையும் காட்டியது.

நெடுங்காலமாக இந்த நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது.

அடிமை நாடாக இருந்த காலத்தில் நம் எண்ணத்திலும் செயலிலும் பல தீமைகள் குடி புகுந்திருந்தன; அவை வாழ்வில் பழக்கப்பட்டு வேரூன்றியிருந்தன. விடுதலை எய்தி உரிமை பெற்று வாழும்போது அவை அணுகாமல் வாழ்வதே கடமையாகும். உரிமை உணர்வு மிக்க புலவர்களும் தொண்டர்களும் அவ்வாறு விழிப்போடு வாழ வல்லவர்கள்.

பெறுவதற்கு அரிய உரிமை பெற்ற பின்பும் அடிமை மனப்பான்மையை உதற முடியாமல் வருந்துவது, சிறை வாழ்வு முடிந்த பின்பும் சிறையை நோக்கி நடப்பதைப் போன்றது. பெற்ற உரிமையைப் போற்றாமல் புறக்கணிப்பது, பொன்னாக்கும் மந்திரக் கல்லைப் பெற்ற பின்பு ஆற்றில் எறியும் கொடுமைக்கு நிகரானது. உணர்வுலகத்தில் உரிமையோடு வாழும் புலவர்கள் பொது மக்களுக்கு விடாமல் உணர்த்தி வருவது இதுவே ஆகும். பாரதியார் அந்தக் கடமையை முன்னமே உணர்ந்து உணர்த்தியிருக்கின்றார். உரிமை பெற்ற பிறகும் ஏய்ப்போருக்கு ஏவல் செய்தல், ஏற்போரைப் பணிதல், உழவையும் தொழிலையும் நிந்தனை செய்தல், வீணில் உண்டு களித்திருப்போர்க்கு வந்தனை செய்தல் முதலிய அடிமை வாழ்க்கைப் பழக்கங்கள் தொலைய வேண்டும் என்றே வற்புறுத்திப் பாடியிருக்கின்றார். இவை உண்மையாகவே தொலைந்தால்தான் அடிமை வாழ்க்கைப் பழக்கங்கள் அறவே அகன்றன என்று நம்ப முடியும். இல்லையானால்,

சுதந்தரப் பள்ளுவைப் பாடுவது வெறு வாயளவில் நிற்பதாக முடியும்; அதனுல் வாழ்க்கையில் முன்னேற்றம்காண முடியாமல் போகும். குண்டுகளை உண்டாக்கும் தொழிற்சாலைகளைக் கண்ணுல் பார்த்துக்கொண்டே அமைதியாக வாழ்வதைப் போல் வாழும் வாழ்வில் பயனில்லை. அடக்குமுறையும் கொடுங்கோன்மையும் அழிவுவேலைகளும் சூழ்ந்துள்ள சூழலில் விழாக் கொண்டாடிய நாடுகள் என்ன என்ன அல்லலுக்கு இரையாயின என்பதை உலக வரலாறு எடுத்துரைக்கின்றது. ஆகையால், நாம் அப்படிப்பட்ட பொருளற்ற விழாக் கொண்டாடாமல், உரிமையைத் தெளிந்து உணர்த்திய புலவர் காட்டிய வழியில் நின்று எண்ணி உணர்ந்து உள்ளத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

அடிமை மனம் நீங்குவதற்கு அறிகுறி இப்படி உள்ளம் உணர்ந்து திருந்துதலே ஆகும்.

## 9. உரிமையின் அடையாளம்

"வேண்டாம்" என்ற சொல்லைக் குழந்தையிடம் அடிக்கடி ஆளுதல் கூடாது என்று உளநூலார் வற்புறுத்திக் கூறுகின்ருர்கள். குழந்தை ஒன்றைச் செய்யும்போது, "அதைச் செய்ய வேண்டாம்" "இதைச் செய்யக் கூடாது" என்று சொல்லித் தடுப்பதே பொதுவாக எங்கும் உள்ள வழக்கம். அவ்வாறு தடுப்பதால்தான் குழந்தையின் மனம் கெட்டுப் போகின்றது என்று உளநூலார் சொல்கின்ருர்கள்.

"அதைச் செய்ய வேண்டாம்" என்று சொல்லித் தடுத்தால், உடனே அதைத்தான் செய்ய வேண்டும் என்றும், எப்படியாவது செய்து தீரவேண்டும் என்றும் குழந்தையின் மனத்தில் ஆசை எழுகின்றது. அதனுல், அவ்வாறு தடுக்காமல், வேருென்றை நினைவூட்டி, அல்லது காண்பித்து, "இதைச் செய்" என்று குழந்தையின் மனத்தைத் திருப்பினுல், நன்மை விளையும். குழந்தைக்கு எதிர்ப்புணர்ச்சியும் வளராது; குழந்தையின் மனமும் கெடாது.

இதற்குக் காரணம் என்ன? "வேண்டாம்" என்ற வாய்பாடு இவ்வளவு தீமை விளைக்கக் காரணம் என்ன?

உரிமை வேறு, உயிர்வாழ்க்கை வேறு அல்ல. அறிவு வளர வளர, உணர்வு திருந்தத் திருந்த, உரிமையே உயிர்வாழ்க்கை ஆகிவிடும். இதன் அடிப் படையே குழந்தையின் மனநிலையில் காணப்படுவது.

செடி நேராக வளர்வது; வானை நோக்கி எழுந்து உயர்ந்து வளர்வது. ஆனால், மேலே உயர முடியாமல் தடை இருந்தால், அது வளைகின்றது; கோணி வளர் கின்றது; குறுக்கே செல்கின்றது.

குழந்தையும் அப்படித்தான். தான் எண்ணி யதைச் செய்யலாம் என்று எதையோ செய்யத் தொடங்குகின்றது. உலகம் அதற்குத் தடை செய் தால், அதை எப்படியாவது செய்து தீர வேண்டும் என்று தந்திர வழியை நாடுகின்றது; உண்மையும் நேர்மையும் இயல்பாக அமைந்த குழந்தையின் மனத் தில் மாறான பண்புகள் வளரத் தொடங்குகின்றன.

அம்மா தடுத்தால், குழந்தை அம்மா இல்லாத வேளையை எதிர்பார்க்கும். அப்பா தடுத்தால், அப்பா இல்லாத வேளையை எதிர்பார்க்கும். தடை செய்த காரணத்தால், அந்த வேலையை முன்னிலும் பல மடங்கு ஆர்வத்தோடு செய்யக் காத்திருக்கும். தடுத்தவர்களிடம் அன்பும் நம்பிக்கையும் தன்னை அறியாமல் குறையும். இவ்வளவு மாறுதல்களும் குழந்தையின் மனத்தில் ஏற்படக் காரணம் என்ன? தடை, தடை, உரிமைக்குத் தடை என்பது ஒன்று தான்.

குழந்தைக்கு உணவு இல்லையா? அதன் மனம் கெடும்; ஆனால் இவ்வளவு மிகுதியாகக் கெடாது. விளையாட்டுப் பொருள்கள் இல்லையா? அப்போதும்

இவ்வளவு மிகுதியாகக் கெடாது. ஆனால் உரிமை இல்லையானால் குழந்தையின் மனம் அடியோடு கெட்டுப் போகின்றது.

இது குழந்தை உலகம். பொதுமக்கள் விளையாடும் அரசியல் உலகமும் இப்படித்தான். ஒரு நாட்டில் உணவு போதவில்லையா? மக்களுள் பொறுமை மிகுந்தவர்கள் பட்டினியால் சாவார்கள். அதனால் பெரும் புரட்சி ஏற்படுவதில்லை. ஒரு நாட்டில் உடைப்பஞ்சம் இருக்கின்றதா? செல்வாக்கற்ற மக்கள் கந்தல் உடுத்துத் திரிவார்கள். அதனாலும் பெரும் புரட்சி ஏற்படுவதில்லை. மற்ற நாகரிகப் பொருள்கள் இல்லையா? பெரும்பாலான மக்கள் அதைப் பற்றிக் கவலைப் படுவதே இல்லை. இவ்வளவு குறைகளையும் பல ஆண்டுகளாக அனுபவித்து வந்த நம் நாடே இவற்றிற்கு நல்ல சான்றாகும்.

ஆனால், நாட்டில் உரிமை இல்லையா? எண்ணியதை வெளியே சொல்ல உரிமை இல்லையா? அந்நிலையில் பொதுமக்களின் மனம் கெட்டுப்போவது திண்ணம். அதன் பயனாக மக்கள் உண்மை அற்றவர்களாக, நம்பிக்கை குறைந்தவர்களாக, அமைதி குலைந்தவர்களாக மாறுவது திண்ணம். பண்பாடு இல்லாமல் மற்றவர்களைப் பழித்துப் பேச முற்படுவார்கள். இரக்கம் இல்லாமல் மற்றவர்களைத் தாக்க முனைவார்கள். இருக்குமிடம் தெரியாமல் அமைதியும் அறமும் ஒதுங்கிக் கிடக்க, ஆத்திரமும் வெறியும் எங்கும் ஓங்கி நிற்கும். மக்கள் மக்கள்தன்மை இழந்து விலங்குகள் போல் அஞ்சியும் அச்சுறுத்தியும் வாழ்வார்கள்.

குழந்தை தவறு செய்கின்றது என்றுதான் பெற்றோர் தடுக்கின்றார்கள்; "வேண்டாம்" வாய்ப்பாட்டைக் கையாளுகின்றார்கள். இந்த நல்லெண்ணம்

தான் குழந்தையின் உரிமையைப் பறிக்கின்றது; இந்த நல்ல நோக்கம்தான் குழந்தையின் மனத்தைப் பாழ்படுத்துகின்றது.

பொதுமக்களைத் திருத்த வேண்டும் என்றுதான் அரசியல் தலைவர்கள் முயல்கின்றார்கள்; மற்றக் கட்சியின் வல்லமையைக் குறைக்க முயல்கின்றார்கள். பத்திரிகைள் வாயிலாக ஒருதலையான பிரசாரமும் செய்கின்றார்கள். ஆட்சி முறையில் இடம் இருந்தால் தடையுத்தரவுகளும் அவசரச் சட்டங்களும் பிறப்பிக்கின்றார்கள். எல்லாம் "வேண்டாம்" வாய்பாடுதான்; திருத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தால் உரிமைக்குச் செய்யும் தடைதான். பொதுமக்களின் மனத்தைக் கெடுத்துவிட வேண்டும் என்று எவரும் விரும்புவதில்லை; ஆனால் அது கெட்டுவிடுகின்றது. அறமும் அமைதியும் நிலவும் என்ற நிலை போய் ஆத்திரமும் வெறியும் ஓங்கிவிடுகின்றன. கொடுமை செய்தால் அல்லாமல் வேறு வழி இல்லை என்ற எல்லைக்குப் பொதுமக்களின் மனம் கெட்டுப் போகின்றது. மதம் நாடு முதலான தூய பெயர்களைச் சொல்லிக்கொண்டு பொல்லாத கருவிகளை ஏந்தித் திரியும் நிலைமை நேர்கின்றது.

ஆகையால், அரசியல் தலைவர்களுக்கு நல்ல எண்ணம், நல்ல நோக்கம் மட்டும் இருந்தால் போதாது. நல்ல நெறியும் வேண்டும். அந்த நெறி எது? பொதுமக்களின் மனம் அறிந்து நடப்பதே ஆகும்; தவறே ஆயினும், வல்லமை கொண்டு தடுக்காமல், உரிமை கொடுத்துத் திருந்த இடமளிப்பதே ஆகும்; கட்சி வல்லமையைப் பொருளாகக் கருதாமல் நாட்டு அமைதியையே நாடித் தொண்டு செய்வதாகும்.

உணவுப் பஞ்சமும் உடைப் பஞ்சமும் போக்க வழி வகுத்த நாடு உரிமைப் பஞ்சத்திற்கு இடம்

கொடுக்காமல் காத்துக்கொள்ளுமா ? உணவு இல்லை, உடை இல்லை என்று முணுமுணுத்துக்கொண்டே மக்கள் பல ஆண்டுகள் கழித்திடமுடியும். ஆனால் உரிமை இல்லை என்று மக்கள் முணுமுணுத்துக் கொண்டிருப்பது வழக்கமில்லை. காலம் வந்தபோது நாட்டின் அமைதியைக் குலைத்து அழிவு வேலையில் இறங்குகிறார்கள் என்பது வரலாறு தெரிவிக்கும் உண்மை. அந்த அழிவு வேலை இனி இல்லாமல் போக வேண்டும். அதுதான் உரிமை உண்டு என்பதற்கு நல்ல அடையாளம்.

# 10. நம் குற்றம்

எல்லா நாடுகளிலும் மக்களிடையே பிரிவுகள் உண்டு; இந்த நாட்டிலும் உள்ளன. இதில் ஒன்றும் வியப்பு இல்லை. ஆயினும், வருந்தத்தக்க குறை நம்மிடம் உள்ளது. பிறப்பின் காரணமாக எழுந்த வேறுபாடுகளைப் பல நூற்றுண்டுகளாக வளர்த்து விட்ட குற்றம் நம்முடையது. இந்த குற்றத்துக்காக நாம் வருந்த வேண்டாமா? சாதி முதலான பிரிவுகள் இப்படிப்பட்டவை ஆகும்.

தென் ஆப்பிரிக்காவில் நிற வேறுபாடு தலை விரித்தாடுவதை நாம் கேள்விப்படுகின்றோம்; கேள்விப்படும் போதெல்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதுபோலவே, நமக்குள் வாழ்ந்துவரும் காரணமற்ற வேற்றுமைகளைக் கண்டிப்பதில் தயங்கக் கூடாது. பேச்சளவிலே நிற்காமல் செயலளவிலும் கடிந்து தொலைக்க வேண்டும். நமக்குள் நிலவும் வேறுபாடுகள் நம்மோடு நெடுங்காலமாக இருந்து விட்டன என்று காரணம் தேடி அமைதியடையக் கூடாது. பிறருடைய குற்றம் காண்பதற்கு முன் தம் குற்றம் கண்டு நீக்க வேண்டும் என்று திருவள்ளுவர்

அறிவுறுத்தியது சிறப்பாக அரசியலாளர்க்கு வேண்டிய அறிவுரையாகும்.

**ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு ?**

என்று எல்லோருக்கும் பொதுவாக அறத்துப்பாலில் அறமாக அறிவுறுத்தினர். ஆனால்,

**தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்**
**என்குற்றம் ஆகும் இறைக்கு ?**

என்று அரசியலில் ஆள்வோர் கடமையாக வற்புறுத்தியுள்ளார்.

பிறப்பின் காரணமாக வளர்ந்துள்ள வேறுபாடுகள் என்று எண்ணும்போது பற்பல வந்து நிற்கின்றன. அவை அத்தனையும் தொலைக்கத்தான் வேண்டும். அப்போதுதான் பிறநாட்டு நிறப் போர், இனப்போர் முதலியவற்றைக் கண்டிக்கும் உரிமை நமக்கு ஏற்படும்.

பிறப்பு வேற்றுமை பலவற்றுள்ளும் முதலில் நிற்பது ஒன்று உண்டு. அதுதான் இந்த நாட்டின் முதல் மாசு ; இந்த நாட்டின் வரலாற்றின் பெருமை முழுதினையும் மறைத்துவிடும் பெருங் குற்றம் அதுவே.

இந்த நாடு வகுப்பு வாதம் காரணமாகப் பிரியக் கூடாது என்று முழங்குகின்றோம். இந்த நாடு சாதிப் பிரிவுகளைப் பாராட்டிப் பதவி வேட்டையாடக் கூடாது என்று கூக்குரலிடுகின்றோம். இந்த நாடு மத வேற்றுமைகளை அரசியலில் கொண்டுவந்து சிக்கல் விளைக்கக் கூடாது என்று அலறுகின்றோம்.

'வேற்றுமைகள்' வேண்டாம் என்று தவம் கிடக்கின்றோம். குழப்பங்கள் தோன்றாதபடி பெருங்

கவலை கொண்டு பாடுபடுகின்றோம். 'பாகிஸ்தான்' முதலான 'ஸ்தான்'களைப் பற்றிப் பேசுவதும் பெரும் பாவம் என்று போராடுகின்றோம்.

ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு வகை ஸ்தானுக்கு இடம் கொடுத்து வந்திருக்கின்றோம். அந்தப் பாகிஸ்தான் மதம் காரணமாக எழுந்தது அல்ல; இனம் காரணமாக எழுந்தது அல்ல. அந்த 'ஸ்தானில்' வகுப்புவாதமோ பதவி வேட்டையோ அடிப்படையில் இல்லை. அந்த 'ஸ்தான்' சாதி காரணமாக – பிறப்புக் காரணமாக அமைந்தது. அந்த ஸ்தான் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்துவருவதை இப்போதாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா? இந்தநாட்டிலே சிறிய சிறிய ஊர்களில் எல்லாம், ஒவ்வொரு சிறிய கிராமந் தோறும் ஒருவகை 'ஸ்தான்' பிறப்புக் காரணமாக நீடித்து வாழ இடங் கொடுத்து வந்திருக்கின்றோம் என்பதை உணர வேண்டாமா?

ஊர் என்றால் சேரி என்று ஒன்று கிராமந்தோறும் இருப்பதை வேறு என்ன என்று சொல்வது? அந்தச் சேரியில் உள்ள மக்கள் எந்த மாநகரிலும் மாநாடோ அல்லது அரசியல் மன்றமோ கூடித் தனியரசு வேண்டும் என்று ஊர்தோறும் 'ஸ்தான்' 'ஸ்தா'னுகப் பிரியவில்லை. அவர்கள் அப்படி வாழ விரும்பியதாக வரலாற்றுப் போக்கிலும் இல்லை.

ஆனால் பிறப்பின் காரணமாகத் தொழில் அமைந்தது. அது எந்த நூற்றாண்டிலோ எப்போதோ அமைந்துவிட்டது. அந்தத் தொழிலுக்கே பொழுதையெல்லாம் செலவழித்து வாழும் நிலைமை அவர்களுக்கு நேர்ந்துவிட்டது. தங்களைப் பற்றித் தாங்களே எண்ணி வாழும் பொறுப்பை அவர்கள் அந்தப் பழங்காலத்தில் இழந்து சோர்ந்துவிட்டார்கள்.

அளவு மீறி உடலால் உழைத்து உழைத்து அறிவு வளர்ச்சியில் பிற்போக்கு அடைந்துவிட்டார்கள். மிகுதியாக உழைக்காத மற்ற மக்கள் மூளை கொண்டு எண்ணிப்பார்க்க நேரமும் ஓய்வும் பெற்றிருந்தார்கள். அதனால் தங்களுக்கு உயர்வும் சிறப்பும் நன்மையும் தேடிக்கொண்டு, அந்த உழைப்பாளிகளுக்கு இழிவும் அவர்களின் தொழிலுக்குத் தாழ்வும் கற்பித்தார்கள்.

சுருங்கச் சொன்னல், பல நூற்றுண்டுகளுக்கு முன்னே நம்முடைய முன்னேர்களில் சிலர் மிகுதியாக உழைத்து ஒதுங்க நேர்ந்தது. பிறப்பு வேற்றுமை இதனை நிலைபெறச் செய்துவிட்டது. இதன் பயனக, இன்று ஊர்தோறும் இரண்டு 'ஸ்தான்'கள் காண் கின்றேம். ஒன்று 'சாதிஸ்தான்'; மற்ருென்று 'சேரிஸ்தான்'.

இதை வளர்த்த குற்றம் நம் முன்னேருடையது. அவர்களை இப்போது என்ன செய்வது?

இந்த 'ஸ்தான்'களை இன்னும் வைத்துக்கொண் டிருப்பது யார் குற்றம்? நம் குற்றமே அல்லவா?

## 11. உலகம் உண்டு

உலகம் பொல்லாதது, உலகம் பொல்லாதது என்று எல்லாரும் முறையிடுகிறார்கள். ஏன் பொல்லாதது ஆயிற்று என்று எண்ணுவார் ஒருவரும் இல்லை. உண்மைக்குக் காலம் இல்லை, நியாயத்துக்குக் காலம் இல்லை, நன்மைக்குக் காலம் இல்லை என்று எல்லோரும் குறை சொல்கிறார்கள். காலம் ஏன் எப்படிக் கெட்டுவிட்டது என்று ஆராய்கிறவர் ஒருவரும் இல்லை.

உலகம் என்பது ஒன்று தனியாக எங்கோ இல்லை. காலம் என்பதும் ஒன்று தனியாக இல்லை. மக்கள் வாழும் வாழ்க்கையைப் பொறுத்தே உலகத்தின் நிலைமையும் காலத்தின் நிலைமையும் மாறி மாறி அமைகின்றன. அதனால், உலகம் பொல்லாதது என்று உலகத்தைப் பழிப்பதை விட்டு, வாழ்க்கையை நடத்தும் மக்களைப் பழிக்க வேண்டும். காலம் கெட்டு விட்டது என்று காலத்தைப் பழிக்காமல், மக்களின் வாழ்க்கையைப் பழிக்க வேண்டும். புகழும் போதும் இப்படித்தான் செய்ய வேண்டும்.

ஔவையார் என்னும் பெரும் புலவர் இது போன்ற கருத்தை வற்புறுத்தியிருக்கிறார். நாடு அல்லது காடு, மேடு அல்லது பள்ளம் என்னும் இந்த வெளித் தோற்றத்தைக் கண்டு யாராவது நல்ல நிலம் கெட்ட நிலம் என்று பிரிக்கிறார்களா? அவ்வாறு பிரிப்பதுதான் பொருத்தம் ஆகுமா? மக்கள் எந்தப் பகுதியில் நல்லவர்களாக விளங்கிச் சிறந்த வாழ்வு வாழ்கிறார்களோ, அந்த நிலப் பகுதியை நல்ல நிலம் என்று கூற வேண்டும். எங்கே நல்ல மக்கள் இல்லையோ, அந்த நிலப் பகுதியை நல்ல நிலம் என்று கூற முடியாது—இதுதான் அந்தப் புலவர் வற்புறுத்தியுள்ள கருத்து.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

(புறநானூறு - 187)

இப்படிப்பட்ட ஆராய்ச்சியை இன்றும் செய்ய வேண்டும். செய்த பிறகுதான் உலகத்தையும் காலத்தையும் பழிக்கலாம். கண்மூடி வாய்பாடுகளால் பழித்துப் பேசுவதால் பயன் விளையாது.

உலகம் நல்ல உலகமாக விளங்க வேண்டும் என்று அரசியல் சட்டங்கள் ஏற்பட்டன. நாடுதோறும் அப்படிப்பட்ட சட்டங்கள் ஏற்படுத்தித்தான் ஆட்சி நடந்துவருகிறது. அமைதியும் ஒழுங்கும் எங்கும் வாழ வேண்டும் என்றே சட்டங்கள் அமைந்தன. ஆனால், சட்டங்கள் அழியாமல் இருக்கின்றன; அமைதி ஒழுங்கு முதலியவை அழிந்துவருகின்றன. அதன் காரணம் என்ன? சட்டங்கள் சிலரிடம் செல்கின்றன; சிலரிடம் செல்வதில்லை. ஏழைகளைமட்டும் சட்டங்

கள் அடக்கி நசுக்குகின்றன; செல்வர்களைக் கண்டதும் அந்தச் சட்டங்களே அடங்கி நசுங்குகின்றன. ஏழைகள் சட்டங்களுக்கு அஞ்சுகிறார்கள்; செல்வர்கள் சட்டங்களை விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஏழைமக்கள் கொண்டால் திருடு என்று பெயர்; செல்வர்கள் செய்தால் வியாபார முறை என்று பெயர். ஏழைகள் ஒழுக்கம் கெட்டால் விபசாரம் என்று பெயர்; செல்வர்கள் ஒழுக்கம் கெட்டால் நாகரிகப் புதுமை என்று பெயர். ஏழைகள் புளுகினால் பொய் என்று பெயர்; செல்வர்கள் புளுகினால் தந்திரம் என்று பெயர். இவ்வாறு சட்டங்கள் ஏழைகளுக்கு ஒரு வடிவிலும், செல்வர்களுக்கு மற்றொரு வடிவிலும் பயன்படுகின்றன. இவற்றை விளக்குவதற்காக அறிஞர் பெர்னார்ட்ஷா சிறைச்சாலைகளைச் சுட்டிக் காட்டி, அங்கெல்லாம் ஏழைமக்கள் நெடுங்காலம் இருப்பதையும், செல்வர்கள் மட்டும் நுழைந்தவுடனே விடுதலை பெற்று வெளியேறுவதையும் விளக்குகிறார். ஆகையால், பணம் இருக்கும் பக்கமாகச் சட்டங்கள் திரும்புகின்றன. இப்படிப்பட்ட சட்டங்கள் எப்படி அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி உலகத்தைத் திருத்த முடியும்?

இந்தச் சட்டங்களைச் செய்கிறவர்கள் யார்? முன்னெல்லாம் அரசர்களும் அமைச்சர்களும் சட்டங்களைச் செய்துவந்தார்கள். சில வேளைகளில், அறிஞர்கள் வழிகாட்டிவந்தார்கள். அவர்கள் எல்லோருமே பொதுமக்கள் என்ன எண்ணுவார்கள் என்று ஆராய்ந்து பார்த்தே அந்தச் சட்டங்களை இயற்றினார்கள். சுருங்கக் கூறினால், முற்காலத்தில், சட்டங்களுக்கும் பொதுமக்களின் எண்ணங்களுக்கும் உறவு இருந்துவந்தது; அது மறைமுகமான உறவு.

இப்போது சட்டங்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ள உறவு, நேர்முகமான உறவு. இதுதான் குடியரசால் விளைந்த பயன். இப்போது சட்டங்கள் இயற்றுகிறவர்கள் அரசர்களும் அல்ல; அமைச்சர்களும் அல்ல; பொதுமக்களே. அந்தப் பொதுமக்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அவர்கள் ஒரு சபையாகக் கூடிச் சட்டங்களைச் செய்கிறார்கள். அதனால் தான் அந்தச் சபைக்குச் சட்டசபை என்று பெயர்.

அப்படியானால், நல்ல சட்டங்களை இயற்றி உலகத்தைத் திருத்தலாமே, அந்தப் பொறுப்புப் பொதுமக்கள் கையில் தானே இருக்கிறது என்று கேட்கலாம். அங்கும் ஓர் உண்மை விளங்குகிறது. பொதுமக்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் இல்லை. அதனால்தான் ஊழல் இருந்துவருகிறது. பொதுமக்கள் இன்னும் தாங்களாக எண்ணிப் பார்க்கும் திறமை பெறவில்லை. நாளைக்கு என்ன நடக்கும் என்று அப்பால் எட்டிப் பார்க்கும் பார்வையும் பொதுமக்களுக்கு இன்னும் வரவில்லை. வருமானால், உலகம் உடனே திருந்திவிடும். வரும் வரையில் அல்லல் இருந்தே தீரும்.

இதற்கு உதாரணமாக ஒன்று பார்ப்போம்: ஏழைமக்கள் பலருக்குப் பல தீமை செய்கிறான் ஒருவன். ஆனால், அவனே நிறையச் செல்வம் சேர்த்துப் பணக்காரன் என்று புகழும் பெற்று ஒரு பொது நிலையக் கட்டிடம் கட்டிவிடுவானானால், பொதுமக்கள் எல்லோரும் அவனைப் புகழ்கிறார்கள். இதனால், பொதுமக்களின் மனம் இன்னும் ஆற்றல் பெறவில்லை என்பது தெரியவில்லையா?

உடம்பைக் கொண்டோ, மூளையைக் கொண்டோ ஒருநாளும் ஒருவகை உழைப்பும் செய்யாத ஒருவனை

எடுத்துக்கொள்வோம். அவன் மற்றவர்களின் உழைப்பையெல்லாம் காசாக மாற்றிப் பெட்டியில் சேர்த்துவைக்கிறான். பல லட்ச ரூபாய் சேர்ந்த பிறகு சில ஆயிரம் செலவு செய்து ஒரு கோவில் கட்டுகிறான், அல்லது ஒரு திருவிழாச் செய்கிறான். உடனே, பொது மக்கள் அவனைப் புகழ்ந்து பாராட்டுகிறார்கள். யாருடைய உழைப்பு, யாருடைய வியர்வை, யாருடைய முயற்சி என்று எண்ணிப் பார்க்கும் மனம் இன்னும் பொதுமக்களுக்கு வரவில்லை.

திருக்குறளில் அறத்துப்பாலில் சொன்ன விதிகள் எல்லாவற்றையும் மீறி நடந்து ஒருவன் வாழ்க்கை நடத்துகிறான். அவன் ஏழையாக இருக்கும்வரையில் அவனை எல்லோரும் பாவி என்று பழிக்கிறார்கள். கொலைஞன், திருடன், குடிகாரன், காமுகன், பொய்யன், அறமில்லாதவன் என்று அவனை எல்லோரும் கடிகிறார்கள். அவனே எப்படியோ செல்வம் சேர்த்து முன்னுக்கு வருகிறான். ஆனால், பழைய கெட்ட வாழ்க்கை மாறாமல் அப்படியே வாழ்ந்துவருகிறான். அப்போது, அவனைக் கொலைஞன், திருடன், பொய்யன் என்று ஒருவரும் பழிப்பதில்லை. அதற்கு மாறாக அவனைப் புகழ்ந்து பணிகிறார்கள். அவன் இட்டவேலைகளையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அறநூல்களைப் பாராட்டும் திருவிழாக்கள், அறநிலையத் திறப்புவிழாக்கள், அறவோர் நினைவு நாட்கள் முதலியவற்றிற்கு அவனையே தலைவனாக்கி, அவன் திருவடியின்கீழ்க் காத்துக்கொண் டிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் அறம், அமைதி, ஒழுங்கு எல்லாம் கெடுவதற்குத் தாங்களே காரணமாக இருந்துவிட்டு, உலகம் பொல்லாதது என்றும், காலம்

கெட்டுவிட்டது என்றும் பொருள் தெரியாமல் பழிக்கிறார்கள்.

சட்டங்களும் வலிமை இழந்த நிலையில், பொது மக்களும் ஆற்றல் பெறாத நிலையில், உலகம் திருந்த வழி இல்லை என்று சோர்வடையக் கூடாது. முற்காலத்திலும் அறிஞர்கள் உலகத்தைக் காப்பாற்றினார்கள். இக் காலத்திலும் அறிஞர்கள் அவ்வாறு காப்பாற்ற முயல்கிறார்கள். அதன் பயன்தான் அங்கங்கே நடக்கும் இயக்கங்களும் கிளர்ச்சிகளும்.

முற்காலத்தில் அறிஞர்களின் கடமை எளியது. அப்போது, சிலர் அமைச்சர்களாக அமைந்துவிட்டால் போதும். சட்டங்களையும் ஏற்படுத்தி, அந்தச் சட்டங்கள் நேர்மையாக ஆளும்படியாகவும் செய்ய அவர்களால் அப்போது முடிந்தது. இப்போது, அவர்கள் பொதுமக்களைத் தட்டி எழுப்பி, தூண்டிவிட்டு, இயக்கம் அமைத்து, கிளர்ச்சி விளைக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், முற்காலத்தில் ஆள்வோர் சிலர்; ஆளப்படுவோர் பலர். இக்காலத்தில் எல்லோரும் ஆள்வோர்; எல்லோரும் ஆளப்படுவோர். எல்லோரும் குடிமக்கள்; எல்லோரும் முடிமன்னர். இதுதான் குடியரசின் இயல்பு: இதனால்தான் இயக்கங்களும் கிளர்ச்சிகளும் வேண்டியிருக்கின்றன.

அறிஞர்கள் அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரையில் ஒரே நெறியில் வாழ்க்கையைக் கோலி வருகின்றார்கள். அன்று வற்புறுத்திய உண்மைகளை இன்றும் வற்புறுத்திவருகிறார்கள். ஆனால், அன்று சிலர் மட்டும் திருந்தி, நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் இருந்தால் போதும்; மற்றவர்கள் அவர்களைப் பார்த்துக் கண்மூடி நடந்தால் போதும் என்று நம்பினார்கள். அந்த நம்பிக்கை தோற்றுவிட்டது.

பல பரீட்சைகளில் அது தவறிவிட்டது; பல முறையும் தோற்றுவிட்டது. அதனால்தான் இப்போது அறிஞர்கள் குடியரசு முறையை வற்புறுத்துகிறார்கள். எல்லோரும் உரிமை பெற்றால்தான், எவரும் ஏமாறாமல் வாழ வழி உண்டு என்று எடுத்துரைக்கிறார்கள். எல்லோரும் வல்லவர்களாக ஆனால்தான், எவரும் ஏங்காமல் வாழ முடியும் என்று விளக்குகிறார்கள். எல்லோரும் வல்லமை பெற்றால்தான், எல்லோரும் நல்லவர்களாக வாழக் கூடும் என்று தெளிவாகச் சொல்கிறார்கள். அப்போதுதான் உலகம் நல்லது, காலமும் நல்லது என்று காண முடியும் என்பது அவர்கள் பெற்றுள்ள புதிய நம்பிக்கை.

இந்த முயற்சியில் சட்டங்கள் தோற்ற பிறகும், பொதுமக்கள் சோர்ந்த பிறகும் அறிஞர் சிலர் பின் வாங்கவில்லை; அவர்களிடம் தளராத உறுதி இருந்து வருகின்றது. அதுதான் அவர்களுடைய மனச்சான்றின் உறுதி. சட்டங்கள் பணத்துக்குப் பணிந்துவிட்டன; பொதுமக்கள் பணத்துக்குப் பணிந்துவிட்டார்கள்; ஆனால், இந்த அறிஞர் பணியவில்லை. பணம் பெரியது அல்ல, குணமே பெரியது என்று தொன்றுதொட்டுச் சொல்லிவருகிறார்கள். அறத்தை வணங்கு, அதிகாரத்தை வணங்காதே என்று அன்று முதல் வலியுறுத்திவருகிறார்கள். சட்டங்கள் குணத்தைவிட்டுப் பணத்தின் பின்னே சென்றன. பொதுமக்கள் அறத்தை வணங்காமல், அதிகாரத்தை வணங்கினார்கள். இந்த அறிஞர்கள் மட்டும் மனச்சான்றின் வழியில் உறுதியோடு நின்றார்கள். இந்தச் சான்றோர்களால்தான் உலகம் திருந்தப்போகிறது.

உலக வாழ்க்கையைக் கெடுக்கவும் எடுக்கவும் ஆற்றல் பெற்றுள்ளவை மூன்று: சட்டம், பொதுமக்களின் போக்கு, சான்றோரின் மனச்சான்று. இம்

மூன்றும் மூன்றுவகை வேலிகள். சட்டம் உளுத்தால் பொதுமக்கள் தாங்கலாம்; பொதுமக்கள் ஏமாந்து கலங்கினுல் சான்றோர் தாங்குவது திண்ணம். சான்றோரின் மனச்சான்றே உண்மையான வேலி. இதனுல்தான் திருவள்ளுவர் அவர்களைப் போற்றும் போது, "பண்புடையவர்கள் இல்லையானுல், உலகம் எப்போதோ மண்ணுய் மறைந்து அழிந்து போயிருக்கும்" என்ருர்.

**பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.**

(திருக்குறள்)

## 12. எது கடமை ?

வாழ்க்கை நடத்துவதற்குப் பொருள்கள் பல வேண்டும். அரிசி காய் கனி முதலியவை வேண்டும். உடை வீடு முதலியவை வேண்டும். காசும் காகித நோட்டும் வேண்டும். இன்னும் பல வேண்டும். இவற்றை ஆளும் அறிவு வேண்டும். இதற்குக் கணக்கு அறிவு வேண்டும். இதை அளவுக்குமேல் கற்றுள்ளவர்கள் பலர் இருக்கிருர்கள். விரிவாகக் கற்பிக்கும் கல்விமுறையும் எங்கும் இருக்கிறது.

வாழ்க்கைக்கு இவை மட்டும் இருத்தல் போதாது. வாழும் உடலுக்கு நல்ல நிலே வேண்டும்; அதாவது உரமும் நலமும் வேண்டும். உடலே உரமாகவும் நலமாகவும் வைத்திருக்க உதவும் அறிவு எல்லோருக்கும் சிறிதளவு உண்டு. ஆனுல் அது போதாது. இந்த அறிவைச் சிலர் மட்டும் வளர்த்து வைத்தியர்களாக விளங்குகிருர்கள். அவர்களின் கையில் உடம்பை ஒப்படைத்துவிட்டு, அவர்களின் சொற்படி நடப்பதே பலருக்கும் பொது வழியாக - எளிய வழியாக - இருக்கிறது.

வாழ்க்கைக்குப் பொருளும் உடம்பும் மட்டும் போதுமா? மனமும் வேண்டும். அந்த மனத்தைப்

பண்படுத்த எந்தக் கணக்கு உதவும் ? எந்த வைத்தியர் உதவுவார் ? மனத்தைப் பற்றி நாமே கற்று அறிந்து அறிவை வளர்த்துக்கொள்வதா ? அல்லது, யாராவது தேர்ந்த மனவைத்தியரை நாடி அவரிடம் நம்பிக்கையோடு ஒப்படைத்துவிட்டு அமைதி அடைவதா ?

இன்று பெரும்பாலோருடைய வாழ்க்கை, இரண்டும் கெட்ட வாழ்க்கைதான். தாமே அறிவதும் இல்லை ; அறிந்தவரை நம்பித் தெளிவதும் இல்லை.

இன்னொரு பெரிய குறை ; உலகத்தில் கணக்கு முதலிய அறிவுத் துறைகள் வளர்ந்த அவ்வளவிற்கு உளவியல் என்னும் மனத்தின் ஆராய்ச்சித்துறை வளரவில்லை. அறிஞர் பெர்னார்ட்ஷா கூறுவதுபோல், மற்றக் கலைகள் வளர்ந்து வளம் பெற்று வாழ்கின்றன என்றால், உளவியல் இன்னும் பச்சிளங் குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறது. ஆகையால், யாராவது முயன்று கற்றுத்தேற முன்வந்தாலும், போதிய துணை இல்லை என்று சொல்ல வேண்டும்.

ஆனால், நல்ல காலமாக மனவைத்தியருக்குப் பஞ்சம் இல்லை. உடல் வைத்தியர்போல் அவர்கள் தெருவுதோறும் பலர் இல்லாதிருக்கலாம்; அவர்களின் வீட்டின் வாயிலை அணி செய்யும் விளம்பரப் பலகை இல்லாதிருக்கலாம் ; உடல் வைத்தியர் போல் செல்வாக்கும் பெறாமல் இருக்கலாம் ; செல்வமும் குவிக்காமல் இருக்கலாம் ; ஆனால் இருக்கிறார்கள். பொருளையும் உடம்பையும்விட மனம் உயர்ந்தது, சிறந்தது, வாழ்க்கைக்கு அடிப்படையானது என்ற உண்மையை உணர்ந்தவர்களுக்கு அந்த மனவைத்தியர்கள் எப்படியாவது கிடைப்பார்கள்.

நல்ல மகிழ்ச்சியான மனம் இருந்தால் நரம்புத் தளர்ச்சி என்னும் நோயே ஏற்படாமல் தடுத்துக் கொள்ள முடியும். பல நோய்களைப் போக்க மன

மகிழ்ச்சி வேண்டியதாக இருக்கிறது. காலரா முதலான தொத்துநோய்கள் பரவுவதற்கு மனத்தின் பயத்தால் வயிறு கெடுவதும் ஒரு காரணமாக இருக்கிறது. மனக் கவலையே இளமையில் நரை ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. மன அடக்கம் உள்ளவரே உணவுவகையில் பத்தியமாக இருந்து வந்து நோயைப் போக்கிக்கொள்ள வல்லவராக இருக்கின்றனர். இந்தக் கருத்துக்கள் எல்லாம் இப்போது பரவிவருகின்றவை. இவைகளை ஆராய்ந்தால், உடம்பைக் காப்பதற்கும் மனம் அடிப்படை என்பது தெளிவாகும்.

நெடுங்காலத்திற்கு முன்பே – இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே – பிசிராந்தையார் என்னும் புலவர் இதை ஒருவாறு உணர்த்தியிருக்கிறார். நல்ல மனைவி, அறிவுள்ள மக்கள், பயனுள்ள வேலையாட்கள், சிறந்த ஆட்சிமுறை, உயர்ந்த பெரியோர்களின் சூழல் இவ்வளவும் இருந்தால் ஒருவனுக்கு மூப்பும் நரையும் நெருங்காத நல்வாழ்வு உண்டு என்பதைத் தம் அனுபவத்தால் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

பல பெரியோர்கள் இப்படிப்பட்ட நல்வாழ்வு வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் உடல் வைத்தியர்களைப் போல் விரிவான நூல்களை எழுதியிருந்தால் உலகத்திற்கு எவ்வளவோ பயன் விளைந்திருக்கும். அவர்கள் எழுதாமல் விட்டது நம் குறைதான். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்கள், வாழ்க்கை வரலாறுகள் நன்றாகப் பயன் தரக்கூடியவை. இப்போது வாழும் அறிஞர்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே எழுதி உதவுகிறார்கள். இதுவும் சிறந்த பயன் தரும் முறையாகும். இவைகள் எல்லாம் அனுபவ வைத்திய அறிவுபோல் பயன்படும். காரண காரியம் தெரியாமல், நம் பாட்டிமார் செய்யும்

பச்சிலை வைத்தியங்கள் எவ்வளவோ பயன்பட வில்லையா ? அதுபோல் இவற்றை வைத்துக்கொண்டு மன வைத்தியத்தை ஒரு தனிக் கலையாகப் பெருக்கி விடலாம். இப்படித்தானே உடல் வைத்தியமும் கலையாக வளர்ந்தது ? முதலில் சோதிடக் கலையாக (astrology) இருந்ததுதானே மெல்ல மெல்ல விரிவடைந்து வான நூலாக (astronomy) வளர்ந்தது? முதலில் ரசவாத வித்தையாக (alchemy) இருந்தது தானே படிப்படியாக மாறி ரசாயனக் கலையாக (chemistry) வளர்ந்தது ? இதுபோலவே இன்றுள்ள வாழ்க்கை வரலாற்று உண்மைகளை எல்லாம் உணர்ந்து காரண காரிய ஆராய்ச்சி முறையில் தெளி வாக்கி வெளியிட்டால், மன வைத்தியம் ஒரு பெருங் கலையாக வளர்ந்துவிடும்.

இந்த முயற்சி உலகத்தில் புதியது அல்ல. பல அறிஞர்கள் இதைத் தொடங்கி நடத்தியிருக்கிறார்கள். உலகத்தில் ஏற்பட்டுள்ள நீதிநூல்களும் சமய நூல் களும் இந்த முயற்சியின் பயன்தான். திருவள்ளு வருடைய அறத்துப்பால் மிகத் தெளிவான மன வைத்திய நூல் என்று கூறலாம். ஆனால் இவைகள் போதுமா? இன்னும் விளக்கமான நூல்கள் வேண்டும்.

இன்றுள்ள கணக்கறிவு போதும் என்று கூறலாம். அளவுக்குமேல் உள்ளது என்றும் சிலர் கூறுவார்கள். நூல்கள் மிக விரிவாக உள்ளன. கற்பிக்கும் முறையும் பலவகை முன்னேற்றம் அடைந்துள்ளது. கணக்குக் கல்விக்கு உள்ள இடம் அறக் கல்விக்கு இருக்கிறதா ? கணக்குக் கல்வியில் இன்று நம்பிக்கையைக் கடந்து உண்மை என்று உணரும் நிலை இருக்கிறது. ஆனால், அறத்துப்பாலை அவ்வாறு உணர்ந்து கற்கின்றவர்கள் யார் ? நம்பிக்

கையாவது எல்லோருக்கும் இருக்கிறதா ? இல்லை என்றால், அதற்குக் காரணம் என்ன ? கல்விமுறையின் குறையா ? நூல்கள் போதாத குறையா ? ஐந்தும் நான்கும் ஒன்பது என்றால் ஒருவரும் தயங்குவதும் இல்லை ; மறுப்பதும் இல்லை. ஆனால் 'மறந்தும் பிறன்கேடு சூழற்க ; சூழின் அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு' என்றுவது, 'நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம்' என்றுவது அறத்தின் உண்மைகளை எடுத்துச்சொன்னல், ஆம் என்று உணர்கிற கல்வி முறை உள்ளதா ? உண்மை என்று உணராவிட்டா லும், நம்பிக்கையால் ஏற்றுக்கொள்ளும் கல்வி முறையாவது இருக்கிறதா ?

நம்பிக்கையால் ஏற்றுக்கொள்ளும் காலம் மெல்ல மறைந்துவருகிறது. எதையும் ஆராய்ச்சியால் கண்டு உணரும் போக்கே வளர்ந்துவருகிறது. நாட்டின் இளைஞர்களுக்குக் கணக்குப்போல் அறமும் தெளிவாக உணர்த்த வல்ல பெரியோர்கள் வேண்டும் ; கணக்கை விரிவாக விளக்குவதுபோல், அறத்தின் பெற்றியையும் தெளிவாக ஆராய்ந்து எடுத்துக்காட்டுகளோடு (வாழ்க்கை வரலாற்றுப் பகுதிகளோடு) விளக்கும் முறை வேண்டும். இது அருமைதான். மரம் செடி கொடிகளையும் விலங்குகளையும் பறவைகளையும் ஆராய்வதைவிட, உடம்பின் உள்ளும் வெளியும் வாழ் கின்ற நோய்க் கிருமிகளையும் நல்ல நுண்ணுயிர்களை யும் ஆராய்வது அருமைதான். ஆனால் அதைவிட மிகவும் பயனுள்ளது என்பதில் ஐயமில்லை. அது போலவே, பருப்பொருள்களை அளந்து அறிய உதவும் கணக்கறிவைவிட, நுட்பமான வாழ்வியல் உண்மை களை ஆராய்ந்து கூறும் அறத்தின் தெளிவு அருமை யானது ; மிகுதியான பயனுள்ளது.

இந்த நல்ல முயற்சிக்கு இன்று உள்ள அரசியல் சமூக அமைப்புக்கள் பெரிய இடையூறுகளாக உள்ளன. முக்கோணத்தின் மூன்று கோணங்களும் சேர்ந்து 180 டிகிரி என்று சொன்னால், இன்று அதை மறுக்கக் கூடிய எடுத்துக்காட்டுகள், விதிவிலக்குகள் ஒன்றும் இல்லை. ஆனால், "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்று அறம் ஓதினால், "அதோ அந்த ஆள் ஒழுக்கம் தவறாதவர்; ஆனால் வாழ்க்கையில் மிகத் தாழ்ந்த படியில் நின்று ஏங்குகிறார்" என்றும், "அதோ அவர் ஒழுக்கத்தைப் பொருட்படுத்தாதவர்; பேரும் புகழும் செல்வாக்கும் பெற்று விளங்குகிறார்" என்றும் நூற்றுக்கணக்கான எடுத்துக்காட்டுகளை வாழ்க்கையிலிருந்து காட்டி மறுப்பார்கள். இன்று உள்ள அரசியலமைப்பும் சமூக அமைப்பும் அறத்தின் அடிப்படையில் அமையவில்லை. அதனால்தான் இந்தத் தொல்லை உள்ளது. அறத்தில் நம்பிக்கை உடையவர்கள் ஒதுங்கி நிற்கவேண்டி யிருக்கிறது. மற்றவர்கள் முன்னேற இடமும் இருக்கிறது. அன்புடைமையை இன்று அரசியலில் கையாண்டால், தோல்விதான்; எதிர்க் கட்சியைப் பகைக்கத் தெரிந்தால்தான் வெற்றி உண்டு. நடுவுநிலைமையை அரசியலில் கையாண்டால் கட்சி வளர்ச்சியுறாது; ஒரு சார்பில் நின்றால்தான் ஓங்க முடியும். தீவினையச்சத்தை மேற்கொண்டால் தேர்தலில் இடம் ஏது? மனச்சான்றை ஒருவாறு அடக்கித் தீவினைகளில் கலந்துகொண்டால்தான் எதிர்க்கட்சியை ஒடுக்கி வெற்றிபெற முடியும். இன்னா செய்யாமையை நோன்பாகக் கொண்டு வாழ்ந்தால், "இவன் இந்த உலகத்திற்குத் தகுதி அல்ல; கோழை" என்று எல்லாரும் கைவிடுவார்கள்; இரக்கம் இல்லாமல் இன்னா செய்யத் துணிந்தால்தான் வீரன் என்று புகழ்வார்கள்.

இவற்றிற்கு விலக்காக நேர்மையும் அறமும் கடைப்பிடித்து வாழும் தலைவர்கள் உண்டு; தொண்டர்களும் உண்டு. 'ஆனால் அவர்கள் சிறு பான்மையோர் அல்லவா? விதிக்குவிலக்குத்தானே?' என்று இளைஞர்களின் மனம் எண்ணுகிறது. கள்ளச் சந்தை மலிந்துள்ள காலத்திலும் நா நயமுள்ள வியாபாரிகள் அங்கங்கே ஒருவர் இருவர் இல்லையா? ஒரு சிலர் இருப்பதனாலேயே, வியாபாரத்தில் நேர்மையாளர் மட்டுமே முன்னேற முடியும் என்று விதியாகச் சொல்ல முடியுமா?

கள்ளச் சந்தை மலிந்துள்ள காலத்தில் கணக்கில் தேர்ந்த கணக்குப்பிள்ளைக்கு இடம் இராது. கணக்குத் தெரிந்தால் என்ன பயன்? ஒன்றைப் பத்தாகச் சொல்லிப் பொய்யும் பித்தலாட்டமும் செய்து பிறர் கண்ணுக்குத் தெரியாமல் காசை வாங்கி நிரப்பும் கைதேர்ந்த திறமைதான் வேண்டும். ஆனால் அதில் கைதேர்ந்த ஆள், கணக்குத் தெரியாத ஆளாக இருக்கலாம். இருந்தாலும் அப்படிப்பட்ட ஆள்தான் கள்ளச் சந்தைக்கு வேண்டும்.

இன்று உள்ள அரசியலும் ஒருவகையில் கள்ளச் சந்தைதான். அறவோர் சிறுபான்மையாக ஒதுங்கி நிற்க, செல்வமும் செல்வாக்கும் பெற்றவர்கள் பெரும்பான்மையாக நுழையும் துறை அப்படித்தான் இருக்க முடியும். கள்ளச் சந்தையைப் பார்த்துப் பயின்றவர்கள், "கணக்கில் தேர்ச்சி பெறுவதால் பயன் இல்லை; கணக்கறிவு வியாபாரத்திற்கு உதவாது. கைதேர்ந்த திறமைதான் வேண்டும்" என்பார்கள். அதுபோலவே, இன்று உள்ள இளைஞர் பலர், அரசியல் சமூகத் துறைகளில் செல்வாக்கும் செல்வமும் பெற்று உயர்ந்துள்ள பெரும்பாலோரைப் பார்த்துவிட்டு, "வாழ்க்கை முன்னேற்றத்துக்கு அறமும் வேண்டாம்,

மன வைத்தியமும் வேண்டாம் ; தந்திரம், துணிவு, பற்று, தன்னலம், பணம், விளம்பரம் இவைகளே வேண்டும்'' என்று தெளிவாக உணர்கிறார்கள்.

நிலைமை இப்படியே இராது. கட்டுப்பாடும் அறிவும் மக்களிடையே வளர வளர, கள்ளச் சந்தை வல்லமை இழக்கும். கடமையுணர்ச்சியும் அறநெறியும் மக்களிடையே வளர வளர, அரசியலிலும் புன்மை சாகும். அதுவரையில், 'உலகம் பொல்லாதது' என்று சொல்லித் திரிவதா? அல்லது, அறத்தின் சிறப்பை விளக்கி வாழ்வதா ? எது கடமை ?

# 13. அரசியல் தொண்டு

உலக வாழ்க்கையே பெரியது என்று எண்ணி, உலகத் தொண்டே சிறந்தது என்று கருதி உழைத்தவர்கள் பலர் முன்பும் இருந்தார்கள் ; இன்றும் இருக்கிறார்கள். அவர்களின் நோக்கம் விழுமிய நோக்கம் தான். ஆனால், அவர்கள் உலக இயற்கையை உள்ளவாறு உணராமையால் இடர்ப்படுதல் உண்டு. தாம் செய்யும் தொண்டால் உலகம் பயன்பெறும் என்ற நம்பிக்கையோடு தொண்டு செய்கின்றார்கள். அவ்வாறு உலகம் பயன் பெறாமல் பழைய உலகமாகவே கிடக்கும்போது அந்த நிலையைக் கண்டு ஏமாற்றம் அடைகின்றார்கள்; வேறு எந்த வழியில் தொண்டு செய்யலாம் என்று ஏங்கிக் கவலையுறுகின்றார்கள், அவர்கள் செய்யும் முயற்சி நல்லது என்று மக்கள் உணராமல், அவர்களுடைய தொண்டுக்கு இடையூறு செய்வதும் உண்டு. அந்த இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் கடமையைச் செய்யும் ஆற்றல் மிகமிகச் சிலர்க்கே உண்டு. அந்த ஆற்றல் அற்றவர்கள் இடையூறுகளைக் கண்டு மயங்குவார்கள் ; நடுங்குவார்கள். இவ்வாறாக உலகத்திற்குத் தொண்டு செய்ய முனைந்தவர்கள்

வெறுப்பாலோ, அச்சத்தாலோ, சலிப்பாலோ, இடராலோ கடமையைக் கைவிட்டு ஒதுங்கி நிற்பார்கள். அப்போது அவர்கள் மனநிலை என்ன ?

தொண்டு பலவகைப்படும். அரசியல் தொண்டு, சமூகத் தொண்டு, சமயத் தொண்டு என்பவை அவற்றுள் சிறந்தவை. அரசியலே சிறந்தது என்று நம்பி உழைத்த பெரியோர்கள் பலர் பலவகை இடர்ப்பாடுகளை உற்றிருக்கின்றார்கள். தம் செல்வாக்கைப் பெருக்கினால் ஒழிய அரசியல் தொண்டர்கள் ஒன்றும் செய்ய இயலாது. ஆகையால் செல்வாக்கைப் பெருக்க முயல்வது அரசியல் தொண்டர்களுக்குக் கட்டாயமான முதல் கடமை ஆகின்றது. ஆகவே, தம் கொள்கையைப் பின்பற்றும் மக்கள் பெருங் கூட்டமாக இருக்க வேண்டும் என்று முயல்கின்றார்கள். அரசியல் கொள்கைகளோ அடிக்கடி மாறுவன. அரசியல் கொள்கைகளுக்கு ஏற்றபடி மக்கள் மனம் உடனுக்குடன் மாறுவதில்லை ; மாறுதல்களை உள்ளவாறு உணரும் அரசியல் தொண்டர்கள் அவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லிச் செல்வாக்குப் பெற முயல்கின்றார்கள். அவர்கள் முயற்சி வெற்றி பெற்றால் மகிழ்கின்றார்கள். ஆனால், வெற்றி பெறுவதோ அருமை. காரணம் என்ன ? அரசியல் தொண்டர்கள் அறிந்த அளவு மக்கள் அறிவதில்லை. மாறுதல் வேண்டுமென்று தொண்டர்கள் கருதும்போது, வேண்டாம் என்று மறுக்கும் நிலைமையிலேயே மக்கள் இருக்கின்றார்கள். மக்கள் மனநிலையை அறிந்த தொண்டர்கள் சிலர் வேறு ஒரு வழியில் இறங்குகின்றார்கள். "நாமும் இப்போது மாறுதல் வேண்டாம் என்றே கூறிவிடலாம் ; அவ்வாறு கூறுவதன் வாயிலாக மக்கள் மனத்தை நம்மிடம் ஈர்க்கலாம் ; மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்று உயர்ந்த பிறகு படிப்படியே மாறுதல் செய்யலாம் ;

இதுதான் வெற்றிக்கு வழி " என்று அவர்கள் துணி கின்றார்கள்.

இப்போது அரசியல் கட்சி இரண்டு காண்கின் றோம். ஒரு கட்சியார், உண்மையை இன்றே எடுத்துக் கூறி மக்களிடத்தில் செல்வாக்குப் பெற முயல்கின் றார்கள். மற்றொரு கட்சியார் உண்மையைக் கூறாமல் மக்களின் மனப்பான்மையையே எடுத்துக் கூறிச் செல் வாக்குப் பெற முயல்கின்றார்கள். இரு கட்சியார் நோக்கமும் ஒன்றேதான். ஆனால், கட்சிப் போக்கு வேறு வேறு. நோக்கத்தின் ஒற்றுமையை இருசாரா ரும் மறைக்கின்றார்கள். போக்கின் வேறுபாட்டையே பெரிதாக்குகின்றார்கள். முடிவில் உண்மையையும் மறைக்கின்றார்கள். தம் தம் வேறுபாடுகளையே மக்க ளுக்கு எடுத்துரைத்து வெற்றி பெற முயல்கின்றார் கள். கட்சிப் பிணக்கு, கட்சிப் பூசல், கட்சிப் போர் எல்லாம் பெருகுகின்றன. இன்றைக்குக் கட்சியை வளர்க்க வேண்டும்; நாளைக்கே மற்ற வேலை என்ற வெறி அவர்களைப் பற்றி அலைக்கின்றது. அரசியல் தொண்டு என்பதை மறக்கின்றார்கள். அரசியல் செல்வாக்கு என்பதே அவர்கள் எண்ணம் ஆகின்றது. அரசியல் தொண்டர்கள் என்ற வேட்கை போய், அரசியல் தலைவர்கள் என்ற ஆசை எழுகின்றது. தொண்டர்கள் தலைவர்களாக முயல்கின்றார்கள். தொண்டு வேட்கை இருக்கும் வரையில் அன்பும், அமைதியும், ஒற்றுமையும் இருக்கக் காண்கின்றோம். தலைமை ஆசை எழுந்தவுடன் உட்பகையும் ஆரவார மும் ஒற்றுமைக் குலைவும் தோன்றக் காண்கின்றோம். இவ்வாறாக கட்சிகளுக்கு உள்ள புறப்பகையே அல்லாமல் அந்தந்தக் கட்சிகளுக்குள்ளேயே உட்பகை யும் தலைவிரித்து ஆடக் காண்கின்றோம். எனவே, நன்மை செய்யத் தொடங்கினவர்கள் தீமை செய்

கிறார்கள். வழி காட்டத் தொடங்கினவர்கள் வழியைக் கெடுத்துவிடுகின்றார்கள். உலகத்தை ஆக்கத் தொடங்கினவர்கள் உட்பகையை ஆக்குகின்றார்கள். தீமையை வெல்லத் தொடங்கினவர்கள் எதிர்க் கட்சியை வெல்கின்றார்கள். அரசியல் முன்னேற்றம் என்று தொடங்கினவர்கள் கட்சிமுன்னேற்றம் என்று நின்றுவிடுகிறார்கள்.

வெற்றி யாருக்கு? உண்மையை உரைத்தவர்களுக்கா? உண்மையை மறைத்தவர்களுக்கா? மக்கள் பலரும் அறிவு உடையவர்களாய் வாழும் நாட்டில் உண்மையை உரைத்தவர்களுக்கே வெற்றி உண்டு. அறிவு உடைய மக்கள், அரசியல் தொண்டர்கள் கூறுவதைக் கேட்பார்கள், எண்ணுவார்கள்; ஆராய்வார்கள்; உணர்வார்கள்; கொள்வார்கள். ஆனால், அத்தகைய நாடு எங்கே இருக்கின்றது? எங்கும் காணேம். அதனால்தான் எல்லா நாடுகளிலும் குடியாட்சி தோல்வியுற்றேவருகின்றது. என்றேனும் ஒரு நாள் குடியாட்சி உலகத்தில் நிலைபெற வல்லதாகும். அந்த நாள் வரும் என்பவரும் உண்டு; வராது என்பவரும் உண்டு. மக்கள் எல்லோரும் அறிவு உடையவர்களாய் இருக்க முடியுமா முடியாதா என்பதைப் பொறுத்ததே எதிர்கால அமைப்பு. பலரும் நல்லறிவு பெற முடியுமானல் குடியாட்சி உலகத்தில் நிலவும்.

கட்சிப் பிணக்கும் பூசலும் போரும் கண்டு மக்கள் சோர்ந்து நிற்கும் வேளையில்தான் தடியாட்சி தோன்ற இடம் ஏற்படுகின்றது. முடியாட்சியைப் போலவே தடியாட்சியும் கட்சியற்றது. பிணக்கும் பூசலும் போரும் இல்லாமை கண்டு முடியாட்சியும் தடியாட்சியுமே சிறந்தவை என்று மக்கள் சிலர் எண்ணுகின்றார்கள். ஆனல், அது அறியாமை. கோழை

மனம் அப்படித்தான் எண்ணும். நடக்கக் கற்கும் குழந்தை தளர்ந்து தட்டுத் தடுமாறி விழுகின்றது; எழுகின்றது; பல முறை விழுந்தும் எழுந்தும் நடை கற்கின்றது. அந்நிலையில் குழந்தையைக் கண்டு இரங்குவார் உண்டா? அவ்வாறு இரங்கினுல் பேதையர் அல்லவா? "இந்தக் குழந்தை நடக்கத் தொடங்கினுல் விழுந்து விழுந்து அடிபடுகின்றது. ஆகையால், இது நடக்கக் கூடாது" என்று எண்ணுகின்ற மனம் கோழை மனமே ஆகும். அது போலவே கட்சிப் பிணக்கும் பூசலும் போரும் கண்டு அஞ்சித் தடியாட்சியை வரவேற்பவர் மனமும் கோழை மனமே ஆகும். அவர் எண்ணம்தான் நிறைவேறுமா? நிறைவேருது. குழந்தையை நடக்காமல் தடுக்க வல்லவர் யார்? எவரேனும் குழந்தையைக் கட்டிப் பிடித்து அவ்வாறு தடுப்பாராஞல் எத்தனை நாள் தடுக்க முடியும்? என்றேனும் ஒரு நாள் குழந்தை நடந்தே தீரும்; அல்லது, தடை வலியதானுல் குழந்தையின் வாழ்க்கை அழியும். எவ்வகையிலும் தடுக்க முயன்றவர் வெற்றி பெறுவது இல்லை. குழந்தை நடை கற்பது இயற்கை யாதலால், இயற்கையின் ஆற்றலை எதிர்க்கமுடியாது. மக்களின் அறிவு வளர்ச்சியும் இயற்கை. அதனையும் எதிர்க்க முடியாது. தடியாட்சியால் சில காலம் அடக்கி வைக்க முடியும். பிறகு, இயற்கை அடங்கியிருக்காது. மக்களின் எழுச்சி தடியாட்சியை அசைக்கும். ஒரு நாள் தடியாட்சி வீழும். அல்லாமல், தடியாட்சி வலியதாக இருந்து கிளர்ச்சியைப் பலகாலும் அடக்குமானுல் அந்த நாட்டிற்கு அழிவு ஏற்படும். குழந்தை என்றேனும் ஒரு நாள் நடக்கும்; அல்லது மாளும். குடியாட்சி அரசியலும் அவ்வாறே. என்றேனும் ஒரு நாள் சீர்பெற்று உலவும், அல்லது அடியோடு அழியும்.

நன்றாக நடை கற்ற பிறகும் குழந்தை சிலவேளை விழுவது உண்டு. ஆனால், அதற்கு அஞ்சி நடையை மறப்பவர் இல்லை. அதுபோல் திருந்திய மக்கள் ஆட்சியிலும் சிறு குழப்பங்கள் அவ்வப்போது நேரக்கூடும். அவற்றிற்கு அஞ்சி அரசியலை அறிஞர் கைவிடுதல் கூடாது.

## 14. சாட்டை

மனிதனுக்கு வெற்றி பெற்றுத் தந்த கருவிகளுள் ஒன்று சாட்டை. காட்டில் திரிந்த விலங்குகளைப் பழக்கித் தன் விருப்பம்போல் வேலை வாங்குவதற்கு மனிதனுக்குப் பயன்பட்ட கருவிகளுள் ஒன்று இது. மாடு குதிரை முதலிய காட்டு விலங்குகளை வீட்டு விலங்குகளாக மாற்றி மனிதனுக்கு வெற்றியைத் தந்த இந்தச் சாட்டை, இன்னும் மனிதனுடைய கையை விட்டுப் போகவில்லை. இக்காலத்திலும் மனிதன் சாட்டை ஏந்தி விலங்குகளை ஆட்டிவைக்கிறான். 'சர்க்கஸ்' என்னும் ஆட்டத்தில் மாடு குதிரைகளை மட்டும் அல்லாமல், புலி சிங்கம் முதலிய விலங்குகளையும் சாட்டையால் அடித்து நடுங்க வைக்கிறான்.

விலங்குகளை அடக்கி வெற்றி பெற்ற மனிதனுடைய கை, தாழ்வுற்ற மக்களையும், அடக்கி ஆள்வதற்குச் சாட்டையைப் பயன்படுத்தியது. அவ்வாறு சாட்டையால் அடித்து விலங்குகள்போல் அடக்கி ஆளப்பட்ட மக்களையே உலக வரலாற்றில் அடிமைகள் எனக் காண்கிறோம். நீக்ரோக்கள் இவ்வாறு சாட்டை அடிக்கு இரையாகிய நிகழ்ச்சிகள் அமெரிக்

காவில் அடிக்கடி நிகழ்ந்துவந்தன. அடிமைகளையும் மக்களாக மதித்து அவர்களுக்கு நல்வாழ்வு நல்கிய இயக்கம் தோன்றும் வரையில் இந்தக் கொடுமை மிகுதியாக இருந்தது.

அடிமைகள் அல்லாத மற்ற மக்களும் இந்தச் சாட்டைக் கொடுமைக்கு ஆளானது உண்டு. குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கும் முறைகளுள் இதுவும் ஒன்றாக இருந்துவந்தது. நீதிமன்றங்களிலும் சிறைகளிலும் குற்றவாளிகளைச் சாட்டையால் அடித்து ஒடுக்கும் கொடுமை எல்லா நாடுகளிலும் இருந்து வந்தது. நாகரிகம் முதிராத சில நாடுகளில் இப்போதும் இருந்துவருகிறது.

இவ்வாறு காட்டு விலங்குகளை வென்று ஆள்வதற்குப் பயன்பட்ட சாட்டை நாட்டு மாந்தரை அடக்கி ஒறுப்பதற்கும் உரிய கருவியாக வளர்ந்தது. இன்றைய நாகரிகம் இந்த வளர்ச்சியைத் தடுத்து மாடு குதிரை முதலான விலங்குகளை ஆள்வதற்கு மட்டும் உரிய கருவியாக அதை வரையறை செய்திருக்கிறது.

சில பழக்க வழக்கங்கள் சட்டத்தால் தடுக்கப்பட்ட போதிலும், மக்களின் வாழ்வை விட்டு அடியோடு நீங்கிவிடுவதில்லை. மக்களின் வாழ்வில் நீங்கும் நிலைமை உற்றபோதும், மக்களின் மனத்தை விட்டு நீங்குவதில்லை. ஆகவே, செயலளவில் தடுக்கப்பட்ட பழக்கங்கள் சில, மக்களின் எண்ணத்தளவில் நீங்காமல் நிற்கக் காண்கிறோம். விபசாரம், கள் குடித்தல் முதலிய பழக்கங்கள் இத்தகையன.

சாட்டையைக் கொண்டு மக்களை அடக்கி ஆளும் பழக்கம் தடை செய்யப்பட்டு நின்றபோதிலும், எண்ணத்தளவில் அது இன்னும் உள்ளது என்றே கூறலாம். கையில் உள்ள சாட்டை மாறி, கருத்துச்

சாட்டையாக புது வடிவு பெறலாம். கொம்பும் வாருமாக இருத்தல் மாறி, கட்சியும் ஒழுங்கு நடவடிக்கையுமாக புது வடிவு பெறலாம். ஆனால் அதுவும் சாட்டையே. ஏன் எனில், அதுவும் மக்களையும் மக்களின் கருத்தையும் அடக்கி ஆள்வதற்கே பயன்படுகிறது.

பாராளுமன்றங்களிலும் சட்டசபைகளிலும் கட்சியமைப்பு உள்ளது. மக்களாட்சிக்கு இத்தகைய கட்சியமைப்பு இன்றியமையாதது என்று கருதப்படுகிறது. இந்தக் கருத்து மாறும் காலம் அண்மையில் இல்லை. நேர்மாறாக, மக்களாட்சிக்குக் கட்சியமைப்பு இடையூறு என்னும் உண்மையை உணர இன்னும் சில தலைமுறைகள் ஆகும். அதுவரையில் இந்தக் கருத்து எள்ளி நகையாடப்படுவதாகவே இருக்கும்.

சமுதாய அமைதிக்குப் பொருள் சேர்த்துவைக்கும் முறை இடையூறு என்னும் உண்மை பெரும்பாலோரால் எள்ளி நகையாடப்பட்டது. இந்த உண்மையைச் சமயத் துறையினர் ஒரு வடிவில் எடுத்துச் சொன்னார்கள் ; கலைத் துறையினர் மற்றொரு வடிவில் எடுத்துக் கூறினார்கள் ; அறவோர் வேறு வகையான விளக்கம் தந்தனர்; அரசியலார் இன்னொரு வகையான விளக்கம் அளித்தனர். யார் என்ன சொல்லியும் அதை ஏற்றுக்கொள்வோர் மிகச் சிலராகவே இருந்தனர். சில நாடுகளில் பெரிய பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுச் சட்டப்படி பணம் சேர்த்துவைத்தல் குற்றமாக்கப்பட்ட பிறகே, உலகத்தில் மற்ற நாடுகள் அதை ஒரு கொள்கையாக மதிக்கத் தொடங்கின. நம்பினாலும் நம்பாவிட்டாலும் ஒரு கொள்கையாகவேனும் மதிப்புத் தரும் நிலைமை இப்போதுதான் ஏற்பட்டுவருகிறது. ஆகவே, உண்மை என்றும் உண்மையாகவே இருப்பினும், அதைப் பெரும்பாலோர் உண்மையாக

ஏற்று மதிப்பதற்கு ஒரு காலம் வரவேண்டியுள்ளது. மக்களாட்சிக்குக் கட்சியமைப்பு இடையூறு என்னும் உண்மையை உலகம் உணர்வதற்கும் இன்னும் சில காலம் ஆகும்.

அதுவரையில் மக்களாட்சி மெல்லமெல்ல வளர்ந்து வரும்; இடையிடையே பழைய முடியாட்சியின் கூறு களும், தடியாட்சியின் இயல்புகளும் சிற்சில காணப் படும். அடிமைகள் ஒரே நாளில் உரிமை பெற்றுவிட் டாலும், அடிமை மனப்பான்மை மாறுவதில்லை. வறியவன் பெருஞ் செல்வனாகத் திடீரென மாறிய போதிலும், வறுமையின் இயல்புகள் அவனை விட்டு அடியோடு நீங்குவதில்லை. அவை போலவே, முடி யாட்சியிலும் தடியாட்சியிலும் இருந்து பழகிய மக்கள், குடியாட்சி பெற்றுவிட்டபோதிலும், அந்தப் பழைய ஆட்சிகளின் கூறுகளை அடியோடு விட்டு விலகுவ தில்லை.

முடியாட்சியில் பரம்பரை பரம்பரையாக ஒரு குடும்பத்தார் ஆளும் முறை இருந்துவருதல் வழக்கம். தடியாட்சியில் எதிர்பாராமல் ஒருவன் தோன்றிப் பலத்தாலும் பயத்தாலும் மக்களை அடக்கி ஆள்வது வழக்கம். மக்களாட்சியில் பரம்பரை உரிமையும் இல்லை; திடீரெனத் தோன்றி ஆட்சியைக் கைப்பற்ற வழியும் இல்லை. முடி சூடுவதில்லை, தடி தாங்குவதில்லை என்ற வேறுபாடுகள் இருந்தபோதிலும், மக்களாட்சி யில் முடியாட்சியின் குறைகளும் தடியாட்சியின் குறைகளும் கலந்து உறைகின்றன. மக்களாட்சி யிலும் ஒருவன் தன் விருப்பம்போல் ஆளும் தன்மை பெரும்பாலும் இருந்துவருகிறது. தலையில் முடி சூடு வதற்கு ஈடாக, பலருடைய தலைக்குத் தான் முடியாக விளங்குகிறான். தடி தாங்கிச் சர்வாதிகாரம் நடத்து வதற்கு ஈடாக, கட்சித் தலைமை தாங்கிச் சர்வாதி

காரம் நடத்துகிருன். படை வன்மையையும் பயத்தின் வன்மையையும் துணையாகத் தேடுவதற்கு ஈடாக, பத்திரிகைப் பிரசாரத்தையும் பணத்தின் பெருமையையும் துணையாகக் கொள்கிருன். துணைக் கருவிகள் வேறுபட்டாலும், நடைமுறை ஏறக்குறைய முடியாட்சி போலவும் தடியாட்சி போலவும் இருந்துவருகின்றது.

முடிசூடி ஆள்வோனுக்கும் தடிதாங்கி ஆள்வோனுக்கும் இல்லாத ஒரு தனிக் கவசம் இந்தக் கட்சித் தலைவனுக்கு உள்ளது. அதுதான், பெரும்பான்மையான மக்களின் பிரதிநிதி எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் முறை. தேர்தல் முறை தரும் இந்தக் கவசம் கட்சித் தலைவனுக்கு நல்ல பாதுகாப்பாகப் பயன்படுகிறது. எதையும் தன் விருப்பம் என்று காட்டிக்கொள்ளாமல், கட்சி முடிவு என்றே, மக்கள் விருப்பம் என்றே சொல்லி ஏய்க்கமுடிகிறது. ஆகவே, முடிமன்னனைவிட, சர்வாதிகாரியைவிட, அச்சமற்றவனய் ஆட்சி புரிய இவனுல் முடிகிறது.

அரசியல் தொன்றுதொட்டு வளர்ந்து வரும் வரலாற்றை ஆராய்ந்தால், இதுவும் வளர்ச்சிக்கு உரிய ஒரு படி என்று விளங்கும். ஆகையால் இந்த நிலையைக் கண்டு கவலைப்படலாகாது. ஆனுல் இதுவே உண்மையான மக்களாட்சி என்று எண்ணுவது தவறு. மக்களாட்சியை நோக்கி உயர்வதற்கு உரிய ஒரு படி எனவே இதைக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அல்லாமல், இதுவே மக்களாட்சி என்று எண்ணுவோர், உலகத்தின் எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கை இழக்க நேரும். இப்போதே சிலர் அடிக்கடி மக்களாட்சி (ஜனநாயகம்) பயனற்றது என்று கூறிவருகின்றனர். அந்தக் கருத்துத் தவறு. இது மக்களாட்சி என்னும் தோல் போர்த்த முடி

யாட்சி; அல்லது, மக்களாட்சி என்னும் வடிவில் அமைந்த தடியாட்சி என்று உண்மையை உணர்வதே கடமை. இதிலிருந்து இன்னும் சில படி ஏறி முன்னிற்கும்போதுதான் உண்மையான மக்களாட்சியைக் காண முடியும்.

அதுவரையில் மக்களாட்சியில் ஒருவன் அல்லது ஒருசிலர் பலரை மேய்க்கும் முறை இருந்துவரும். பலரை அடக்கி ஆளும் முறை அல்லது பலரை மயக்கி மேய்க்கும் முறை என்று சொல்வதற்கு ஈடாகவே, கட்சியமைப்பு முறை என்று பெயர் வழங்குகிறது. இவ்வாறு சிலர் பலரை மேய்ப்பதற்கு உரிய கருவியாகப் பயன்படுவதுதான் கருத்துச் சாட்டை எனப்படுவது. ஒவ்வொரு கட்சியிலும், தலைவனுடைய கருத்துக்கு அரண் செய்து அவன் கருத்திற்கு ஏற்ப மற்ற உறுப்பினர்கள் நடக்குமாறு செய்வது சிலருடைய கடமையாக உள்ளது. அவர்களில் பொறுப்பு ஏற்ற ஒருவனையே கட்சிச் சாட்டை எனக் கூறுகிறோம்.

இந்த முறை இருப்பதால்தான், கட்சியின் உறுப்பினர் ஒருவர் மாறான கருத்துக் கொண்டிருந்தாலும் அதை வெளியிட முடிவதில்லை. அவருடைய மனச்சான்று ஒன்றைத் தவறு எனக் கருதியபோதிலும், கட்சித் தலைவரின் கருத்து அதுவானால், வாய்மூடிக் கிடக்க வேண்டியுள்ளது. கட்சிக் கூட்டத்தில் மாறுபட்ட கருத்தைச் சொல்வதற்கு அச்சம்; துணிந்து சொல்லிவிட்டால், கட்சித் தலைவரின் பகை நோக்குக்கு ஆளாதல்; கட்சிக் கூட்டத்தில் துணிந்து மாறுபட்ட கருத்தைச் சொன்னாலும், பாராளுமன்றக் கூட்டத்தில் (அல்லது சட்ட சபைக் கூட்டத்தில்) அவ்வாறு சொல்லாமல் வாய்மூடிக் கிடக்க வேண்டிய கடமை; அங்கு வாக்கெடுக்கும்போது, மனச்சான்றை அடக்கி, மாறான கருத்திற்குத் தன் வாக்குரிமையைத்

தர வேண்டிய கட்டாயம்; அவ்வாறு செய்யத் தவறி ஞல், கட்சி ஒழுங்கை மீறியதாக எடுக்கப்படும் தண்டனை, அதன் பிறகு தலைவராலும் அவரை ஒட்டிய மற்றவர்களாலும் மறைமுகமாகவும் நேர்முக மாகவும் செய்யப்படும் புறக்கணிப்பு, தலைவரின் சார்பான கட்சிப் பத்திரிகைகள் தலைவரைக் காக்கை பிடிப்பதற்காகத் தன்னை இழிவுபடுத்தும் அநாகரிகம் ஆகிய இத்தனைக்கும் ஆளாகவேண்டியுள்ளது. பழைய கைச்சாட்டை உடம்பைப் புண்படுத்தியது; இந்தக் கட்சிச் சாட்டையோ வாழ்வையே புண்படுத்த வல்ல தாக உள்ளது.

மேய்ப்பவனுடைய மனப்போக்கிற்கு மாருக நடந்தால் மாடு அடிபடுகிறது. அவனுடைய மனப் போக்கிற்கு இயைந்து நடந்தால் அதே மாடு தடவிக் கொடுக்கப்படுகிறது; தட்டிப் போற்றப்படுகிறது.

கட்சிச் சாட்டையும் இப்படித்தான் செய்கிறது. கட்சித் தலைவரின் கருத்திற்கு இசைய நடந்தால், நன்மை தருவதாக ஆசையூட்டுகிறது. கட்சியாட்களில் ஆள் திரட்டும் செல்வாக்கு உடையவர்களுக்குத் தலைவர் சில நல்ல ஆசைகளை ஊட்டுகிருர். அவர்களுக் குச் சில பதவிகள் தருகிருர்; அல்லது, சொந்த வாழ் விற்கு நன்மையான சில சலுகைகள் தருகிருர்; இரண் டும் பயன்படாதபோது, பணத்தையே கொடுத்து ஆளை விலைக்கு வாங்குவதும் உண்டு. கட்சித் தலை வர்க்கு இசைந்து நடந்தால், இவ்வாறு பதவியும் சலுகையும் பணமும் சேரும் வாய்ப்பு உள்ளது. இல்லை யானல், புறக்கணிப்பும் ஒழுங்கு நடவடிக்கையும் அவமதிப்பும் காத்திருக்கின்றன. ஆசைக்குச் சிலர் ஆளாகித் தலைவர் கருத்தின்படி நடந்து மனச்சான்றை விற்கிருர்கள். அச்சத்திற்குச் சிலர் இரையாகி மனச்

சான்றை மாய்க்கிருர்கள். இரண்டும் அற்ற நேர்மையாளர்கள், கட்சியைவிட்டு வெளியேற நேர்கிறது.

ஆகவே நடப்பது என்ன ? கட்சி என்ற அமைப்பு ஒரு சிலர் அல்லது ஒருவரின் ஆட்சிக்கு மறைமுகமாக வழி கோலுகிறது. முடிமன்னன் அச்சம் ஊட்டியும் ஆசை ஊட்டியும் சிலரை வயப்படுத்திப் பலரை மேய்த்தான். தடியெடுத்த சர்வாதிகாரியும் இரண்டொருவர்க்கு மட்டும் ஆசை ஊட்டி, மற்றவர்களை அச்சத்தால் அடக்கி மேய்த்தான். மக்களாட்சித் தலைவனும் ஒருசிலர்க்கு ஆசையும் அச்சமும் மாறி மாறி ஊட்டிப் பலரை மேய்க்கின்ருன். அதனுல்தான் கட்சி என்ற ஒன்றை அமைத்துப் பாராளுமன்றம் நடத்தும் முறையிலும் சாட்டை மறைமுகமாக உள்ளது. கைச்சாட்டை கட்சிச் சாட்டையாக வளர்ந்த வளர்ச்சி இது.

பணம் கடவுள் இரண்டிற்கும் ஒருவன் தொண்டனுக இருக்க முடியாது என்ருர் சான்ருேர் ஒருவர். பணம் செல்வாக்குப் பெற்ற இடத்தில் கடவுள் நெறி மட்டும் அல்ல, கலையும் வாழ முடிவதில்லை; எந்த உண்மை நெறியும் வாழ முடிவதில்லை. உண்மையான மக்களாட்சியும் பணத்தின் செல்வாக்கே பெரிதாக உள்ளவரையில் தலையெடுக்க முடியாது. பணம் எதையும் விலைக்கு வாங்க வல்லதாக உள்ளது. தேர்தல் களத்தில் வாக்காளர்களின் வாக்குரிமை முதல், பாராளுமன்றத்தில் கட்சியாளர்களின் கருத்துரிமை வரையில் எதையும் வாங்க வல்ல செல்வாக்கு இன்று பணத்திற்கு உள்ளது. இங்கிலையில், மக்களாட்சி என்னும் உண்மையான அரசியல் நெறி எப்படி வாழ முடியும் ? ஆகவே, எதனுலும் அடங்காதவர்களையும் பதவி சலுகை முதலிய பணத்தின் கருவிகளைக் கொண்டு அடக்கி மேய்க்க முடிகிறது. பழங்காலத்து

மேய்ப்பு முறையும் சாட்டையாட்சியும் புதிய வடிவில் விளங்குகின்றன. பணத்தின் மதிப்பு ஒழிந்து உழைப்பின் மதிப்பு உயரும் நாள் வரையில், சேர்த்து வைத்த பணத்தின் செல்வாக்கால் சேர்த்துவைக்காதவர்களை விலைக்கு வாங்கும் அநாகரிகம் நீங்கும் நாள் வரையில், எந்தக் கொள்கையும் வாழ முடியாது; மனச்சான்றும் வாழ முடியாது; உண்மையான மக்களாட்சியும் மலர முடியாது. அதுவரையில் சாட்டைக்குச் செல்வாக்கு இருந்தே தீரும்.

# 15. பழம் பெருமை

பழைய உறவில் பெண் கொண்டால் நல்லதா, புதிய உறவில் பெண் கொண்டால் நல்லதா என்று ஆராய்வோர் உண்டு. உடல் நூலார் ஒன்று சொல்வார்கள்; உள நூலார் மற்றொன்று சொல்வார்கள். பொதுவாகப் பார்த்தால், காதல் வாழ, காதலுக்கு உரிய பண்புகள் வாழ இடமளித்துத் திருமணம் செய்வது நல்லது எனலாம்.

அது வேறு. இங்குப் பழைய உறவில் பெண் கொள்வதில் உள்ள சிறு குறை ஒன்றைமட்டும் காண்போம். (அதனாலேயே பழைய உறவு அடியோடு வேண்டாம் என்பது கருத்து அல்ல; உள்ள சிறு குறையை எடுத்துக்காட்டுவதே இங்கு நோக்கமாகும்.)

பழைய உறவில் பெண் கட்டிய வீட்டில் புதுமையுணர்ச்சி குறைவு. அதனால் புதியவர்களிடம் பழகுவது போல், பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் பழக மாட்டார்கள். நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற ஆசை இல்லாத காரணத்தால், பேசும் பேச்சுக்களிலும் உரிமையோடு பேசுவார்கள்; வழக்கம் போல்

பேசுவார்கள். புதியவர்களாக இருந்தால், என்ன பேசலாம், என்ன பேசக் கூடாது என்று எண்ணிப் பார்த்துச் சொற்களை அளந்து பேசுவார்கள். பழைய உறவான இடத்தில் இப்படிச் சொற்களை அளந்து நிறுத்திப் பேச வேண்டிய தேவையே இல்லை. ஒன்று, பேசாமலே இருப்பார்கள்; அல்லது, பேசத் தொடங்குனல், உணர்ச்சியோடு தங்குதடை இல்லாமல் உள்ளத்தில் உள்ளதை எல்லாம் கொட்டிப் பேசுவார்கள். திருமணம் ஆகிச் சில நாட்களிலேயே, ஏதேனும் பூசல் அல்லது சிறு கசப்பு ஏற்படுமானல், "உன் பெரியப்பாவின் பண்பு தெரியாதா? அவர் இப்படிப் பட்டவர் அல்லவா? உன் அம்மா வாயாடி என்பது முப்பது ஆண்டுகளாகத் தெரியுமே. எங்களை அந்தக் காலத்திலேயே நீங்கள் இப்படிப் பழித்தீர்களே! இன்ன வீட்டுத் திருமணத்திற்கு வந்தபோது இவ்வாறு எங்களைக் கேட்டீர்களே! சின்ன வயதில் உங்கள் வீட்டுக்கு வந்தபோது சரிவரக் கவனிக்காமலே அனுப்பிவிட்டார்களே! இன்ன அலுவலுக்கு வராமலே நின்றுவிட்டீர்களே! அந்தப் புத்தி போகுமா?" என்று பல ஆண்டுகளுக்கு முன் நடந்தவற்றை எல்லாம் சொல்லிச் சொல்லிப் பகையை வளர்த்துக் கொள்ள வழி இருக்கிறது.

நாடுகளுக்கும் இந்த நிலைமை இருக்கிறது.

அமெரிக்கா புதிய நாடு; முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வரலாறு இல்லாத நாடு. ஆகையால் அங்கு உள்ள மக்கள் அரசியல் என்றல் இன்றைய சிக்கல்களை மட்டுமே எண்ணிப் பார்க்க முடியும். பழைய கதை என்று எதையும் பேச முடியாது. "இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவிர்......வாழ்வீர்" என்று பாரதியார் கூறிய அறிவுரையின்படி அந்த நாடு வாழ முடிகிறது.

பழம் பெருமை மிக்க வரலாறு உள்ள நாடுகள் அவ்வாறு வாழ முடிவதில்லை. "இன்று புதிதாய்ப் பிறந்தோம்" என்ற எண்ணம் ஏற்பட வழி இல்லை. பழமையின் நினைவு விட்டு நீங்குவதில்லை. அந்த நினைவு ஊக்கம் ஊட்டி நன்மையும் செய்யலாம்; சோர்வு ஊட்டித் தீமையும் செய்யலாம்; வேண்டாத வம்புகளை வளர்த்துத் தொல்லையும் தரலாம்.

பழம் பெருமை வாய்ந்த குடும்பத்தில் பிறந்த ஒருவன், "நான் இப்படிப்பட்ட குடியில் பிறந்தவன். ஆகையால் எடுத்ததை முடிக்காமல் விடமாட்டேன். முடித்துவிடுவேன்; என் குடும்பப் புகழைக் காப்பேன்" என்று ஊக்கம் பெறுவது உண்டு. அதே போல், பழைய வரலாற்றுப் பெருமை உடைய நாடு ஊக்கம் பெற்று முன்னேறவும் வழி உண்டு. ஆனால் அவ்வாறு பயன்பெறுவது அரிதாக உள்ளது.

பெரிய குடும்பத்துப் பிள்ளைகள் சிலர், தங்கள் குடும்பத்தின் பழம் பெருமையை எண்ணிக்கொண்டே காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ற மாறுதல் செய்யாமல், உழைக்கவும் உழைக்காமல் சோம்பித் திரிந்து ஏழைகளாய் வாடுவது உண்டு. பழம் பெருமை பேசிப் பேசி அவர்கள் வறுமைக்கு இரையாகிறார்கள். "அய்யோ! அப்படிப்பட்ட குடும்பம் இப்போது இப்படி ஆய்விட்டதே" என்று பார்ப்பவர்கள் இரக்கம் கொள்வதற்குத்தான் பழம் பெருமை பயன்படுகிறது.

பழைய வரலாற்றுப் பெருமை உள்ள நாடுகளும் இப்படி ஆவது உண்டு. பழம் பெருமையின் நினைவால் புதிய முயற்சிகளை மேற்கொள்ளாமல் காலத்திற்கு ஏற்பத் திருந்தாமல் தேங்கிக் கெடுவதும் உண்டு.

தமிழ் நாடு பழம் பெருமை மிகுந்த நாடு; சேர சோழ பாண்டியர் என்ற மூவேந்தர் மரபுகள் நெடுங்

காலம் வழிவழியாக ஆண்டு வந்த நாடு. இயற்கையோடு இயைந்து இனிது அமைந்துள்ள பழைய நல்ல இலக்கியச் செல்வம் வாய்ந்த தொன்மை மொழி பேசி வரும் நாடு; கலைகள் தொன்றுதொட்டுச் செழித்து வரும் நாடு என்றெல்லாம் பழம்பெருமை பேசுவதற்கு நிறைய இடம் உள்ளது இந்த நாடு.

இத்தகைய பழம் பெருமையை நினைந்து தமிழ் நாடு போதிய அளவு ஊக்கம் பெறவில்லை. இறந்த காலத்தை அடிக்கடி எண்ணியும் எழுதியும் பேசியும் பழக்கப்பட்டுப் போவதால், நிகழ்காலத்திற்கு உரிய கடமைகளைச் செய்யாமல் அமைதியாக(சோம்பலாக?) இருப்பதற்கும் இடம் தருகிறது. செல்வர் வீட்டுப் பிள்ளைகள் படிப்பிலும் முயற்சியிலும் குறைவுபட்டுத் தாழ்வது போல் உள்ளது தமிழர் நிலைமை. ஏழை வீட்டுப் பிள்ளை பெருமுயற்சியுடன் முன்னேறி ஊக்கம் மிக்கு விளங்குவது போல் உள்ளது அமெரிக்கர் நிலைமை.

பழம் பெருமையின் நினைவு நமக்கு ஊக்கமும் ஊட்ட வேண்டாம்; சோர்வும் ஊட்ட வேண்டாம்; இரண்டையும் விட்டுக் கடமையைச் செய்து வாழும் அளவிற்கு இடையூறு இல்லாமல் இருந்தாலும் போதும். அதுவும் இல்லை. பழைய உறவிலிருந்து பெண் கொண்ட குடும்பத்தில் பூசல் எழும்போது பழைய குறைகள் நினைவுக்கு வந்து பகையை வளர்ப்பது போல், தமிழ்நாட்டின் பழம் பெருமையும், அதன் தொடர்பு பெற்ற பழைய நாடுகள் பகை வளர்த்துத் தொல்லை செய்யத் துணையாக உள்ளது.

பழம் பெருமை போ என்றால் போய்விடாது. அது நினைவை விட்டு நீங்காமல் நிற்க வல்லது. ஆகவே, அதற்கு மாற்றுத் தேட முயல வேண்டுமே அல்லாமல், மறக்க முயல்வதால் பயன் இல்லை.

கொண்ட பெண்ணின் இன்றைய நிலையை மட்டும் அறிந்து போற்றி, அவளுடைய பெற்றோர் முன்னோர் செய்தவற்றையும் – சொன்னவற்றையும் – மறந்துவிட்டால்தான் அவளுடைய இல்லறம் இனிது அமையும்; வாழ்வு செழிக்கும். அதுபோலவே ஒரு நாடும் வரலாற்றுப் பூசல்களை மறந்து காலப்போக்கை ஒட்டிக் கடமைகளைச் செய்து முன்னேறுவதில் கருத்தாக இருந்தால் பயன் உண்டு. நிகழ்கால முயற்சிகளில் ஈடுபடாமல், இறந்தகால வரலாற்றில் கருத்துச் செலுத்தினால் பயன் இல்லை. முன்னேற்றம் என்பது நடக்க வேண்டிய வழியைக் கண் திறந்து பார்த்து அடி எடுத்து வைப்பதில் உள்ளதே அல்லாமல், நடந்து வந்த வழியைப் பற்றிப் பெருமையுடன் சிந்திப்பதில் இல்லை.

இயக்கியம், கலை, சமயம் முதலிய துறைகளில் பழமையின் தொடர்பு நன்மை செய்தல் உண்டு. ஆனால் அரசியலில் பழைய வரலாற்றை மறந்துவிட்டுப் புதிய வாழ்வு வாழ விரும்பி முன்னேறுவதே நல்லது. அரசியலில் அவ்வப்போது உள்ள சிக்கல்களைத் தீர்க்க முயல்வதும் அவ்வந் நிலையில் ஏற்படும் கடமைகளைச் செய்வதும் தகுந்த நெறியாகும். மக்களின் சிந்தனையும் செயலும் நிகழ்காலக் கடமைகளில் ஊன்றியிருந்தால் ஒரு நாடு முன்னேற முடியும். பழங்கால வரலாற்றுக் குறிப்புக்களில் ஈடுபட்டுச் சிக்கல்களை வளர்ப்பது பயனில்லாத முயற்சியாய்ப் போவது மட்டும் அல்லாமல், நிகழ்காலத்திற்கு உரிய சிந்தனையாற்றலையும் செயலாற்றலையும் சிதறடித்து விடுகிறது. இன்றைக்கு இவ்வளவு கூலி வேண்டும் என்று போராடிப் பெறவேண்டிய தொழிலாளி, அதற்கு உரிய முயற்சியில் ஈடுபடாமல், "நான் ஒரு காலத்தில் இப்படி முதலாளியாக இருந்தேன்"

என்று பழம் பெருமை பேசுவதால் உள்ள முயற்சியும் பாழாகும்; "நான் முதலாளியாக இருந்தபோது இப்படி நடத்தினேன்; நீ இப்படி நடந்தாய்" என்ற பழைய நிகழ்ச்சிகளிலிருந்து பகைக்கும் பூசலுக்கும் காரணமாக இருப்பவற்றை எடுத்துப் பேசுவது அறியாமை ஆகும்; அறியாமை மட்டும் அல்லாமல், செய்யத் தகுந்த கடமைகளைச் செய்யாமல் சோர்வுற்றுக் கெடுவதற்கும் வழியாகும்.

ஆகவே பழம் பெருமை பேசுதல் இலக்கியம் முதலிய மற்றத் துறைகளில் இடம் பெறலாம். ஆனால் அரசியலில் இடம் பெறாமல் இருத்தல் நல்லது. அரசியலில் அதைக் கொண்டு வெற்றி பெற முடியாது. நெறியான முயற்சிகளும் நேர்ப் போராட்டங்களுமே அரசியலில் ஆக்கம் தருவன.

## 16. இடம் அறிதல்

நமக்குள் ஒழுங்குமுறை (discipline) இல்லை என்று சிலர் குறை கூறுகிறார்கள்; இருக்கும் ஒழுங்கு முறை போதாது என்று பலர் கூறுகிறார்கள். இந்தியா உரிமை பெற்று உலகப் பெரு நாடுகளுள் ஒன்றாக விளங்கிய பிறகு, இவ்வாறு தலைவர்களும் அறிஞர்களும் நல்லெண்ணத்தோடு பேசி வருகிறார்கள்; எழுதியும் வருகிறார்கள். மாணவர்களின் கூட்டங்களில் அவர்களுக்கு அறிவுரை கூறுவோர் எல்லோரும் இதை மறக்காமல் எடுத்துரைக்கிறார்கள். ஒழுங்குமுறை என்பது மாணவர்களுக்கு மட்டும் உரியது அல்ல; மற்றவர்களுக்கும் கட்டாயம் வேண்டியது. ஆனாலும், ஒழுங்கு முறையை எளிதில் கற்றுப் பண்படுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்பு மாணவர்களுக்கு இருப்பதால் அப்படிக் கூறி வருகிறார்கள். ஆகையால், நாட்டு மக்கள் எல்லோருமே பொதுவாக உணர வேண்டிய குறை என்று இதைச் சொல்ல வேண்டும்.

குறையை உணர்வது ஒரு சிறந்த படிதான். நாளடைவில் நாமும் ஒழுங்குமுறை நிரம்பிய மக்கள் என்று பெருமிதம் அடையும் நாள் வரும்.

ஆனால் குறையை உணர்வது மட்டும் போதாது ; அது ஒருபடிதான். உணவு போதாது என்று பற்றுக் குறையை உணர்வதால் மட்டும் பயன் விளைந்து விடாது. அதற்கு அடுத்த முயற்சிகளைச் செய்தால் தானியக் களஞ்சியங்களும் நிரம்பும்; வயிறுகளும் நிரம்பும். ஒரு பக்கம் விஞ்ஞானக் கருவிகளாலும் அரசாங்கச் சலுகைகளாலும் உழவர்களைக் கைதூக்கி விட்டு, மற்றொரு பக்கம் கள்ள வாணிபக் கொள்ளைக் கூட்டத்தைக் கை விலங்கு இட்டால் அல்லாமல், குறையை உணர்வதாலும் உணர்ந்து பேசுவதாலும் எழுதுவதாலும் பயன் விளைந்துவிடாது. அது போலவே, நமக்குள் ஒழுங்குமுறை இல்லை என்றோ, போதாது என்றோ உணர்வதால் மட்டும் நாட்டு நிலைமை முன்னேறிவிடாது. அந்தக் குறையைப் போக்க என்ன செய்ய வேண்டும் என்று கடமையுணர்ச்சியோடு வாழ்க்கையைச் சீர்திருத்த முயல வேண்டும்.

ஒழுங்குமுறை வாழ்க்கையில் அமைவதற்குப் பழக்கம் வேண்டும். அது பெரும்பாலும் ஒருவரைப் பார்த்து மற்றொருவர் கற்றுக்கொள்வதாய் ஒரு தலைமுறையாரிடமிருந்து அடுத்த தலைமுறையார் கற்றுக் கொள்வதாய் வருவது. ஆகவே அது பழக்கத்தில் அமைய வேண்டுமானால், நமக்கு முந்திய தலைமுறை நமக்கு வழிகாட்டியிருக்க வேண்டும். இல்லையானால் நாம் புதிதாகக் கற்றுக்கொண்டு, நமக்குப் பிந்திய தலைமுறைக்கு வழிகாட்டிகளாக விளங்க வேண்டும். இன்று இப்போது உடனடியாகச் செய்ய வேண்டியது, நாம் ஒருவரைப் பார்த்து மற்றொருவர் கற்றுக்கொள்ளும் கடமையாகும். அவ்வாறு நூற்றுக்கு ஐம்பது பேராவது கற்றுப் பழகிவிட்ட பிறகு, சமுதாயத்தில் உள்ள இந்தக் குறை தீர்ந்துவிட்டது என்றே சொல்லிவிட

லாம். பிறகு பெரும்பாலோர் போகும் வழியில் சிறுபான்மையோர் தாமாகவே பின்பற்றிச் செல்வார்கள்.

ஒழுங்குமுறை படிவதற்கு உரிய வழிகளில் முதன்மையானது ஒன்று; அதுதான் இடம் அறிந்தும் காலம் அறிந்தும் வாழும் திறன்.

ஆங்கிலேயர் இதற்குப் பேர்போனவராகக் கருதப் படுகின்றார்கள். அதனால்தான் புரட்சி இல்லாமலே அமைதியான முறையிலேயே பெரிய பெரிய சீர்திருத்தங்களைப் பிரிட்டனில் செய்ய முடிகின்றது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆங்கிலேயன் ஒருவன் வீட்டில் வாழும் முறை வேறு; வீட்டை விட்டு வெளியே வந்த பின் நடக்கும் முறை வேறு. ஞாயிற்றுக்கிழமையில் அவனுடைய போக்கு ஒருவகை; மற்ற நாட்களில் வேறுவகை; தொழில்நிலையத்தில் அவன் நடக்கும் முறை ஒன்று; பொழுதுபோக்குக் கழகத்தில் (Club) அவன் நடக்கும் முறை வேறு; திருமணக் கூட்டத்தில் அவன் ஒரு வகையாக இருப்பான்; துயரக் கூட்டத்தில் அவன் வேறு வகையாக இருப்பான். இத்தனையும் கண்டால், அவன் வெவ்வேறு இடத்திற்கு ஏற்றபடி வெவ்வேறு காலத்திற்கு ஏற்றபடி தன் போக்கையே மாற்றி அமைத்துக்கொள்வதை அறியலாம்.

வாழ்க்கையில் வெற்றி அடைந்த பெருமக்கள் எல்லோரிடத்திலும் இந்தத் திறன் அமைந்திருந்தது; காந்தியடிகள் குழந்தைகளின் இடையில் பழகிய முறை வேறு; தொழிலாளரிடத்தில் பழகிய முறை வேறு; நண்பர்களாக வந்து கண்டவர்களிடம் நடந்த முறை ஒன்று; அரசியல் காரணமாகவந்து கண்டவர்களிடம் நடந்த முறை வேறு; தனியே குடிசையில் இருந்தபோது விளங்கிய முறை ஒன்று; வெளியே கூட்டங்களின் நடுவில் விளங்கிய முறை வேறு;

தொழுகைக் கூட்டத்திற்கு முன் புன்சிரிப்போடு மகிழ்ந்த முகம் வேறு; தொழுகையின்போது அமைதி வடிவாகப் பொலிவு பெற்ற முகம் வேறு. இவ்வாறே பெரியோர்கள் பலரும் இடமும் காலமும் அறிந்து அவ்வவற்றிற்குத் தக்கவாறு தங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி வாழ்ந்த சிறப்பை உணரலாம்.

ஒழுங்குமுறை இல்லையானல் ஒன்றும் செய்ய முடியாமல் போகும் துறை ஒன்று உள்ளது. அதுதான் ராணுவத்துறை. அதில் மிகக் கடுமையாக ஒழுங்கு முறை வற்புறுத்தப்படுகிறது. அத்துறையில் எல்லா நாட்டிலும் எல்லாக் காலத்திலும் ஒழுங்குமுறை சிறப்பாக இருந்துவந்தது. அதற்காகவே, போர் என்றல் தனி உடை, தனி உள்ளம், அதற்கு அறிகுறியான பூக்கள், கொடிகள், முரசு முதலிய ஒலிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியிருக்கிறர்கள்.

ஆங்கிலேயர்களிடையில் இந்த ஒழுங்குமுறை வேரூன்றி நிற்கும்படியாகச் செய்வதற்கு உடைவகையும் துணை செய்கிறது. வீட்டு உடை, வெளியுடை, மாலை உடை, திருமண உடை, விளையாட்டு உடை, துயர உடை என்று பலவாறு உடைகளை வகுத்துக் கொண்டு, அவற்றின் நினைவால் ஒழுங்குமுறையைக் காத்துக்கொள்ள முடிகின்றது. போர்க்கு உரிய பட்டாளத்தில் உடையைப் பற்றி எவ்வளவு கவனிக்கிறர்களோ, அவ்வளவு ஆர்வத்தோடு வாழ்க்கையிலும் போற்றுகிறர்கள்.

ஒழுங்குமுறை அமைவதற்குக் காந்தியடிகள் போன்றவர்கள் உடையின் துணையைத் தேடவில்லை. காரணம் அவர்கள் உள்ளத்தால் பண்பட்டு உயர்ந்தவர்கள். ஆனல் மற்றவர்கள் அவர்களைப் பின்பற்றி எளிதில் உயர்ந்துவிட முடியாது. பொது மக்களுக்கு உடையின் துணை தேவை. பஸ், டிராம், ரயில் முதலிய

தொழில் துறைகளிலும் சில கல்வி நிலையங்களிலும் தனி வகையான உடைகளை வற்புறுத்துவதற்குக் காரணம் இதுதான். அந்தத் தனி உடையோடு இருக்கும் நேரத்திலாவது, " நாம் இப்போது வேறு வகையாக நடக்க வேண்டும் " என்ற எண்ணத்தை உண்டாக்குவதற்காகவே அவ்வாறு வற்புறுத்துகிறார்கள்.

தமிழ் நாட்டில் சமயத் துறையில் இந்த ஒழுங்கு முறைக்கு முன்னோர் வழிகோலிவிட்டிருக்கிறார்கள். கோயிலை அணுகுவது தொடங்கி, வெளியே வரும் வரையில் இன்னின்ன சின்னங்களோடு இவ்வகையான உடைகளோடு இவ்வாறு வலம் வந்து இவ்வாறு நின்று இவ்வாறு வழிபட வேண்டும் என்று வகுத்த திட்டங்கள் எல்லாம், அந்தத் துறையில் ஒழுங்கு முறையை வற்புறுத்துவதற்காக ஏற்பட்டவைகளே. ஆனால் இக்காலத்தில் அவைகள் எல்லாம் சாதி சமயப் பிரிவுகளை ஏற்படுத்தி, மக்களின் ஒற்றுமை சிதைவதற்குத் தவறாகப் பயன்படுகின்றன.

இன்று அவற்றைவிடக் கட்டுப்பாடான திட்டங்கள் சமூகத் துறையில் வேண்டும். பழங் காலத்தில் மக்கள் இவ்வளவு பெருங் கூட்டமாக அடிக்கடி பழக நேர்ந்ததில்லை. சேர சோழ பாண்டியர்களின் தலை நகரங்களிலும் திருவிழாக் கூட்டங்களிலும் தவிர, ஆயிரக்கணக்கான மக்கள் சேர்ந்து பழகும் வாய்ப்புக்கள் அக் காலத்தில் இருந்ததில்லை. இக் காலத்தில் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் எல்லாம் ஒவ்வொன்றும் ஆயிரக் கணக்கானவர்கள் கூடிப் பழகும் இடங்களாக மாறி விட்டன. விஞ்ஞான முற்போக்குகளால் போக்கு வரவு மிகுதியாகி, சமுதாய அமைப்பு முன்னைவிடப் பலமடங்கு மாறிவிட்டது. ஆகையால் முன்போல் ஒரே வகையான வெள்ளை உள்ளத்தனாக மனிதன் இப்

போது வாழ முடியாது. முற்காலத்தில் தொழில் உண்டு, கோயில் உண்டு, நாடகம் உண்டு என்று சில வற்ரேடு மட்டும் மனிதன் தன் வாழ்வை வரையறுத்துக்கொள்ள முடிந்தது. அவன் அக்காலத்தில் கற்க வேண்டிய இடவேறுபாடுகளும் திட்டங்களும்குறைவு. இக்காலத்தில் ஒரு நாளிலேயே ஒருவன் பலவாறு தன் மனப்போக்கை மாற்றி அமைத்து வாழ வேண்டும். இருபத்துநான்கு மணி நேரத்தை வீட்டிற்கு உள்ளே இவ்வளவு நேரம், வெளியே இவ்வளவுநேரம், தொழிற்சாலையில் இவ்வளவு நேரம், பொழுதுபோக்கில் இவ்வளவு நேரம், பொதுத் தொண்டில் இன்னது இன்னதற்கு இவ்வளவு இவ்வளவு நேரம் என்று கணக்கிட வேண்டிய காலம் இது. வேறு வகையாகக் கூறின், முற்காலத்தில் வாழ்க்கையாகிய நாடகத்தில் ஒருவன் கற்று நடிக்கவேண்டிய காட்சிகள் சிலவாக இருந்தன; அவைகளையும் மெல்ல மெல்ல மாற்றி நடிக்கலாம். இக்காலத்தில் நாடகத்தில் காட்சிகளும் பலவாகிவிட்டன ; விரைவான மாறுதல்களும் ஏற்பட்டுவிட்டன. ஆகவே, ஒழுங்குமுறைத் திட்டங்களும் மிகுதியாக வேண்டும். ஒழுங்குமுறை இல்லாதிருந்த நாடு அல்ல நம் நாடு ; ஆனல் இருந்த ஒழுங்குமுறைத் திட்டங்களை விரிவுபடுத்தாமல் இருப்பதே நம் குறை.

எடுத்துக்காட்டாக, ஒன்று கூறலாம். கோடம்பாக்கம் ரயில்நிலையத்தில் ஒரே சமயத்தில் நம்மவர்கள் ஏழுபேர் டிக்கட் வாங்குவதாக வைத்துக்கொள்வோம். ஏழுபேர் தாறுமாருகச் சூழ்ந்துகொண்டு இரண்டு மூன்று கைகள் டிக்கட் வாங்கும் சந்தில் நீட்டப்படும். ஆனல் ஆங்கிலேயர் ஏழு பேர் வந்து வாங்குவதானல், யாரும் சொல்லாமலே ஒருவர் பின் ஒருவராக நின்று ஒவ்வொருவராக வாங்குவார்கள். அந்த முறையை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமானல்,

டிக்கட் வாங்குமிடத்தில் இரும்புக் கம்பிகளும் தேவையாக இருக்கின்றன ; பஸ் நிலையம் முதலான இடங்களில் உள்ளவாறு போலீஸாரும் தேவையாக இருக்கிறார்கள். இப்படி டிக்கட் வாங்கிப் பயணம் செய்யும் முறை புகுந்த நாளில் இதை நம் முன்னோர்கள் கற்றுக்கொண்டு நமக்கு வழிகாட்டவில்லை. ஆனால், கோயிலுக்குள் சென்று சுற்றிவர வேண்டுமானால், வலப்பக்கமே சென்று சுற்றிவர வேண்டும் என்று ஒழுங்கு முறை கற்பித்திருக்கிறார்கள். காரணம் அறியாமலே இதை நாமும் கற்றுக்கொண் டிருக்கிறோம். இதுபோன்ற ஒழுங்கு முறைத் திட்டங்களைச் சமுதாயத்தில் பழகும்போது கற்றுக்கொண்டால் போதும் ; நாம் முன்னேற முடியும்.

சமயக் கூட்டத்தில் கடவுள் வழிபாடு முதலில் இருக்கவேண்டும் என்று முன்னோர் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அரசியல் கூட்டத்தில் முன்னே ஒருவர் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து முடிந்த பிறகு, அதை வழிமொழிந்து இரண்டாவதாகப் பேசவருகிறவர் இரு கைகளையும் கூப்பிக் கண்ணை மூடிக்கொண்டு இசையோடு கடவுள் வாழ்த்துப் பாடுகிறார். இது இடம் அறியாமல் செய்யும் தவறு.

ஜில்லா போர்டு தேர்தல் நடைபெறுகிறது. மாரியம்மன் கோயிலில் ஆடு வெட்டும் அறியாமை பற்றிப் பேசி மக்களை வாக்குரிமை அளிக்கும்படி வேண்டுகிறார் பேச்சாளர். இதுவும் இடம் அறியாமை !

கலைஞர் ஒருவருக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெறுகிறது. முன்னே ஒருவர் பேசிய சில கருத்துக்களைக் கண்டித்துப் பேசிக்கொண்டிருக்கிறார் பேச்சாளர் ஒருவர். இதுவும் இடம் அறியாமை !

இலக்கியக் கூட்டம் ஒன்றில் ஒரு புலவரின் கற்பனைத் திறனைப் பாராட்டிப் பேசினார் ஒருவர்.

மற்ளுருவர் எழுந்து பேசத் தொடங்கியதும், அந்தப் புலவர் எழுதியவை எல்லாம் பொய் என்று வரலாற்று ஆராய்ச்சி செய்கிருர். இதுவும் இடம் அறியாமை!

வரலாற்று ஆராய்ச்சிக் கூட்டம் ஒன்றில் ஒருவரின் காலத்தைச் சான்று காட்டிப் பேசினுர் ஒருவர்; அடுத்தவர் ஒரு வரலாற்று நூலில் உள்ள எதுகை மோனை நயங்களையும் சொல்லாற்றலையும் வியந்து பாராட்டுகிருர்...இடம் அறியாமை!

இவர்கள் பொதுமக்களுக்கு வழிகாட்ட வேண்டியவர்கள்; அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு மேடைமேல் ஏறி நின்று வாய்திறப்பவர்கள். இவர்கள் திருந்தாதபோது, இவர்களே தவருன வழி காட்டும்போது, பொதுமக்களுக்கு இடமறிந்து வாழும் கலையைக் கற்பிப்பவர் யார்?

தான் இருப்பது இன்ன இடம், மேற்கொண்டுள்ள கடமை இன்னது, அதற்குரிய வரையறை இவ்வளவு என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் மங்காமல் இருந்தால்தான், நாட்டின் சமுதாய வாழ்வில் ஒழுங்குமுறை அமையும். இது இடத்திற்கு ஏற்ற 'வேஷம்' போடுதல் அல்ல; உள்ளொன்று புறமொன்ருக நடித்தலும் அல்ல; தன் வாழ்க்கையின் பல்வேறு பக்கங்களையும் உணர்ந்து நடக்கும் திறன் இது.

சமுதாய வாழ்க்கையில் இடம் அறியாமல் தவறு செய்யும் ஒருவன், தன் குடும்ப வாழ்க்கையில் தான் ஒருவனே பலவேறு வகையாக இருப்பதை உணர வேண்டும். அவன் தன் பெற்ருேரிடம் ஒருவகையாக நடந்துகொள்கிருன்; மனைவியிடம் ஒருவகையாகப் பழகுகிருன்; குழந்தைகளிடத்தில் கொஞ்சுகிருன்; விருந்தாளிகளிடத்தில் புதிய உணர்ச்சியோடு அன்பு செலுத்துகிருன்; வேலையாட்களிடத்தில் வேறு வகையாக ஆட்சி புரிகிருன். ஒரே மனிதன் மகனுக,

கணவனாக, தந்தையாக, அன்பனாக, தலைவனாக, குடும்பத்திற்குள் தனக்கு அமைந்திருக்கும் பல பக்கங்களையும் உணர்ந்து வாழ்கிறான். அப்படி வாழ்ந்தால் தான் குடும்பத்தில் வெற்றி காண முடியும். அவ்வாறே சமுதாய வாழ்வில் தனக்குப் பலவேறு பக்கங்கள் உண்டு என்று உணர்ந்து அங்கங்கு அமைந்த கடமைகளை ஒழுங்காகச் செய்து நடக்க வேண்டும் என்ற உணர்வுதான் ஒழுங்குமுறைக்கு அடிப்படை.

இந்த உணர்வு இருந்தால், தன்னலம் கொண்டு சமுதாய ஒழுங்கைக் கெடுக்கமாட்டான். டிக்கட் வாங்கும் இடத்தில் சமுதாயத்தில் தான் ஓர் உறுப்பினன் என்று அமைதியாக நடந்துகொள்வான்; நடுத் தெருவில் நடக்கும்போது அங்குத் தன்னைப் போல் பலரும் நடந்து செல்ல உரிமை உண்டு என்று எண்ணி எச்சில் துப்ப மாட்டான்; பொது இடத்தின் தூய்மையைக் காக்கும் பொறுப்பில் தனக்கும் பங்கு உண்டு என்று கண்ட இடத்தில் காகிதத்தைக் கிழித்து எறிய மாட்டான்; பஸ்ஸிலும் ரயிலிலும் குத்துச்சண்டை பயில மாட்டான்; ஒருவர் பேசும் போது, தனக்கு உரிய முறை வரும் என்று பொறுத்திருப்பான்; பொது இடங்களில் உரத்த குரலில் பேசிச் சந்தை ஆக்காமல் அமைதியாகப் பழகக் கற்றுக்கொள்வான்; நூல்நிலையத்தில் பேசமாட்டான்; பொழுதுபோக்குக் கழகத்தில் பேசா நோன்பு கொள்ளமாட்டான்; வேலை நேரத்தில் விளையாட மாட்டான்; விளையாட்டின்போது கலகமும் செய்ய மாட்டான்; அமைதியும் மேற்கொள்ளமாட்டான்.

இன்ன இடம் இன்ன கடமை என்று அறியாமல் எங்கும் ஒரே வகையாக நடப்பவன், பிடித்துவைத்துள்ள களிமண் உருண்டை போன்றவன். இடம் அறிந்து காலம் அறிந்து வாழ வல்லவன், எல்லாப்

பகுதிகளிலும் கலையொளி வீசும் சிற்பம் போன்றவன். சமுதாயம் களிமண் உருண்டைகள் நிறைந்த மேடு ஆகுமானல் அடக்குமுறையும் சர்வாதிகாரியும் தோன்றுதல் இயற்கை. சமுதாயம் கலைச் சிற்பங்கள் நிறைந்த கூடம் ஆனல், ஒழுங்குமுறையும் மக்களாட்சியும் நீடு நிலவும்.

## 17. கையும் காசும்

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

உயிர் வாழ்க்கைக்கு மழை எவ்வளவு இன்றி யமையாதது என்பதை விளக்கவந்த இடத்தில் திருவள்ளுவர் பாடியது இது. உயிர் உடம்போடு ஒட்டி வாழ்கின்ற வாழ்க்கைக்கு முதல் காரணம் மழை. ஆனால் நல்ல அரசியல் இருந்தால்தான், அந்த உயிரும் உடம்பில் அமைதியாக வாழ முடியும். ஆகவே, நல்ல அரசியலும் மிக மிகத் தேவையானதாக உள்ளது. அரசியல்வாழ்க்கையில் கெடுக்கவல்ல செல்வாக்கு உள்ளது எது, கெட்டவர்களைக் கைதூக்கி எடுக்கவல்ல ஆற்றல் உள்ளதும் எது என்று எண்ணிப் பார்த்தால், செய்தித் தாள் என்று சொல்லலாம். ஆகவே, உயிர் வாழ்க்கைக்கு மழை எப்படி அடிப்படையோ, அப்படி அரசியல் வாழ்க்கைக்குச் செய்தித்தாள் (பத்திரிகை) அடிப்படையாக உள்ளது எனலாம்.

> கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
> எடுப்பதூஉம் செய்தி இதழ்

என்று பாடி உணரத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு செய்தித்தாள் ஆக்கமும் கேடும் வல்லதாக விளங்குகிறது.

பழங்காலத்தில் மக்கள் அரசனை நம்பினார்கள்; அரசன் அறத்தை நம்பினான். இந்த நம்பிக்கை இரு சாராரையும் காத்துவந்தது. இந்தக் காலமோ, நம்பிக்கைக்கு அவ்வளவாக இடம் தராத காலம். ஆராய்ச்சி மிகுந்துள்ள காலம் இது. (நம்பிக்கை அடியோடு தொலைந்துவிட்டது என்றோ, ஆராய்ச்சியே எங்கும் உள்ளது என்றோ கருதலாகாது; மிகுதி என்றே கருத வேண்டும்.) இந்தக் காலத்திலும் அமைச்சர்களிலும் மற்றவர்களிலும் சிலர்க்கு அறத்தில் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அறத்தை நம்புவதைவிட மிகுதியாகக் கட்சிச் செல்வாக்கையே நம்புகிறார்கள். மக்களும் ஆட்சித் தலைவர்களை நம்புவதைவிட மிகுதியாகப் பணத்தையே நம்புகிறார்கள். கட்சிச் செல்வாக்கும் பணப் பெருக்கமும் நிலையில்லாதவை; அடிக்கடி மாறக் கூடியவை. ஆகவே, இந்த நம்பிக்கைகளும் நிலைபெறாமல் அடிக்கடி மாறுகின்றன. அதனால் நம்பிக்கை வலிமை இழந்துவிட்ட காலம் என்று இதனைக் குறிப்பிடலாம்.

அரசனுக்கும் மக்களுக்கும் இடையே நின்று இரு சாராரையும் பிணைக்க வல்லதாகவும் திருத்தவல்லதாகவும் பழங் காலத்தில் விளங்கியது படை. அரசனுக்குக் காப்பாக இருந்தது படை. படையில் இருந்த வீரர்கள் எல்லோரும் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்ல; மக்களிடையிலிருந்து வந்தவர்கள் அவர்கள். ஆகவே மக்கள் படையை வெறுக்க

முடியாது ; அரசனும் படையைப் புறக்கணிக்க முடியாது.

பழங்காலத்தில் படைக்கு இருந்த ஆற்றலும் சிறப்பும், இக்காலத்தில் செய்தித்தாள்களுக்கு உள்ளன. மக்களாட்சியில் உண்மையான படை பத்திரிகையே என்பதை உணர்ந்த காரணத்தால்தான், அணுக்குண்டுகளைச் செய்து குவித்து வைத்துள்ள அமெரிக்க அரசாங்கமும் 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' முதலான பத்திரிகைகளுக்காக வெளிநாடுகளிலும் ஏராளமான பணத்தைச் செலவுசெய்து நடத்தி வருகின்றது. அணுக்குண்டைவிடச் செய்தித்தாள்களுக்கு ஆற்றல் மிகுதி என்பதை அந் நாடு உணர்ந்து விட்டதே இதற்குக் காரணம்.

இவ்வளவு ஆற்றல் வாய்ந்த செய்தித்தாள் மக்களின் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் ஒளிக்காமல் மறைக்காமல் உணர்த்திவரும் கருவியாக இருந்தால் மக்களாட்சியை நல்லமுறையில் காப்பாற்றமுடியும். மக்களின் தேவை பற்றிய உணர்ச்சிகளும் கருத்துக்களும் தக்க முறையில் வெளிப்பட வழி இல்லாத போதுதான், சதிக்கூட்டமும் கொடுஞ் செயல்களும் வளரத் தொடங்குகின்றன. செய்தித்தாள் தக்க முறையில் மக்களின் தேவைகளை உணர்த்திவருமானல், சதிகளையும் கொடுமைகளையும் பற்றிய எண்ணமே தோன்ருதபடி மக்களாட்சியைக் காத்துச் செல்ல முடியும்.

ஆனல் தமிழ்நாட்டுச் செய்தித்தாள்கள் பல இந்த வகையில் தொண்டு செய்யவில்லை என்று கூறலாம். வங்காள நாட்டுச் செய்தித்தாள் வங்காள மக்களுக்காகத் தொண்டு செய்யும் அளவிற்குத் தமிழ் நாட்டுப் பெரிய செய்தித்தாள்கள் தொண்டு ஆற்றுவதில்லை. மராத்தி நாட்டுச் செய்தித்தாளோ ஆந்திர

நாட்டுச் செய்தித்தாளோ அந்தந்த மாகாணங்களுக்காக — அந்தந்த மக்களுக்காக உதவி செய்யும் அளவிற்குத் தமிழ்நாட்டுப் பெரிய செய்தித்தாள்கள் உதவுவதில்லை. வங்காள மக்களுக்கு ஏதேனும் தேவை என்றால், அந்த மாகாணத்தில் செய்தித்தாள்கள் அதை இருட்டடிப்புச் செய்யாமல், நன்றாக வெளியிட்டு மேலிடத்தார்க்கு எட்டுமாறு செய்கின்றன. அவ்வாறே மற்ற மாகாணத்து மக்களின் உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் அங்கங்கே நடக்கும் செய்தித்தாள்கள் வெளியிட்டுப் பயன் விளையச் செய்கின்றன. ஆனால், தமிழ்நாட்டில் பெரிய அளவில் விற்பனையாகும் செய்தித் தாள்கள், தமிழ்நாட்டின் தேவைகளை இருட்டடிப்புச் செய்து மேலிடத்தார்க்கு நல்ல பிள்ளைகளாக நடக்கின்றன. தமிழ்மக்களின் உணர்ச்சிகளும் கருத்துக்களும் மேலிடத்தார்க்குத் தெரியாதவாறு மறைத்து வெளிநாட்டில் தமக்குள்ள செல்வாக்கைக் காத்துக்கொள்ள முனைகின்றன. இவை வாழ்வது தமிழ்நாட்டில்; வளர்வது தமிழர் பணத்தால். ஆனால் தமிழர்களின் உணர்ச்சிகளையும் தேவைகளையும் வெளியிட இவை கூசுகின்றன. இவ்வாறு தக்க வாய்ப்பு இல்லாதிருந்தும், தமிழரின் மனம் கெட்டுப்போகவில்லை; சதிக் கூட்டங்களும் கொடுஞ் செயல்களும் தமிழ்நாட்டில் தலையெடுக்கவில்லை என்றால்,அதற்குக்காரணம் தமிழரின் உயர்ந்த பண்பாடே எனலாம். பாம்புக்கும் பால் வார்ப்பது போன்ற பண்பு — தீங்கு இழைப்போர்க்கும் நன்மை நாடும் மனப்பான்மை தமிழர்க்கு இருப்பதால்தான் இவை தமிழ் நாட்டில் வாழ முடிகின்றது. பழங்காலத்தில் மன்னர்கள் கொடுங்கோலர்களாக மாறாதவாறு, புலவர்களின் அறிவுரை தடுத்துக் காப்பாற்றியது போல், அந்தப் புலவர்கள் போற்றிய அறம்

பற்றிய நம்பிக்கையும் திருக்குறள் முதலான அற நூல்களின் கருத்துக்களும் கற்றவர் கல்லாதவர் எல்லாரிடையிலும் பரவி, இக் கால மக்களிடையே கொடியவர்கள் தோன்றுதவாறு காத்துவருகின்றன. அதனுல்தான் இந்திய நாட்டில் தமிழர் நலம் பெரிதும் புறக்கணிக்கப்பட்டிருந்தும் தமிழர் பொறுமை பூண்டு அமைதியாக இருக்க முடிகின்றது.

இந்தப் பொறுமையைத் தவருகப் பயன்படுத்திக் கொள்ளலாகாது. தமிழ்நாட்டுச் செய்தித்தாள்கள் தங்கள் கடமையை நன்கு உணர்ந்து செயலாற்ற வேண்டும். வங்காள நாட்டுச் செய்தித்தாள் ஒன்று, வங்காள மக்களின் நன்மைக்கு முதலிடமும், இந்திய நாட்டு ஒற்றுமைக்கு இரண்டாம் இடமும், உலக ஒற்றுமைக்கு மூன்ரும் இடமும் தருகின்றது. உலகில் எந்த நாட்டிலும் இந்தப் போக்கே செய்தித்தாள் களில் காணப்படுகிறது. ஆனுல் தமிழ்நாட்டில் மட்டும், நாற்பதினுயிரம் ஐம்பதினுயிரத்திற்கு மேல் விற்பனையாகும் செய்தித் தாள்கள் தலைகீழான முறையில் நடந்துகொள்கின்றன. உலகத்திற்கு முதலிடம், இந்தியாவிற்கு இரண்டாம் இடம், தமிழ் நாட்டிற்கு மூன்ரும் இடம் என்னும் நிலையில் சில பெரிய செய்தித்தாள்கள் உள்ளன. இந்திய ஒற்றுமை என்னும் பெயரால் தமிழ் நாட்டின் நன்மையைப் புறக்கணிக்கவும் முயல்கின்றன; தமிழரின் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் மறைக்கவும் முயல்கின்றன. ஒரு கட்சிச் சார்பான கருத்துக்களை வேண்டுமானுல் தன் கட்சி நோக்கத்தோடு ஒரு செய்தித்தாள் இருட்டடிப்புச் செய்யலாம். அதுவும் செய்தித்தாளுக்கு அழகு அல்ல; தவறி அவ்வாறு செய்து ஒரு கட்சியை வளர்த்தாலும் வளர்த்து ஒழியட்டும். ஆனுல் நாட்டு மக்களில் பெரும்பாலோ

ரின் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் அவ்வாறு மறைப்பது தகாது.

சுதந்தரப் போராட்டத்தின்போது இந்தச் செய்தித்தாள்களின் துரோக மனப்பான்மை புலப்படவில்லை. காரணம் என்ன எனில் அப்போது ஒவ்வொரு மாகாணத்து மக்களும் தம் தம் மாகாண நன்மையைத் தியாகம் செய்து. இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலையில் பேரார்வம் கொண்டிருந்தனர். சுதந்தரம் பெற்றுப் பொது நன்மைக்கு வழி வகுத்த பிறகு, சொந்த நன்மையைத் தேடிக்கொள்ளலாம் என்று இருந்த காலம் அது. அந்தக் காலத்தில் இந்தச் செய்தித்தாள்களின் போக்கு, மக்களின் மனப் போக்கிற்கு ஒத்தவகையில் இருந்தது. ஆகையால் இவற்றிற்கு மக்களின் முழு ஆதரவும் கிடைத்தது. சுதந்தரம் பெற்ற பிறகு மாகாணச் செய்திக்கு முதலிடமும், இந்திய ஒற்றுமைக்கு இரண்டாம் இடமும், உலக அமைதிக்கு மூன்றும் இடமும் கொடுத்துத் தம் போக்கை மாற்றிக்கொள்வது இவற்றின் கடமையாகும். வங்காளம், மராத்தி, ஆந்திரம் முதலிய மாகாணங்களில் செய்தித் தாள்கள் இவ்வாறு மாறுதல் செய்துகொண்டன. தமிழ்நாட்டுச் செய்தித் தாள்கள் பழைய நிலையிலேயே நின்று வாழ முயல்கின்றன. மக்களின் ஆதரவு தொடர்ந்து இருந்துவருவதால்-இன்னும் நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரத்திற்கு மேல் நாள்தோறும் விற்பனையாகிவருவதால்-அவை ஒருவகைச் செருக்குக் கொண்டு, தம் போக்கே சரியான போக்கு என்று மயங்கியிருக்கின்றன போலும்!

இவை இந்தப் போக்கில் தொடர்ந்து இருந்து வருமானால், இவற்றின் செல்வாக்கிற்கும் தீங்கு நேரும். இவற்றின் கருத்துக்களே மாகாண

மக்களின் கருத்துக்கள் என மயங்கும் மேலிடத்தார்க்கும் தீங்கு ஆகும். பழுதெண்ணும் மந்திரி என்று திருவள்ளுவர் குறிப்பிட்ட 'ராஜகுரு'வின் தீயபோக்கு அவர்க்கும் அவரை நம்பிய அரசர்க்கும் தீமையாய் முடிவதுபோல் ஆகும். மக்களாட்சியில் "குடி தழீஇக் கோல் ஓச்ச' வேண்டிய கடமையைச் செய்ய முடியாமல், இந்தச் செய்தித்தாள்கள் குறுக்கே நின்று தம் விற்பனை எண்ணிக்கையைக் காட்டி ஆள்வோரை மயக்கும் ராஜகுருக்களாக விளங்குவது நாட்டுக்குத் தீமையாகும்.

இந்தப் பெரிய செய்தித்தாள்கள் அவ்வப்போது மக்களின் தேவைகளை உள்ளவாறு உணர்த்தத் தவறிய காரணத்தால் தமிழ்நாடு இழந்தவை பல. இன்று ஆந்திர மாகாணத்தைச் சார்ந்துவிட்டுள்ள தமிழ்ப் பகுதிகள் (சித்தூர் மாவட்டப் பகுதிகள்) முன்னமே தமிழ்நாட்டோடு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இன்று மலையாள நாட்டோடு இணைக்கப்படும் பீர்மேடு, நெய்யாற்றங்கரை முதலிய தமிழ்ப் பகுதிகள் கிளர்ச்சி இல்லாமலே, கொடுமை இல்லாமலே தமிழ் நாட்டிற்கு உரியன என்று தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்களில், இயற்கைவளமும் செயற்கைவளமும் குறைந்த தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டும். நாளொரு வண்ணமாகத் தமிழ்நாட்டில் பெருகிவரும் இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவாவது குறைக்கப்பட்டிருக்க வேண்டும். இலங்கையிலும் மற்ற வெளி நாடுகளிலும் குடியேறிய தமிழர்கள் படும் துன்பங்கள் தீர வழி வகுக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ்நாட்டு நெசவாளர் முதலானோரின் உழைப்பு வீண் போகாவாறு காக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான

ஆண்டுகளாக இலக்கிய வளம்பெற்று நாட்டை ஆண்டுவந்த தமிழ்மொழிக்குத் தபால் கார்டு முதலியவற்றில் உரிமையான இடம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ்மொழி தமிழ்நாட்டில் கட்டாயமொழி ஆக்கப்பட்டிருக்க வேண்டும். இவை போன்ற துறைகளில் மக்களின் உணர்ச்சிகளும் கருத்துக்களும் மேலிடத்தார்க்கு எட்டாதவாறு செய்த தொண்டு இந்த நாட்டுச் செய்தித் தாள்களையே சாரும். கிளர்ச்சியும் எதிர்ப்பும் பூசலும் ஆரவாரமும் கசப்பும் உட்பகையும் இன்று தமிழ்நாட்டில் உள்ளன என்றால் காரணம் என்ன ? இந்தப் பெரிய செய்தித்தாள்கள் தொடர்ந்து செய்துவந்த இருட்டடிப்பே காரணம் எனலாம்.

மக்களின் தேவைகளை நெடுங்காலம் மறைக்க முடியாது; நெடுங்காலம் புறக்கணிக்க முடியாது; தமிழ் மக்கள் ஆந்திரர்களைப் போல், மராத்தியர்களைப் போல், மற்றவர்களைப் போல் சின்ன கொடுஞ் செயல்களிலும் இறங்கமாட்டார்கள்; மனம் வளர்ந்துவிட்ட மக்கள் ஆகையால், உடல் வலிமை பற்றிய முரட்டுச் செயல்களில் இவர்கள் ஈடுபட முடியாது. ரயிலை நிறுத்தல், கொள்ளையடித்தல், தீயிடுதல் முதலிய கொடுஞ் செயல்களுக்கும் தமிழர் மனப்பான்மைக்கும் நெடுந் தொலைவு. ஆனால் இத் தன்மை பற்றித் தமிழர்கள் கோழைகள் என்றோ, எது செய்தாலும் பொறுத்துக் கொள்ளும் மரக் கட்டைகள் என்றோ இந்தச் செய்தித் தாள்கள் எண்ணிவிடலாகாது.

ஆகையால் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள்: உங்களை இந்தச் செய்தித் தாள்கள் மரக்கட்டைகள் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றன. மேலிடத்தாரும் இவற்றை நம்பி மயங்கி அவ்வாறு எண்ணுவதாகத் தெரிகிறது. உங்கள் பிரதிநிதிகளாகப்

பாராளுமன்றத்திற்கும் சட்டசபைக்கும் சென்றுள்ளவர்களும் இந்தச் செய்தித்தாள்களின் போக்கையே பின்பற்றுகிறார்கள்.

மேலிடத்தார்க்கு நல்ல பிள்ளைகளாக நடக்க வேண்டும் என்று நம்பி, உங்கள் கோரிக்கைகளை வெளியிடாமல், வாய் திறவாமல், கைதூக்கிப் பொம்மைகளாக இருந்துவருகிறார்கள். மக்களின் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் மறைத்திடும் செய்தித் தாள்களுக்குத் தமிழ்நாட்டில் பெரு மதிப்பு இருந்து வரும்போது நாமும் அவ்வாறே செய்து பெருமதிப்போடு வாழலாம் என்று கனவுகாண்கிறார்கள். நீங்கள், தமிழ்ப் பெருமக்கள், இந்தக் கனவு காணும் பிரதிநிதிகளையும்மேலிடத்தாரையும்விழிக்கச் செய்யவேண்டும். என்ன துரோகம் செய்தாலும் இந்த நாட்டில் முன்னேற முடியும் என்ற நம்பிக்கையோடு இங்கே வளர்கின்ற செய்தித் தாள்களுக்கும் நீங்கள் மரக்கட்டைகள் அல்ல என்பதை உணர்த்த வேண்டும்.

அதற்கு உரிய வழி ஒன்று; அறத்தை மறவாமல் போற்றும் மக்களாகிய உங்களுக்கு அதுவே வழி. அந்தக் கடமையை அமைதியாகச் செய்யுங்கள். தமிழ் மக்களாகிய உங்கள் தேவைகளைப் புறக்கணிக்கும் செய்தித்தாள்களைத் தொடாதீர்கள். உங்கள் கைக்காசு அவற்றின் முதலாளிகளுக்குப் போகாதவாறு காத்துக்கொள்ளுங்கள். லங்காஷயர் மில் முதலாளிகளுக்கு நம் பணம் போகாதவாறு தடுத்து ராட்டைச் சுற்றிக் கதர் நூல் நூற்றால், ஆளும் ஆங்கிலேயரின் மனம் மாறும் என்று காந்தியடிகள் அன்பு நெறியில் ஒரு கடமையை அன்று உணர்த்தி நம் வாழ்வுக்கு வழி வகுத்தார். அதையே இன்று இந்தச் செய்தித்தாள்களின் முதலாளிகளிடமும் காட்ட

வேண்டும். நாற்பதினுயிரம் ஐம்பதினுயிரம் என்று விற்பனையாகும் செய்தித் தாள்களை நாலாயிரம் ஐயாயிரம் என்ற அளவிற்குக் குறைத்துவிட உங்களால் முடியும். நீங்கள் கொஞ்சம் கடமையுணர்ச்சியோடு, உங்கள் நாடு வாழ வேண்டும் என்று மனம் வைத்து நடந்தால் இது முடியும். சில வாரங்களில் நாலாயிரம் ஐயாயிரம் என்ற அளவிற்கு இவை குறைந்து வருமாறு செய்ய முடியும். முடிந்ததைச் செய்யுங்கள். முடியாத பலாத்காரச் செயல்களில் இறங்க ஒரு சிலர் தவருக எண்ணலாம். மற்றவர்கள்போல் வன்புநெறியில் நடந்து நீங்கள் வெற்றி பெற முடியாது. அன்பு நெறியில் அமைதியாகக் கடமையைச் செய்வதால்தான் நீங்கள் வெற்றிபெற முடியும். அருமையான பளபளப்பும் மென்மையும் வாய்ந்த துணியாக இருந்தாலும் ஆங்கில ஆலைத் துணி வேண்டாம் என்று காந்தியடிகள் அறிவுறுத்தினுர் அல்லவா? அந்த நெறியைப் போற்றுங்கள். எவ்வளவு அழகாக உலகச் செய்திகளையும் இந்தியச் செய்திகளையும் ஒழுங்குபடுத்தித் திறம்பட வெளியிடும் செய்தித்தாளாக இருந்தாலும், அதை வேண்டாம் என்று தள்ளுங்கள். கதர் போல் முரட்டுத் தன்மையுடையதாக வெளிவந்தாலும் தமிழ்மக்களின் நன்மைக்கு முதலிடம் தரும் செய்தித்தாள்களையே வாங்குங்கள்.

மக்களாட்சியில் உங்களுக்கு உள்ள பேராற்றல் இது. மன்னர்கள் சோறு வழங்கிப் படை திரட்டிக் காத்தார்கள். அது முடியாட்சிக் காலம். மக்களாட்சியில் உள்ள பெரும் படையாகிய இந்தச் செய்தித் தாள்களை நீங்கள்தான் காசு வழங்கிக் காப்பாற்றுகின்றீர்கள். காசைக் கருத்துடன் செலவு செய்யுங்கள். இந்தப் படையும் கடமையுணர்ச்சியுடன்

திருந்தும். நீங்கள் இதைச் செய்யத் தவறிவிட்டு அவர்களையும் இவர்களையும் பழித்துக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. பழிப்பது எளிது; கடமையுணர்ந்து செய்வது அரிது. மேலிடத்தாரையும் செய்தித்தாள்களையும் குறைகூறலாம்; அவர்களிடம் குறை உள்ளது; ஆனால் நாம் கூறும் குறை அவர்களுக்கு எட்டவில்லை; ஆகையால் குறை கூறுவதால் மட்டும் பயனில்லை. ராஜகுருக்கள் எங்கள் மதிப்பையும் நன்னம்பிக்கையையும் இழந்தவர்கள் என்பதைக் காட்டி மெய்ப்படுத்துவோம்; அரசர்கள் உண்மை உணர்ந்து திருந்துவார்கள். இந்தப் பெரிய மாறுதலை ஏற்படுத்த உங்களால் முடியும். நீங்கள் நாள்தோறும் செய்தித்தாள் வாங்குவதற்குச் செலவிடும் ஓரணா இரண்டணாக் காசைக் கருத்தோடு செலவிட்டால் போதும்; இந்த மாறுதலைச் செய்துவிட முடியும். பழங்காலத்தில் இரத்த வெள்ளம் பாய்ச்சிச் செய்ய வேண்டிய பெரிய மாறுதலை இந்தக் காலத்தில் இத்தகைய கடமை யுணர்ச்சியால் செய்துவிட முடியும். நாற்பதினாயிரம் என்ற விற்பனையளவு நாலாயிரம் என்று குறைந்திடச் செய்யுங்கள். மறுநாளே, இந்தச் செய்தித்தாள்முதலாளிகளின் மனம் மாறும். தமிழ் மக்களின் நன்மை பற்றிய செய்திகளை இனி மறைக்கக் கூடாது என்ற புத்துணர்ச்சி வரும். எல்லைத் தகராறு, மொழிச்சிக்கல், மாகாணத் தொழில் வருவாய் முதலான எல்லாச் செய்திகளையும் அப்போது இதே செய்தித்தாள்கள் பெரிய எழுத்தில் வெளியிடத் தொடங்கும். அதற்காக நீங்கள் கருத வேண்டியவை போர்க்களமும் பெரும் புரட்சியும் அல்ல; உங்கள் கையும் காசும்தான்.

## 18. நொண்டி மாடு

நொண்டி மாடு மந்தையோடு போய் மேய்வது அந்த மந்தைக்கும் இடையூறு; நொண்டி மாட்டுக்கும் இடையூறு; மேய்ப்பவன் அதன்மேல் கொஞ்சம் கருத்தாக இருந்தால் ஒரு சிறு நன்மையும் ஏற்படலாம்; மேய்ப்பவனும் அதைப் பொருட்படுத்தாமல் விட்டால் மந்தையின் நிலையைவிட அந்த மாட்டின் நிலை மிக இரங்கத்தக்கதாகும்.

இந்திய அரசாங்கத்தில் ஒரு பகுதியாக உள்ள தமிழ் நாட்டின் நிலை நொண்டிமாட்டின் நிலையாகவே இருக்கிறது.

இந்திய அரசாங்கத்தின் தலைமை வடகோடியில் டில்லி நகரத்தில் உள்ளது. விஞ்ஞான வளர்ச்சியால் வேகமான போக்குவரவுக் கருவிகள் ஏற்பட்ட பிறகு, இவ்வாறு வடகோடியும் தென்கோடியுமாக இருப்பதால் இடர்ப்பாடு ஒன்றும் இல்லை. தொலைவு என்ற இந்த ஒரு காரணம் மட்டும் இருந்தால் இது உண்மையே ஆகும். ஆனால் வேறு சில குறைகளும் உடன் சேரும்போது, தொலைவில் இருத்தல் குறைகளுக்குத் துணை செய்வதுபோல் ஆகிறது.

கேரளநாடும் தென்கோடிதான் ; தமிழ் நாட்டை விடச் சிறிது தென்கோடி என்றும் கூறலாம். நொண்டி மாட்டின் நிலை அதற்கு இல்லை. கேரள நாட்டு மக்கள் இந்திய அரசாங்கத்திலும் வெளியிலும் மிக நல்ல நிலைகளில் இருந்துகொண்டு செல்வாக்கு உடையவர்களாய் ஒற்றுமையாய் வாழ்ந்து தம் நாட்டைக் காத்துக்கொள்கின்றனர்.

கேரளத்தாராகிய மலையாளிகள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ ஒருவரை ஒருவர் காணநேரும்போது உறவினரைக் காண்பதுபோல் உள்ளம் மகிழ்ந்து உறவாடுகிருர்கள். ஆனல் தமிழர் ஒருவரை ஒருவர் காணும்போது எப்படியோ பொருமை நோக்கு ஏற்பட்டுவிடுகிறது. ஒரே கட்சியைச் சார்ந்த தமிழர்களுக்குள்ளேயே இப்படிப் பொருமை என்ருல் எதிர்க்கட்சியாரைப் பார்க்கும் போது எப்படி அன்போடு பழக முடியும்? மலையாளிகளுக்குள் வேறு வேறு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஒரே இனம் என்ற பற்றும் ஒருவர்க்கு ஒருவர் உதவி செய்வது கடமை என்ற உணர்ச்சியும் இருக்கின்றன. ஆனல் தமிழர்களுக்குள் இந்த நிலைமை பெரும்பாலும் இல்லை. ஒரு தமிழன் வாழ்வைக் கெடுப்பவன் பெரும்பாலும் இன்னெரு தமிழனுகவே இருக்கிருன். அயலான் குறுக்கிட்டுத் தமிழனைக் கெடுக்கும்போதும் தன் கையால் அவன் கண்ணைக் குத்தாமல் இன்னெரு தமிழனுடைய கையைக் கொண்டே குத்துகிருன். தமிழன் இன்னெரு தமிழனைப் பார்த்தால், முடியுமானுல் ஆங்கிலத்தில் பேசவே முற்படுகிருன். தமிழ் நாட்டிற்குள்ளேயே இந்த நிலை காணப்படுகின்றது. ஆனல் ஒரு மலையாளி மற்றெரு மலையாளியை லண்டன் மாநகரத்திலோ நியூயார்க் நகரத்திலோ கண்டாலும் உடனே மலையாள மொழியே அவர்களின்

வாயில் வருகிறது. இந்த அளவிற்குத் தமிழருக்குத் தாழ்வு மனப்பான்மை இருக்கிறது ; மலையாளிகளுக்குத் தன் மதிப்பு (சுய மரியாதை) இருக்கிறது. தமிழ் நாடு நொண்டி மாடாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

விதிவிலக்கு இல்லாமற் போகவில்லை. தமிழர்களுக்குள் நல்லவர்கள், நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் உடையவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் தொகை போதாது ; ஒரு நாட்டைக் காக்கும் அளவிற்கு அந்தத் தொகை பெருகவில்லை ; மற்ற மொழியாருள் அப்படிப்பட்டவர்களின் தொகையே பெருகியுள்ளது.

நொண்டி மாடு என்பதை விளக்குவதற்கு இன்னொன்றை எடுத்துக்காட்டாகப் பார்ப்போம். மொழிவாரி மாகாணம் வேண்டும் என்று ஆந்திரர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அவ்வாறு பிரிப்பது நாட்டு ஒற்றுமைக்குக் கேடு என்று மத்திய அரசாங்கம் தடை செய்து வற்புறுத்தியது. ஆந்திர நாடு நொண்டி மாடாக இருக்கவில்லை. கட்சி வேறுபாடு முதலியவைகளை அப்போதைக்கு மறந்து பாடுபடுவது கடமை என்று உணர்ந்து, அனைவரும் ஒன்றுபட்டார்கள் ; வலியுறுத்தினார்கள். ஆந்திரப் பத்திரிகைகளும் கடமையுணர்ச்சியோடு கிளர்ச்சி செய்தன. கூடாது என்று தடுத்த மத்திய அரசாங்கமே வந்து திறப்புவிழா நடத்தும்படியாகச் செய்துவிட்டார்கள். ஆந்திர மாகாணம் அமைத்துக்கொண்டார்கள். தமிழ் நாட்டார் அவ்வாறு பொது வேலைக்கு ஒன்றுபடுவதில்லை ; தமிழ் நாட்டுப் பெரிய பத்திரிகைகள் மத்திய அரசாங்கத்தின் விளம்பரக் கருவிகளாக இருக்கின்றனவே தவிர, தமிழ்மக்களின் உள்ளத்தை எடுத்துக்காட்டுவனவாக இல்லை.

திருவாங்கூரில் சேர்ந்துள்ள நாஞ்சில் நாடு முழுக்க முழுக்கத் தமிழ் நாட்டோடு சேரவேண்டிய தமிழர் வாழ்ந்து வரும் தமிழ்ப்பகுதி யாகும். அதைத் தமிழ் நாட்டோடு சேர்க்க வேண்டும் என்று ஒரு கிளர்ச்சி நடந்தது. அப்போது தமிழ் நாட்டுப் பெரிய பத்திரிகைகள், தலைமையாசிரியருக்குப் பயந்த சிறு பிள்ளைகள் போல் வாய்மூடி மவுனியாக இருந்தன. மத்திய அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளைகளாக நடக்க ஆசைப்பட்ட சில பத்திரிகைகள் கிளர்ச்சியைக் கண்டித்தும் எழுதின. கிளர்ச்சி போராட்டமாக வளர்ந்த பிறகும் இதே நிலைமை நீடித்தது. "இது எங்கள் நாடு" என்று மலையாளிகள் எதிர்ப்பதற்கு வேண்டிய காரணம் ஒன்றுமே இல்லை. ஆனாலும் மத்திய அரசாங்கம் வாய்மூடி இருக்குமாறு தமிழர்க்கு அறிவுறுத்தியது. போலீஸ் தடியடி, துப்பாக்கிச் சுடுகை முதலியன நடந்தன. தமிழர் சிலர் உயிரும் போயிற்று. அப்போதும் தமிழ்நாட்டுக் கட்சிகள் சில அமைதி மேற்கொண்டன. பத்திரிகைகளும் வழக்கம் போல் இருந்தன. திருவாங்கூரில் துப்பாக்கிச் சுடுகைக்கு அனுமதி அளித்த அரசாங்கத்தை அதன் கட்சியே கண்டித்தது; இந்த அடாத செயலுக்காகப் பதவியை விட்டு விலக வேண்டும் என்று வட இந்தியாவில் அந்தக் கட்சியார் கிளர்ச்சியும் செய்தார்கள்; ஆனால் உயிர்ப்பலி தந்த தமிழர்கள் மட்டும் ஒரு கிளர்ச்சிக்கும் வழியின்றி அமைதியாக இருந்தார்கள். நொண்டிமாடு என்பதை விளக்குவதற்கு இதுவும் ஒரு சான்று ஆகும்.

தமிழ் நாட்டோடு இணைக்கப்படாமல் குறையாக உள்ள சித்தூர் மாவட்டத்தின் சில பகுதிகளும் மேற்குறித்த நாஞ்சில் நாடும் இணைக்கப்படுவதால் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு தீங்கும் இல்லை. அதற்கு

மாருகத் தமிழருடைய அன்பையும் ஆதரவையும் வளர்த்துக்கொள்வதற்கு அது வழி ஆகும். தமிழர் பலர் இந்த மாறுதல் ஏற்பட வேண்டும் என்று உள்ளத்தில் விரும்புகிருர்கள். ஆனுல் வெளியே சொல்வதற்குத் தயங்குகிருர்கள். மத்திய அரசாங்கத்திடம் ஏதோ ஒரு பயம் இருந்துவருகிறது. மக்களாட்சி என்ருல் இப்படி ஒருவரிடமோ ஒரு சிலரிடமோ பயம் இருக்கக் கூடாது. சர்வாதிகாரத்தில்தான் இப்படி நியாயமான கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதற்குப் பயப்படுவது வழக்கம். ஆனுல் மக்களாட்சியில் இப்படிப் பயம் இருந்துவருவதால்தான் நொண்டி மாட்டு நிலை காணப்படுகிறது.

ஆந்திரர்க்கு இவ்வகையான பயம் இல்லை. ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆந்திர மாகாணத்திற்கு இன்னது இன்னது செய்யப்பட வேண்டும்; இன்ன இன்ன குறை உள்ளன என்று ஆந்திர மாகாணத்தில் பொறுப்பில் உள்ளவர்கள் பேசுகிருர்கள். எதிர்க் கட்சியார் பேசுவது ஒருபுறம் இருக்கட்டும்; ஆந்திர மாகாணத்து அமைச்சர்கள் பேசுகிருர்கள். அவர்களின் குரல் ஒன்றுபட்ட பலம் உடையதாக இருப்பதால் மத்திய அரசங்கத்தின் கருவியாகிய வானெலியும் அவர்களின் பேச்சின் கருத்தை எடுத்துரைக்கின்றது: எல்லா மாகாணங்களும் கேட்கும்படியாக ஆங்கில வானெலிப் பகுதியில் எடுத்துரைக்கின்றது. ஒற்றுமையுடையவர்களின் பலமான குரல் ஆகையால், அதைப் புறக்கணிக்க முடிவதில்லை. தமிழ் நாட்டில் இத்தகைய குரல் எழுவதில்லை; பத்திரிகைகள் இவ்வாறு தொண்டு செய்வதும் இல்லை. "காக்கை வெள்ளையா? ஆமாம் மத்திய அரசே! காக்கை அப்பட்ட வெள்ளைதான்" என்று பின்பாட்டுப் பாடி விளம்பரம் செய்யும் பத்திரிகைகளே தமிழ் நாட்டில்

செல்வாக்கோடு உள்ளன. காரணம் தமிழ்நாடு நொண்டி மாட்டு நிலையில் உள்ளதே ஆகும்.

தமிழ் நாட்டில் இரண்டு மூன்று மாவட்டங்கள் தவிர, மற்றவை நீர்வளம் அற்றவை; மூளைவளமும் கலைவளமும் வாய்வளமும் தவிர மற்ற வளங்கள் பொதுவாகவே குறைவு. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அளவுகடந்து பெருகிவருகிறது. இந்த நிலையில் ஐந்தாண்டுத் திட்டங்களில் கொஞ்சம் கூடுதலான பங்கு கேட்க உரிமை இருக்கிறது என்பதைத் தமிழ்நாடு உணரவில்லை. வடநாட்டில் இந்தத் திட்டங்களின் பயனாக, வேலையில்லாத் திண்டாட்டம் பெரும்பாலும் ஒழிந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டு நிலை நேர்மாறாக உள்ளது. இதை எடுத்துப் பேசுவதும் குறைவு; நியாயமான வேண்டுகோள் விடுப்பதும் குறைவு. எப்படியோ மாடு மந்தையில் இருக்கிறது! மேய்கிறதா இல்லையா என்று யாரும் கவலைப்படவில்லை.

வியாபாரிகள் தங்களுக்குள் பலவாறு பேசிக் கொள்கிறார்கள். வடநாட்டார் இட்டதுதான் சட்டம்; தமிழ்நாட்டு வியாபாரம் புறக்கணிக்கப்படுகிறது என்று அவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

அந்தந்த மாகாணத்தார் மாகாணப் பற்றோடு தொழில் முதலிய நலன்களைப் பெற்று வாழ்கிறார்கள் என்றும், தமிழ் நாட்டார் தம் போலிப் பெருந்தன்மையால் கோட்டைவிடுகிறார்கள் என்றும் பட்டதாரிகள் பேசிக்கொள்கிறார்கள். சிபாரிசும் செல்வாக்கும் வேண்டியவாறு செய்கின்றன என்றும், திறமையும் தகுதியும் அவ்வளவாக மதிக்கப்படுவதில்லை என்றும் பேசிக்கொள்கிறார்கள்.

எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் மாகாண அரசாங்கம் செய்யக் கூடியது இல்லை என்றும், மத்திய அரசாங்கத்தின் விருப்பமே நிறைவேறக் கூடியது என்றும், மாகாண அரசாங்கம் உரிமை குறைந்த நகர மன்றம் (முனிசிபாலிடி) போல் ஆய்விட்டது என்றும் மக்கள் பேசிக்கொண்டு வருகிறார்கள். மாகாணப் பற்றும் மொழிப்பற்றும் இல்லாமல் மத்திய அரசாங் கத்தைக் காக்கை பிடிக்க வல்லவர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் (தேர்தலில் தோற்றாலும்) கிடைப் பதைப் பற்றி மக்கள் பேசிவருகிறார்கள். அதனால் அறிவாளிகளின் அறிவு தம் மாகாணத்திற்குத் துரோ கம் செய்தாவது மத்திய அரசாங்கத்தைக் காக்கை பிடிப்பதில் முனைந்து வருவதாயும் பேசுகிறார்கள். மத்திய அரசாங்கத்தைக் காக்கை பிடிக்கும் பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், கலைக் கழகங்கள், மற்ற நிலையங்கள் இவற்றிற்கு மானியம் கிடைப்பதையும் காண்கிறார்கள். மற்றவைகள் மொழிப்பற்றுடன் மாகாணப்பற்றுடன் கிடந்து வாடுவதையும் காண் கிறார்கள்.

நிலைமை இது; இதை மாற்றுவது, திருத்த முயல் வது கடமையாக உள்ளது; உண்மையான குறைகள் இருந்தால் அவற்றைப் போக்கவேண்டும். பொய்யான பேச்சுக்களாக இருந்தால் புள்ளிவிவரங்கள் எல்லா வற்றிற்கும் தந்து பொய் பொய்யெனக் காட்டி, மக்க ளுக்கு அறிவூட்டுவது நல்லது. இவ்வாறு செய்யாமல் குறைகளைப் போக்காமல் நொண்டி மாடாகவே நாட்டை விட்டிருந்தால் நல்லெண்ணம் குறையும். படை வல்லமையைக் காப்பதைவிட மக்களின் நல் லெண்ணத்தைக் காப்பதே முதல் கடமை; மக்க ளாட்சிக்கு அதுவே இன்றியமையாத கடமை; காக்கைபிடிக்கும் மாந்தரையும் பின்பாட்டுப் பாடும்

பத்திரிகைகளையும் நம்பாமல் போற்றுமல் ஒதுக்க வேண்டும்; அவர்களிடமிருந்து நாட்டைக் காக்க வேண்டும்; நாட்டு மக்களின் உரிமையையே பெரிதாகப் போற்றி அனைவர்க்கும் ஒத்த முன்னேற்றம் அளித்தல் வேண்டும். தமிழ்நாடு வாழ, இந்தியா வாழ, உலகம் வாழ அதுவே வழியாகும்.

## 19. விதியிடம் முறையிடல்

பாரதம் என்றும் பாரத சமுதாயம் என்றும் பெருமைகொண்டு பாடிய பாரதியார் தமிழ்நாடு என்றும் தமிழர் என்றும் உணர்ச்சிப் பெருக்கோடு முழங்கியிருக்கிறார். இது இயற்கையான கடமை யுணர்ச்சி போன்ற ஒரு நல்ல பற்றுதலே ஆகும். மனிதன் ஒவ்வொருவனும் தன்னை உலகத்தோடு இணைத்துப் பரந்த உலகக் குடும்பத்தில் ஒருவன் என்று எண்ணிப்பார்ப்பது போலவே, தான் வாழும் கண்டத்துடன் பொருத்தி, ஆசியக் கண்டத்தான் என்றும் ஐரோப்பியன் என்றும் எண்ணுவதும் இயற்கையே. அவ்வாறே இந்தியன் என்று ஒரு சமயம் எண்ணி, வங்காளி என்று மற்றொரு சமயம் எண்ணிப் பெருமை பெற வங்காளிக்கு உரிமை உண்டு. மராத்தியரும் குஜராத்தியரும் ஆந்திரரும் மலையாளத்தாரும் இவ்வாறு தம் தம் நாட்டையும் மொழியையும் எண்ணித் தம்மை அவற்றோடு இணைத்துப் பெருமைப்படுகிறார்கள். ஆனால் தமிழர்களில் பலர்க்கு இந்தப் பெருமையே சிறுமையாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் அரசியல் துறையிலும்

கல்வித் துறையிலும் வாணிபத் துறையிலும் தலைமை பெற்றுள்ள சிலர் இன்னும் தமிழ்நாடு தமிழர் என்ற எண்ணங்களுக்கு இடம் தராமல், அதைக் குறுகிய நோக்கம் என்று கருதுகின்றனர். இதன் விளைவாகத் தமிழ் நாட்டு மக்களுக்குள் ஒற்றுமை குறைகிறது; ஒன்றுபட்டுப் பாடுபடும் தன்மை குறைகிறது. இந்தக் குறையைத் தீர்க்க நேர்மையான – நேரான – முயற்சி இல்லாமையால், கோணல்வளர்ச்சி தலையெடுக்கின்றது. நாளடைவில் தீமை பலவற்றிற்கு இவர்களே காரணமாக நிற்கின்றனர். சூரிய ஒளியை நாடி நேரே வளரும் செடியைத் தடுத்து நிழலால் மறைத்தால், அது வளைந்து சாய்ந்து வேறு வகையான வளர்ச்சி பெற்று, இவர்களே மருளக் கூடிய வகையில் ஒரு நாள் தோற்றம் கொள்ளும். இயற்கையான எண்ணங்களின் போக்கைத் தடுப்பதால் வரும் தீங்கை இவர்கள் உணராமையால், நாளைய வாழ்வுக்குக் கேடு செய்கின்றனர்.

மனிதன் விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக, போக்குவரத்துக் கருவிகளும் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்களும் பல மடங்கு பெற்றுவிட்டான். ஆகையால் சாதி, மதம், நிறம், தொழில், வகுப்பு முதலிய பலவகை வேறுபாடுகளையும் கடந்து மனிதன் வளர முடியும். மனிதனின் இரத்தத்தில் சாதி முதலிய வேறுபாடுகள் இல்லை. மனித மூளையிலும் அவை ஆழ்ந்து நிற்காதவை; எளிதில் மாறக் கூடியவை. சாதி மதம் முதலிய வேறுபாடுகள் படிப்படியாகச் செல்வாக்கு இழந்து, மனிதரை ஒன்றுபடுத்த முடியும். ஆனால் விஞ்ஞானம் எவ்வளவு வேகமாக வளர்ந்து முன்னேறிய போதிலும், எளிதில் மறக்க முடியாத வேறுபாடு ஒன்று உள்ளது. அதுதான் தம் தம் தாய் மொழியால் வரும் வேறுபாடு. தாய்மொழி

மனித மூளையோடு தொடர்புபட்டது; எண்ணங்களுக்கே வடிவு தருவது; எளிதில் மாருதது. அது காரணமாகவே வங்காளி, குஜராத்தி, மராத்தி, ஆந்திரர், மலையாளிகள் என்று மக்கள் தம்மைப் பற்றி எண்ணும் பழக்கம் வேரூன்றியுள்ளது. தமிழரும் நெடுங்காலமாக மற்ற எல்லா மொழியார்க்கும் முன்னிருந்தே இவ்வாறு தமிழர் என்றும் தமிழ்நாடு என்றும் எண்ணி எண்ணிப் பழகிவிட்டனர். இதைத் தடுக்கவோ மறைக்கவோ முயன்றால், நாட்டில் நல்ல வளர்ச்சி காண முடியாது. தடுத்தால் தீமையும் அழிவு வேலைகளும் பெருகி, பரந்த நோக்கம் என்று பேசுகிறவர்களுக்கே இடம் இல்லாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

ஊர்க்குப் பொதுவாகப் பாடுபட வேண்டியது ஊர்த் தலைவர்க்குக் கடமை. ஆனல் அவரும் ஒரு குறிப்பிட்ட தெருவில் வாழ்கிறவரே. அந்தத் தெருவின் நன்மையை அவர் புறக்கணிக்கக் கூடாது. நான் இன்ன தெருவைச் சார்ந்தவன் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படல் கூடாது. தெருவைப் புறக்கணிக்கும் மனம் அவர்க்கு ஏற்பட்டால், நாளடைவில் அந்தத் தெரு அவரைப் புறக்கணித்துவிடும். அந்தத் தெருவும் ஒழுங்கான வளர்ச்சியும் முன்னேற்றமும் பெருமல் ஊருக்கே இடையூருகிவிடும்.

இந்தியா ஓர் ஊர்; தமிழ்நாடு ஒரு தெரு; பழம் பெருமை வாய்ந்த பண்பட்ட தெரு. தமிழ்நாட்டுத் தலைவர்கள் இந்த உண்மையை மறந்து, தமிழர் என்று சொல்லத் தயங்கும் போக்கு நீடிக்குமானல், இந்தியாவின் முற்போக்கிற்கு இடையூருகத் தமிழ்நாடு மாறும். உலக வரலாற்றை ஆராய்ந்தால் இது இயற்கை என்பது தெரிந்துவிடும்.

இவற்றை எல்லாம் இயல்பாக உணர்ந்தவர்களே பெரும் புலவர்கள். பாரதியார் தெளிவாக வாழ்க்

மையின் உண்மைகளையும் நாட்டின் எதிர்காலத்தை யும் உணர்ந்தவர். அதனுல்தான் பாரதநாடு, பாரத சமுதாயம் என்று முழக்கிய குரலாலேயே தமிழ் நாடு, தமிழர் என்றெல்லாம் கடமையுணர்ச்சியோடு பெருமை கொண்டுள்ளார்.

சிதைந்த பாடற் பகுதியாகிய 'இரு தலைக் கொள்ளியினிடையே' என்பதில், விதியை நோக்கி முறையிடுகிருர் பாரதியார். பழமையைப் போற்றிப் புதுமையை மறுக்கும் ஒரு கூட்டமும் புதுமையையே ஏற்றுப் பழமையில் நல்லவற்றையும் ஒதுக்கும் மற் ருெரு கூட்டமுமாக இரண்டு கண் மூடிக் கூட்டங் களுக்கு இடையே தமிழ்ச் சாதி சிக்குண்டு வருந்துவ தாக விதியை நோக்கி முறையிடுகிருர். அந்த இரு வகைப் போக்கும் பாரதியாரின் காலத்தில் இருந்த வாறே இன்று இல்லை. இந்த முப்பத்தைந்து ஆண்டு களில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. ஆயினும், பாரதியாரின் முறையீடு இன்றைக்கும் பொருந்துவதாக உள்ளது.

*விதியே விதியே தமிழச் சாதியை*
*என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ!*

என்பதை இன்று பல்லவிபோல் பாடிக் கொண்டிருக்க லாம் போல் தோன்றுகிறது. மற்ற மாகாணங்கள் தம் தம் மொழியையும் கலையையும் எவ்வளவோ வளர்த்து ஒன்றுபடும் இக்காலத்திலும், தமிழர்கள் ஒற்றுமை குலைந்து பிளந்தும் பிரிந்தும் கடமையை மறந்து காலம் கழித்தலை உணர்ந்தால், தமிழரின் எதிர்காலம் என்ன என்று வருந்த நேர்கிறது.

தமிழில் உள்ள சில நூல்களின் பெருமையையும் தமிழர்க்கு உள்ள சில சிறந்த பண்புகளையும் எண்

ணும்போது, தமிழினம் அழியாத நல்வாழ்வு உடையது என்னும் நம்பிக்கை ஏற்படுகிறது.

சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லையொன் றின்மை எனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழச்
சாதியை அமரத் தன்மை வாய்ந்ததுஎன்று
உறுதிகொண் டிருந்தேன் ; ஒருபதி னாயிரம்
சலிவாய்ப் பட்டுந் தமிழச் சாதிதான்
உள்ளுடை வின்றி உழைத்திடு நெறிகளைக்
கண்டுஎன துள்ளம் கலங்கிடா திருந்தேன்

என்கிறார் பாரதியார். தமிழினம் அங்கங்கே வெளிநாடுகளில் படும் பலவகைத் தொல்லைகளையும் இன்னல்களையும் நினைத்துப் பாரதியார் பதைத்துக் கூறும் சொற்களும் இன்றைய நிலைக்கு ஏறக்குறையப் பொருத்தமாகவே உள்ளன.

ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை அடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவியிவ் வெளியே
தமிழச் சாதி தடியுதை உண்டும்
வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறுது
செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினால் சாதலும்
இஃதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன் ;

*தெய்வம் மறவார் செயுங்கடன் பிழையார்*
*ஏதுதாம் செயினும் ஏதுதான் வருந்தினும்*
*இறுதியில் பெருமையும் இன்பமும் பெறுவார்*
*என்பதுஎன் உளத்து வேரகழ்ந் திருத்தலால்.*

இவ்வாறு வெளிநாடுகளிலும் தொல்லைப் பட்டுச் செத்து மடிந்தாலும், நல்ல நெறியில் நடக்கும் மக்களாக இருத்தலால் தமிழர்க்கு இறுதியில் வெற்றி கிடைக்கும் எனப் பாரதியார் நம்பினர். ஆயினும் அந்த நம்பிக்கை தளர்ந்தது என்பதை உள்நாட்டில் தமிழர்க்கு இடையே உள்ள பிளவை எண்ணும் போது உணர்ந்து வருந்தலானர்; கலங்கினர்.

எனினும்,

*இப்பெருங் கொள்கை இதய மேற்கொண்டு*
*கலங்கிடா திருந்த எனைக்கலக் குறுத்தும்*
*செய்தி ஒன்று*

என்று உள்ளம் நொந்து பெருமூச்சு விட்டுக் கூறலானர். பாட்டை முடிக்கும் நிலையில் மீண்டும் விதியை நோக்கி முறையிடுகிறர் :

*...நம்மவர் எப்படி உய்வர் ?*
*விதியே விதியே தமிழச் சாதியை*
*என்செயக் கருதி இருக்கின் றயடா !*

உயர்ந்த புலவர்கள், கற்பனை யுலகத்தை மட்டும் போற்றித் தாம் வாழும் நாட்டையும் அந்நாட்டு மக்களையும் மறப்பதில்லை; சுற்றுப்புறத்தையே பெரிதாகக் கருதி, நிலையான உண்மைகளை உணர்த்தும் கற்பனைகளையும் மறப்பதில்லை. கலைச் சுவையையும் உண்மை வாழ்க்கையையும் ஒரு சேரப் போற்றிப் பாடும் ஆற்றலை உயர்ந்த கவிஞரிடத்தில் காணலாம்.

நாட்டு விடுதலையில் பங்கு கொண்டு தொண்டாற்றிய பாரதியார் குயில்பாட்டைப் பாடும்போது கற்பனை யுலகத்தைப் போற்றி விளங்குகிறார். ஞான ரதம் போன்ற கற்பனையில் திளைத்த அவருடைய உள்ளமே, இவ்வாறு தமிழச் சாதியை நினைந்து வருந்திக் கலங்கிப் பெருமூச்சு விடுதலையும், அதற்காக விதியிடம் நொந்து முறையிடுதலையும் காண்கிறோம்.

## 20. உட்பகை

இந்தியா பல ஆண்டுகளாகப் போராடிப் போராடி விடுதலை பெற்றுவிட்டது. அந்த விடுதலைப் போரில் பல மாகாணங்களும் முனைந்து கலந்து தொண்டாற்றின. ஆகையால், பெற்ற விடுதலையைக் குறித்து மகிழ்ச்சி அடைவதிலும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் பங்கு உண்டு.

இந்தியாவின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்றதற்குப் பல காரணங்கள் உண்டு. பெரும்பாலான மக்களின் ஆர்வம், சிறந்த தலைவர்களின் ஆற்றல், உண்மைத் தொண்டர்களின் தியாகம் ஆகிய இவைகள் சிறந்த காரணங்களாகும். இந்தத் தியாகம் ஆற்றல் ஆர்வம் இவைகளுக்கு அடிக்கடி இடையூறுகளும் இருந்துவந்தன. இடையூறுகளை முறியடித்து வெற்றிபெற்று முடிந்துவிட்டது.

வெற்றியின் பயனாக இந்தியா ஒரு பெரிய கண்டமாக நின்றது; இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு பெரும் பிரிவுகள் ஏற்பட்டன. ஒவ்வொரு மாகாணமும் புதுவகையில் பிரிக்கப்பட்டு நாடு (State) என்று வழங்கப்பெறும் தகுதியும் நெருங்கி வருகின்றது.

விடுதலைப் போரில் தமிழ்நாடு தன் கடமையை ஆற்றியது ; வெற்றி மகிழ்ச்சியிலும் கலந்து மகிழ்ந்தது ; அடுத்த நிலையில் மொழியின் அடிப்படை கொண்டு வகுக்கப்பட்டு, 'தமிழ் நாடு' 'தமிழகம்' என்னும் பழம் பெயர் பெற்று நிலவும் பெருமையும் பெற நிற்கின்றது.

விடுதலைப் போர் நடந்த காலத்தில் உட்பகை தலையெடுத்து வாழ்வதற்கு இடமில்லை. காரணம் என்ன? விடுதலையை—உரிமை வாழ்க்கையை—எதிர்ப்பவர்கள் மக்கள்கூட்டத்திற்கே பகைவர்கள் அல்லவா? விடுதலை உணர்ச்சி மக்களின் பிறப்பியல்பு. செயற்கையாக விடுதலைக்கு ஒருவகை எதிர்ப்பு எழுந்தாலும் அது மக்களால் ஒதுக்கப்படும்; ஒழிக்கப் படும். ஆகையால் உட்பகை தோன்றினாலும் செயலற்று ஒடுங்கிவிடும். அதனால்தான் உட்பகையை ஒருபக்கம் ஒதுக்கி ஒடுக்கி, விடுதலைப் போர் வெற்றியாக முடிந்தது.

வெற்றிமகிழ்ச்சி என்பது சிலநாள் நிற்பது. அதன்பின் கடமையைச் செய்ய முனைந்துவிட்டால், அந்த மகிழ்ச்சி மெல்ல மெல்ல மாறி அமைதியான ஆற்றலாக மாறிவிடும். ஆகவே, மகிழ்ச்சியும் ஆரவாரமும் நிலவும் சில நாட்களில் உட்பகைக்கு வேலை இல்லை. உட்பகை கிளப்ப யாராவது முயன்றாலும் தோல்வியுற நேரும்.

இனி வரும் எதிர்காலமே மூன்றுவது நிலை. அதுவே உரிமையை ஒவ்வொரு மாகாணமும் தக்க வழியில் பயன்படுத்திக்கொண்டு, கடமையைச் செய்து முன்னேறும் நிலையாகும். இங்கு உட்பகை தோன்றி வளர்ந்து ஓங்குவதற்கு இடம் உண்டு.

ஒரு தெரு தீப்பற்றி எரியும் காலத்தில் எல்லா வீட்டாரும் சேர்ந்து அணைக்க முயல்வார்கள். பக்கத்

துத் தெருவாரும் விரைந்து வந்து தீயணைக்கப் பாடு படுவார்கள். எரிகின்ற வீட்டிலே கொள்ளியைப் பிடுங்கும் கயவர்களும் இருப்பார்கள். ஆனால், அந்தக் கயவர்கள் தப்பி ஓடுவதும் அருமை அல்லவா? அந்த ஆபத்துக் காலத்தில் கயவர்களைக் கண்டவர்கள் எல்லாம் உதைத்து அடக்குவதும் இயற்கையே. ஆனால், தீ அணைக்கப்பட்டு ஒருவகையாக அமைதி ஏற்பட்ட பிறகு, அவரவர்கள் தங்கள் தங்கள் வீடு களில் நுழைந்து வாழத் தொடங்குவார்கள். அப் போதுதான் பழைய சிறுமைகள் தலைகாட்டும். எனக்கு, உனக்கு, எனது, உனது என்ற உரிமை யுணர்வு வரும். நான் சொல்வது சரி, நீ சொல்வது பிழை, நான்தான் வழி காட்டுவேன், நீ சொன்னபடி நட என்ற பேச்சும் எழும். தெருவெல்லாம் தீப்பற்றி எரியும்போது எனது உனது என்ற பேச்சுக்கு இடமே இல்லை. யாராவது அவ்வாறு பேசினால், அவர்கள் பித்தர்களாக இருப்பார்கள்; அல்லது பித்தர்களின் கூட்டத்தில் சேர்க்கப்படுவார்கள்.

உலகம் ஓர் ஊர் என்று கொள்ளப்பட்டால், அதில் இந்தியா ஒரு தெரு; தமிழ் நாடு ஒரு வீடு. இந்தியா முழுமையும் கொந்தளிப்புக் காணப்பட்ட போது, தமிழ்நாட்டார் தேசத் தொண்டு ஆற்றித் தியாகம் பல செய்து விடுதலைப் போரில் மூழ்கியிருந் தார்கள். அப்போதெல்லாம், தமிழ், தமிழ்நாடு, தமிழ்க் கலை, தமிழர் உரிமை என்ற பேச்சையும் முயற்சியையும் ஒருவாறு ஒதுக்கியும் வைத்திருந் தார்கள். நிலைமை மாறிவிட்டது. தமிழர் தம் வீட்டை—தமிழ் நாட்டைக்—காத்து ஆளும் நிலைமை வந்துவிட்டது. ஆகையால், இனிமேல் தமிழ், தமிழ் நாடு முதலிய உரிமைப் பேச்சுக்கு இடம் இருத் தல் வேண்டும்.

பல நூற்றுண்டுகளாக வடநாடு வெளிப் பகையால்,படையெடுப்புக்களால் சீரழிந்து நைந்துவந்தது; தமிழ்நாடோ உட்பகையால், பல்வகைப் பிளவால் சீர்குன்றிக் கெட்டுவந்தது. உரிமை பெற்றேம் என்று மகிழ்ந்து காலம் போக்காமல் தற்காப்புத் தேடிக்கொள்ள வேண்டுமானல், எதிர்காலத்திலும் வடநாடு வெளிப் பகைக்கும் படையெடுப்புக்களுக்கும் இடந்தராமல் காத்துக்கொள்ள வேண்டும் ; தமிழ்நாடோ உட்பகைக்கும் பிளவுகளுக்கும் இடந்தராமல் காத்துக்கொள்ள வேண்டும்.

வடநாட்டைவிடத் தமிழ்நாடுதான் மிகப் பொறுப்பாகக் காவல் மேற்கொள்ள வேண்டும். ஏன் எனில், வெளிப்பகை உணர்வதற்கு எளியது ; உட்பகை எங்கே என்று காண்பதே அரிது. உட்பகை உடையவர் நம்மவர்போல் இருந்தே நம்மை அழிப்பவர். ஆகையால், உட்பகை கொண்டார் இன்னர் என்று பிரித்துணர்வது அருமையாகும்.

ஆயினும், ஒரு வழி உள்ளது. இனி உட்பகையானவர் இன்னர் என்று தெரிந்துகொள்ள முடியும். ஆட்சி, இங்குத் தமிழ் மொழி வாயிலாக நடைபெற வேண்டியது : தமிழர் ஆக்கத்துக்காக நடைபெற வேண்டியது. ஆகவே, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தமிழர் ஆக்கத்திற்கும் எந்தக் காரணத்தால் எவர் தடை செய்தாலும் அவரைப் பகைவர் என்றே ஒதுக்கிட வேண்டும். உலக ஒற்றுமை, நாட்டு முன்னேற்றம் முதலிய இனிய காரணங்களைப் பேசினலும், அவர்களை உட்பகை என்றே தெளிய வேண்டும்; ஆராய்ச்சியின் பெயரால், அல்லது அருங் கலையின் பெயரால் தமிழர் ஆக்கத்திற்குத் தீமையாக ஒரு சிறு எழுத்தே எழுதினும் அவர்களை உட்பகை என்றே தெளிய வேண்டும். பேச்சும் எழுத்தும் இல்லாமல்

செயலளவில் இடையூறு செய்யக் காலம் பார்த்து அடங்கியிருக்கும் உட்பகையைத் தேர்ந்தறிவது தான் முடியாதது போல் தோன்றும். அதைப் பற்றிக் கவலை இல்லை. தமிழர் ஒன்றுபட்டுச் செயலாற்றினால், அதன் உட்பகையும் தானே புழுங்கிச் சாகும்.

# 21. நாட்டுக்கு நல்லவர்கள்

மக்கள் ஆட்சிக்கும் சர்வாதிகார ஆட்சிக்கும் பல வகை வேறுபாடுகள் உண்டு. அவற்றில் அடிப்படையானது ஒன்று. அது இது. மக்கள் ஆட்சியில் மக்களின் விருப்பம் ஆள்வோரை நாடிப் பாயும். சர்வாதிகார ஆட்சியில் ஆளும் தலைவனுடைய ஆணை மக்களை நோக்கிப் பாயும்.

ஒரு நாட்டில் நடக்கும் ஆட்சி எத்தன்மையானது என்பது அந்த ஆட்சிக்கு அமைந்த பெயராலோ கொடியாலோ விளங்காது. ஆட்சி நடைபெறும் முறையில் தான் விளங்க வேண்டும். மக்களின் விருப்பம் மேலோங்கி இருந்தால் அதை மக்களாட்சி அல்லது குடியரசு என்று சொல்ல வேண்டும். ஆள்வோரின் ஆணை மேலோங்கியிருந்தால் அதைச் சர்வாதிகார ஆட்சி என்று சொல்ல வேண்டும்.

ஆங்கில ஆட்சியிலிருந்து இந்திய நாடு விடுதலை பெறவேண்டுமென்று பாடுபட்டு உரிமை வாழ்வை வாங்கி அளித்த காந்தியடிகள் இதைப் பற்றி மிகத் தெளிவான கருத்து உடையவர். விடுதலை பெற்ற இந்தியா நல்ல குடியரசாக—பண்பட்ட மக்களாட்சி

யாக—விளங்க வேண்டும் என்று விழைந்தார் அவர். மக்களாட்சியில் தவறுகளும் நேரும் என்பதையும் அறிந்தவர் அவர். தவறுகள் செய்தாவது திருந்தி வாழ உரிமை உண்டு என்றும், மனித சமுதாயம் எப்படியும் திருந்தி வாழும் என்றும் அவர் நம்பினார். திருந்தி வாழக்கூடிய நல்ல பண்பு மனித சமுதாயத்திற்கு உள்ளது என்பதில் நம்பிக்கை கொண்டவர் அவர். ஆகையால்தான் தவறு செய்யாமல் அடக்கி ஆள வேண்டும் என்ற போக்கை வெறுத்து, தவறு செய்தாலும் திருந்தி வாழ உரிமை வேண்டும் என்ற நெறியை வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் கடைப்பிடித்தார்.

உணவுப் பொருள் வகையில் பங்கீடும் கட்டுப்பாடும் இருந்த காலம் அது. அதிகாரிகளின் கையில் எல்லாப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நெருக்கடியான காலத்தில் பங்கீட்டுமுறை மக்களுக்கு நன்மையாகவே இருந்தது. நெருக்கடி தீர்ந்தபிறகு மக்கள் பங்கீட்டை விரும்பவில்லை. அதிகாரிகளோ, இன்னும் சில ஆண்டுகள் கட்டுப்பாடும் பங்கீடும் நீடிக்க வேண்டும் என்று கூறினர். கட்டுப்படுத்தலை உடனே நீக்கிவிட்டால் பல தவறுகள் நேரும் என்று தாம் அஞ்சுவதாக அதிகாரிகள் கூறினர். மக்களோ பங்கீடு போக வேண்டும் என்றும், அரிசி கோதுமை போன்ற உணவுப் பொருள்களை எல்லாக் கடைகளிலும் வாங்கும் நிலைமை முன்போல் வரவேண்டும் என்றும் விரும்பினார்கள். காந்தியடிகள் மக்களின் விருப்பத்தை அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார். கட்டுப்படுத்தலும் பங்கீடும் உடனே நீக்கப்படுமானால் நாடெங்கும் குழப்பம் விளையும் என்று அதிகாரிகள் அச்சுறுத்தினார்கள். காந்தியடிகள் தயங்கவில்லை. முதலில் ஏதாவது குழப்பம் நேர்ந்தாலும் கவலை

இல்லை; அதை வரவேற்பதுதான் கடமை; ஆகவே பங்கீட்டை உடனே எடுத்து விடுதல் வேண்டும் என்ருர். அப்போதும் அதிகாரிகள் தயங்கினுர்கள். முடிவில் மக்களின் விருப்பம் நிறைவேறியது.

இது ஓர் எடுத்துக்காட்டு. மக்களாட்சியில் அவருக்கு இருந்த விருப்பத்தையும் ஆர்வத்தையும் விளக்க இதுபோன்ற சான்றுகள் பல உண்டு. மொழி வாரி மாகாணங்கள் அமைய வேண்டும் என்று அவர் பல ஆண்டுகளாக வலியுறுத்திவந்ததும் இதை விளக்குவதே ஆகும்.

மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள வேண்டுமானுல் அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தாய்மொழியில் உணர்த்தும் வாய்ப்பு இருக்க வேண்டும். அவர்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் அந்தத் தாய் மொழியை அறிந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் கூடிச் சட்டம்செய்யும் சட்டசபை அந்த மாகாண மொழியில் நடைபெற வேண்டும். அந்தச் சட்டங்களை நிறைவேற்றி ஆட்சி நடத்தும் அமைச்சர்கள் அந்த மாகாண மொழியிலேயே ஆட்சி நடத்த வேண்டும். ஆகவே அமைச்சர்களின் செயலகம் (செக்ரடரியேட்) முதல் கிராம சபை வரையில் எல்லா அலுவலகங்களும் மாகாண மொழியிலேயே ஆட்சி நடத்த வேண்டும். அப்பொழுதுதான் அது மக்களாட்சியாக இருக்க முடியும். இதை உணர்ந்துதான் காந்தியடிகள் மொழியின் அடிப்படையில் மாகாணங்கள் பிரிவதற்கு ஏற்பாடு அமைத்தார்.

ஆனுல், அவர்காலத்திற்குப் பிறகு இந்திய அரசியலில் இப்படிப்பட்ட நம்பிக்கையும் தெளிவும் குறைந்துபோயின. வேறு துறைகளில் வளர்ச்சிகள் பல இருந்தபோதிலும் இந்தத் துறையில் பிற்போக்கே

நேர்ந்தது. மக்கள் ஆட்சி பற்றிய கருத்துக்களை விட இந்தியாவின் ஒன்றுபட்ட தன்மை பற்றிய கருத்துக்கள் மிகுந்துவிட்டன. நாளடைவில் இந்தியாவின் ஒருமைப்பாடு என்பதற்காக எதையும்—எந்தப் பழைய கொள்கையையும்—புறக்கணித்துச் செல்லும் போக்கு நேர்ந்தது. அதனால் மொழிவாரி மாகாணம் என்ற பேச்சைப் பேசுவோர் இந்திய அரசாங்கத்திற்குப் பகைவர்போல் கருதப்பட்டனர்.

இந்தியாவின் ஒருமைப்பாடு நல்ல அடிப்படையோடு அமைய வேண்டுமானால், அது மக்களின் விருப்பத்தை ஒட்டி அமைந்தால்தான் முடியும். நூற்றுண்டுக் கணக்காக நிலைபெறவேண்டும் என்ற ஆசையோடு உயரமான கல்கட்டிடம் எழுப்பலாம். ஆனால், அதன் உயரத்தைமட்டும் கருதி நல்ல அடிப்படை அமைத்தலை மறத்தல் கூடாது. அதுபோலவே இந்தியாவின் புகழ் வெளிநாடுகளில் வானளாவ உயர்ந்தால் மட்டும் போதாது. இந்திய மக்களின் மனம் விரும்பும் வகையில் உள்நாட்டு ஆட்சியும் நடைபெற வேண்டும். அது மக்களின் மனம்கலந்த ஆட்சியாக இருக்கும் பொருட்டு அவர்களின் மொழிவழி ஆட்சியாக இருக்க வேண்டும். ஆனால் இந்திய நாடோ ஒருமொழி பேசும் மக்களை உடையது அல்ல. பல மொழியார் வாழும் நாடு இது. ஆகவே இதை ஒரு குடும்பம் என்று சொல்வதை விட பல குடும்பங்களின் தொகுதி என்று சொல்ல வேண்டும். ஆகையால் இந்திய நாட்டை மொழி வழியாகப் பிரிக்கும் மாகாண அமைப்புக்கு இடம் தருவதே முதல் கடமையாகும். இதைப் புறக்கணிக்கவோ தடை செய்யவோ முயல்வது நல்லது அல்ல.

இதை உணராமல் இப்போது அங்கங்கே ஏற்படும் குழப்பங்களைப் பார்த்தபின் அவற்றின் காரணங்களை ஆராயாமல் பொறுப்புள்ள சிலர் மொழி

வழிப் பிரிவினையையே ஒரு குற்றம் போலவும், கேடு போலவும் பழித்துவருகின்றார்கள். அவர்களை இந்த நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி நல்ல எண்ணம் இல்லாதவர்கள் என்று சொல்லவேண்டும். ஏன்? மக்களின் மொழிவழி ஆட்சியால்தான் அவர்களின் விருப்பம் ஆள்வோரைப் பிணிக்க வல்லதாக இருக்க முடியும். மொழிவழி அமைப்பு இல்லையானால் மக்களுக்கும் ஆள்வோருக்கும் தொடர்பு குறைந்து விருப்பம் நிறைவேறாமல் ஆணை நிறைவேறுவதாகும். இதுதான் மக்களாட்சி சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்லும் பாதை. இந்தப் பாதையில் தீங்கு விளையும் என்று சொல்வோரைக் குறுகிய நோக்கம் உடையவர்கள் என்று சிலர் பழிக்கின்றார்கள். நாட்டுக்கு நல்லவர்கள் யார்? பொதுநலம் நாடிக் கொள்கையைப் போற்றி மொழிவழி அமைப்பைப் போற்றுகின்றவர்களா? அல்லது, ஒன்றுபட்ட இந்தியா என்ற பெயரால் தன்னலத்தோடு பிறரைப் பழித்துப் பரந்த பேச்சு மட்டும் பேசுகின்றவர்களா? உண்மையாகப் பார்த்தால் மொழிவழி மாகாணங்களால்தான் நல்ல மக்களாட்சி நிலவ முடியும்; மக்களின் உள்ளங்களை ஒன்றுபடுத்திப் பிணைத்து அந்த ஒற்றுமையின் வாயிலாக அன்புநெறியில் இந்தியாவை ஒரு பெருநாடாகக் காக்க முடியும். இதை உணர வல்லவர்களே இந்த நாட்டுக்கு நல்லவர்கள்.